

# தமிழரசு









அக்டோபர் 1–16, 1998 ரூ.3







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


- இரண்டாண்டுகளில் கையெழுத்திடப்பட்ட 33 தொழிற்சாலைகளில் 11 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன ........ 2
- ஐந்தமிழ் அறிஞர் கலைஞர் ........ 4
- காந்தியடிகள் பிறந்தநாள் விழா ........ 9
- தியாகிகள் மணிமண்டபம் ........ 11
- 'திராவிட நாடு' கிழமை இதழ் ........ 14
- தீரன் சின்னமலை ........ 17
- பிற்படுத்தப்பட்டோர் நலம் காக்கப்படுகிறது ........ 18
- தன்மானச் சிங்கம் ........ 21
- மீனவர்கள் துயர் துடைப்பு ........ 22
- வெள்ளை நிறக்கொள்ளி ........ 23
- வேளாண்மை வளர்ச்சி ........ 24
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தி ........ 26
- எங்கள் ஊர் பிரச்சினை ........ 29
- காந்திய சிந்தனைகளும் கலைஞரின் முன்னேற்றத் திட்டங்களும் .... 33
- சமையல் எண்ணெயை மீண்டும் மீண்டும் காய்ச்சி பயன்படுத்தாதீர்கள் ...... 38
- காஞ்சிபுரத்தில் கைத்தறி மேம்பாடு ........ 39
- இலக்கியத்தில் மொழி மாற்றம் ........ 41
- குழந்தை மருத்துவமும் சிகிச்சையும் ........ 47


**தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்.**

*பகைவர், அயலோர், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.*

—**கலைஞரின்** *திருக்குறள் உரையிலிருந்து*


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

புரட்டாசி

அக்டோபர் 1–15, 1998

மலர்:30 இதழ்:7

விலை ரூ.3


**முதலாம் அட்டையில்...**

மேதகு ஆளுநர்,
மாண்புமிகு முதலமைச்சர் –
காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு
மாலை அணிவித்தல் மற்றும்
தியாகிகள் மணிமண்டபம் திறப்பு விழா

**கடைசிப்பக்க அட்டையில்...**

தீரன் சின்னமலை சிலை திறப்பு விழா

# இரண்டாண்டுகளில் கையெழுத்திடப்பட்ட
# 33 தொழிற்சாலைகளுக்கான ஒப்பந்தங்களில்
# ஹுண்டாய் உட்பட 11 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன

*ஹுண்டாய் கார் உற்பத்தியைத் தொடங்கிவைத்து முதலமைச்சர் **கலைஞர்** பெருமிதம்!*

"இன்று மிகுந்த மகிழ்ச்சியோடு நாமெல்லாம் வரவேற்றுப் பூரிக்கத்தக்க வகையில் இந்த ஹுண்டாய் கார் உற்பத்தித் தொழிற்சாலையின் தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான்காவது முறையாகக் கழக அரசு 96ஆம் ஆண்டில் அமைந்த பிறகு, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொழில் முதலீட்டாளர்களுடன் நட்புறவைப் பேணி, தகுந்த வெளிப்படையான அணுகுமுறையைக் கடைப்பிடித்து, இந்த அரசின் புதிய தொழிற்கொள்கை வகுக்கப்பட்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

விதமான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து இந்த அரசு தொழில்வளரத் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகச் சொல்ல வேண்டுமேயானால், அடிப்படை வசதிகளில் முக்கியமாகத் தேவைப்படுகின்ற மின்சார வசதிக்காக ஜெயங்கொண்டத்தில் நிலக்கரி தொழிற்சாலையுடன் ஒரு புதிய மின் திட்டமும், எண்ணூரில் எல்.என்.ஜி. என்னும் எரிவாயு அடிப்டையிலான புதிய மின் திட்டமும் அமைக்கப்பட ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டாண்டுகளில், தமிழகத்தில் 33 புதிய தொழில் களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த



அனைத்து அடிப்படை வசதிகளுடனும் கூடிய புதிய தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டு, தொழில் தொடங்குவதற்குத் தேவையான தொழில் மனைகள் (நிலங்கள்) தொழில் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அப்படி வழங்கப்பட்ட இடங்கள் இந்தப் பகுதியில் எவ்வளவு நேர்த்தியான முறையில் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் கண்ணாரக் காண்கிறீர்கள். பாழ்பட்டுக் கிடந்த, புல் பூண்டுகள் முளைத்துக் கிடந்த, கரடுமுரடாக விளங்கிய இந்த நிலங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி, செம்மைப்படுத்தி இதுபோன்ற பெரும் தொழிற்சாலைகள் உருவாவதற்கேற்ற வகையில் எல்லா


33 தொழிற்சாலைகளில் பத்து தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்று 11வது தொழிற்சாலையாக இந்த ஹுண்டாய் தொழிற்சாலை திறக்கப்படுகிறது.

ஏறத்தாழ 35 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு தொழில்களில் அந்நிய நாடுகளால் தமிழகத்தில் முதலீடுகள் செய்யப்படுகின்றன. பெருகிவரும் பல்வேறு புதிய தொழிற்சாலைகளின் காரணமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசின் இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 95ஆம் ஆண்டில் இந்தியாவில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மூன்றாவது இடத்தை அடைந்துள்ளதாக பி.டி.கேலப் 97 டிசம்பரில் வெளியிட்ட முதுநிலை வணிக நிர்வாக ஆய்வறிக்கையிலே குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் அளவு 17.6 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

97ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வெள்ளிக்கிழமை ஏறத்தாழ 98 ஜனவரி என்று எடுத்துக் கொள்ளலாம். அந்தக் கால கட்டத்தின் நிலவரப்படி அனைத்து வர்த்தக வங்கிகளின் ஒட்டுமொத்த அனைத்திந்திய சராசரி கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவிகிதம் என்றால் தமிழகத்தின் அப்போதைய விகிதாச்சாரம் 92.3 சதவிகிதமாக உள்ளது என்று கூறி கடன் – வைப்புத் தொகை நிலவரத்தில் தமிழகம் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு 6.7.98 அன்று எழுதியிருக்கின்றது.

மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகை நிருபர், 10.4.97 தேதியிட்ட 'பைனான்சியல் டைம்ஸ்' பத்திரிகையில் தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை மிக உயர்ந்த ரிசல்ட்டைத் தருகின்ற அளவிற்கு மற்ற மாநிலங்களோடு போட்டியிடுகின்ற அளவிற்கு வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டிருந்தார்.




மேலும் அவர், "Within three years new production lines near Madras will roll out, 2,40,000 a year" – என்று அதாவது 2,40,000 கார்களை ஆண்டு ஒன்றுக்குத் தரக்கூடிய அளவிற்கு அது வளருமென்றும் எழுதினார்.

அதன்படி கடந்த 4.9.98 அன்று மிட்சுபிஷி நிறுவனம் இந்துஸ்தான் மோட்டார் நிறுவனத்துடன் இணைந்து நிறுவியுள்ள லேன்சர் கார் தொழிற்சாலை திறக்கப்பட்டு –14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட முதல் கார் அன்றைக்கு விற்பனைக்கு வந்தது. இந்தத் தொழிற்சாலை 300 கோடி ரூபாய் முதலீட்டிலே அமைக்கப்பட்டது.

அதன்பின் இரண்டாவது கார் தொழிற்சாலையாக இந்த ஹூண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலை இன்றைக்குத் திறக்கப்படுகின்றது. ஹூண்டாய் நிறுவனத்தின் சில கொள்கைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே தம்பி முரசொலி மாறன் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இங்கே வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்ற நிலையை மிகச் சரியாகக் கடைப்பிடிக்கின்ற ஒரு நிறுவனமாக இந்த ஹூண்டாய் நிறுவனம் விளங்குகிறது என்பதை நான் பெருமையோடு, நன்றியுணர்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். இருங்காட்டுக்கோட்டையில் இந்தத் தொழிற்சாலைக்கு நிலம் வழங்கியவர்களுக்குச் சிறப்புரிமை அளிக்கின்ற வகையிலும், ஹூண்டாய் நிறுவனத்தின் வேலை நியமனக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நிறுவனத்தில் 1,238 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் மாறன் சுட்டிக்காட்டியதைப்போல் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 91.32% என்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும். எஞ்சிய 8.68% தான் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

ஹூண்டாய் நிறுவனம் உயர்தரமான ஒரு வாகன நிறுவனம். இதற்கு நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். எனவே, நியமனம் செய்யப்படும் தொழிலாளர்களுக்குப் படிப்படியாகப் பயிற்சிகள் அளிக்கவும், இந்த நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டிருக்கின்றது. இத்தொழிற்சாலையின் வேலைகளுக்கு ஐ.டி.ஐ. பயிற்சி குறைந்தபட்சக் கல்வித் தகுதியாக நிர்வாகத்தினால் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நிலம் வழங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இக் கல்வித்தகுதி 8ஆம் வகுப்புவரை என்று தளர்த்தப்பட்டுள்ளது. ஹூண்டாய் நிறுவனம் தொழிற்சாலைப் பகுதியைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் இருந்து 637 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்கியிருக்கின்றது.

அதை விளக்க வேண்டுமேயானால் அந்த 637 பேரில், இருங்காட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் 112, பக்கத்தில் உள்ள கீவளூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 30 பேர், தண்டலம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 102 பேர், பென்னலூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 110 பேர், செட்டிமேடு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 75 பேர், பேட்டைப் பகுதியினர் 25 பேர், செம்பரம்பாக்கம் பகுதியினர் 63 பேர், திருப்பெரும்புதூரைச் சேர்ந்தவர்கள் 120 பேர் என்ற அளவில் இங்கேயுள்ளவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு நேரடியாகவும் மேலும் பலருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை அளித்திருக்கின்ற ஹூண்டாய் நிறுவனத்திற்கு நான் என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் மீண்டும் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்."

மேதகு ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 9.10.1998 அன்று இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் மோட்டார் கம்பெனியின் கார் உற்பத்தியைத் தொடங்கி வைத்தார்.
திரு. முரசொலிமாறன் எம்.பி., விழாவிற்கு தலைமை வகித்தார்.
ஹூண்டாய் கம்பெனியின் கௌரவப் பெருந்தலைவர் திரு. சுங் சே யாங் விழாவில் பங்கேற்றார்.

# ஐந்தமிழ் அறிஞர் கலைஞர்



பல்லாயிரக்கணக்கான மொழிகள் வழங்கி வரும் இந்த நில – உலகிலே தமிழ்மொழிக்கு மட்டும் தனித்ததொரு சிறப்பு வாய்த்திருக்கிறது. தமிழைத் தமிழென்று ஒற்றையாகச் சொல்லாமல் தமிழை "முத்தமிழ்" என்று கொத்தாகச் சொல்வது தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கமாகும். அத்தகைய சிறப்பொன்றைத் தமிழ் உலகத்திற்கு நினைப்பூட்டி, எடுத்துச்சொல்லி, ஒவ்வொருவருடைய உணர்விலும் பதிய வைத்த பெருமை கலைஞர் அவர்களையே சாரும். இதையொட்டி முக்கியமானதொரு செய்தியை இங்கே எடுத்துச் சொல்லி முத்தமிழுக்கு மேலுமிரண்டு கனபரிமாணங்கள் இருக்கின்றன என்பதை விளக்கிட விரும்புகிறேன்.

தமிழ்மொழியை அல்லது பண்பாட்டை முத்தமிழ் என்று போற்றும் அதேநேரத்தில் மற்ற மொழிகளுக்கு இத்தகைய பெயரோ, புகழோ வாய்க்கவில்லையே ஏன் என்பதை முதற்கண் சிறிது உற்று நோக்குவோம். முத்தமிழுக்குள் அடங்கியிருப்பது இயல், இசை, நடம் என்ற மூன்று கலைகளாகும். ஒரு நிலையில் இது தமிழ் மக்களுக்கேயுரிய ஒரு சொத்தாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. அதே சமயத்தில் பிற மொழிகளுக்கும், இயல், இசை, நடம் என்ற மூன்று கலைக்கூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தும், ஏன் முத்தெலுங்கு என்றோ, முக்கன்னடம் என்றோ, மூன்று மலையாளம் என்றோ, மூன்று சமஸ்கிருதம் என்றோ தொகுத்துக் கூறுகிறார்கள் இல்லை? போட்டிக்குச் கூடச் சொல்லிடவில்லையே?


இந்த நிலையில், தமிழ் மட்டுமே முத்தமிழ் என்ற சிறப்புப் பெயர் கொண்டதற்குப் புலவர் பெருமக்கள் பல்வேறு காரணங்களைக் கூறுவார்கள். என்றாலும், நான் என்னுடைய வாஸ்துத் தொழில்நுட்பக் கோணத்திலிருந்து இதனை உற்று நோக்கிய காலை, ஒரு விஞ்ஞானப் பேருண்மையும் அதனால் ஒரு சமன்பாடும் எனக்குப் புலப்படுவதாயிற்று. அவற்றைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழனப் பண்பாட்டில் மரபுக் கவிதை, மரபு இசை, மரபு நடம் என்று மரபை முன்வைத்து பெருமைபடப் பேசுவார்கள். அப்படியானால் 'மரபு' என்ற சொல் சிறப்பான நுட்பம் ஒன்றை உணர்த்த வேண்டுமல்லவா? அதைத்தான் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டிட விழைகிறேன். தமிழ் மரபில் இயல், இசை, நடம் என்ற மொழி வழிப்பட்ட கலைக்கூறுகள் தனக்கேயுரிய ஒரு விஞ்ஞான நுட்பத்தை அடிப்படையாகவும், பொதுப்படையாகவும் கொண்டு விளங்குகின்றன. மரபுக் கவிதைகள் இயற்றும் தொழில்நுட்பத்தில் சொற்கட்டு (Well defined and disciplined speech form) என்றும், யாப்பு என்றும், கட்டு என்றும் சொல்லப்படும் ஒரு வகையான


டாக்டர். வை.கணபதி ஸ்தபதி
முன்னாள் முதல்வர்
அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி,
மாமல்லபுரம்.

கணக்கியல் நுட்பம் உளது. ஒவ்வொரு எழுத்துக்கும் (குறில், நெடில் ஆகிய எழுத்துக்களுக்கும்) 'மாத்திரைகள்' என்று சொல்லப்படும் கால அளவு ஒன்று செயல்படுகிறதையும் சொல்லப்படுவதையும் கேட்டிருக்கலாம். எழுத்து – சொல் (அ)சொல் ஒலிகளை – சொல் ஒலி அலைகளை – சொற்பதங்களைக் கால அளவினால் நறுக்கி, ஒரு யாப்பை உருவாக்கி (Speech ryhthm), அதனை இலக்கணம் என்று சொல்லி, அவ்விலக்கணப்படி கவிதைகளை இயற்றுகிறோம். இத்தகைய கவிதைகளில் மையமிட்டுக் கிடக்கும் 'கரு' ஒன்று சொற்காட்சியாக மலர்ந்து நிற்கும். அதில் அணிகள் என்று சொல்லப்படும் உணர்ச்சிக் கூறுகளும் (feeling tones) சேர்ந்து வடிவங்கொள்ளும். இத்தகைய இலக்கணக் கூறுகளைக் கொண்டு இயற்றிய கவிதையைத்தான் மரபுக் கவிதை என்று சொல்லுகிறோம். அதாவது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஓர் ஐந்தியல் இலக்கண நெறி கொண்டு உயிர்ப்புள்ள காட்சியை – ஒலிமயக் காட்சியை இந்த மரபுக் கவிதை உணர்த்துகிறது. இதனால், கவிதையானது, உணர்ச்சி மிகுந்த ஓர் ஒவியமாக – சொல்லோவியமாக மாறிவிடுகிறது. இப்படி ஒலியானது ஒலிமயக் காட்சியாக – கவிதைகயாக – வடிவமைக்கப்படுவதற்கு மூலமாகவிருப்பது 'கால அளவே' என்பது கவிதை இயற்றும் பணியில் ஓர் அடிப்படையான விஞ்ஞான நுட்பம் என்று, தமிழக வாஸ்துக் கலை மரபில் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் காலக் கணக்கை இசைத் துறையிலும், ஆடல் துறையிலும் தாள அளவு (தாள தட்டி அளவு கொள்வதால் 'தாளம்' என்றாயிற்று) என்று சொல்லுகிறோம். ஆடலுக்கும், பாடலுக்கும் இந்தத் தாளக் கணக்கே எழிலார்ந்த வடிவ அமைதியைத் தருகிறது என்பதை அனுபவ பூர்வமாக நாம் பார்க்கின்றோம், அல்லவா? எனவே தாளம் போட்டுப் பாட்டைக் கட்டுதல், பாடுதல், ஆடுதல் என்பது தமிழ் மரபிலே முகிழ்ந்திட்ட மாபெரும் விஞ்ஞான நுட்பமாகவும் வழக்குமாயிற்று.

எனவே, மரபுக் கவிதையும், மரபு இசையும், மரபு நடமும் முத்தமிழ் என்று சிறப்பு எய்துவதாயிற்று. இந்த மூன்றிலும் பேரறிவாளராக விளங்குபவர் கலைஞர் அவர்கள்.



ஆதலால், அவரை முத்தமிழ் அறிஞர் என்று கலை உலகம் போற்றிப் புகழ்வதாயிற்று. ஆனால், கலைசார் தமிழ் மரபு இதோடு நின்று விடவில்லை. இதற்கு மேலும் இரண்டு தமிழ் உண்டு.

அவ்விரண்டில் ஒன்றைச் சிற்பத்தமிழ் என்றும், பிரிதொன்றைக் கட்டடத் தமிழ் என்றும் சொல்லலாம். இவ்விரண்டு கலை மரபுகளில் ஏற்கெனவே வருணித்த தாளக் கணக்கானது முழுக்க முழுக்கப் பயன்படுகிறது. மேற்சொன்ன காலத்தால் – கால அளவினால் கட்டடங்களும் சிற்பங்களும் இயற்றப்படுகின்றன என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? ஆம், தாளம் கொண்டு சிற்பத்தையும், கட்டடத்தையும் இயற்றுவது (designing into rhythmic spatial forms) தமிழகச் சிற்பக்கலை மரபாகும். இதனைச் சிற்பிகளாகிய நாங்கள் எப்படிச் சொல்லுகிறோம் என்றால், கவிதையைக் காதால் கேட்கும் ஓவியம் (aural poetical

form) என்றும், ஓவியத்தைக் கண்ணால் பார்க்கும் கவிதை (visual poetical form) என்றும் சொல்லி, அதில் விஞ்ஞானத் தத்துவமொன்றை வைத்துக் காட்டுவோம். அதாவது காவியத்தில் ஓவியமும், ஓவியத்தில் காவியமும் நிலைகொள்கின்றது என்று சொல்லுகிறேன். உள்ளுணர்வுகள் கோடுகளாக அதாவது புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு என்ற ஐந்தியல் இலக்கண வரம்புக்குள்ளே – காலத்தால் கட்டுப்படுத்தப்பட்டு வடிவம் கொள்கின்றன. எனவே, கவிதை, இசை, நடம், சிற்பம், கட்டடம் ஆகிய ஐந்தும் ஒரே இனப்பட்ட – ஒரே இலக்கணவயப்பட்ட – கலை மரபுகள் என்று கொண்டுள்ளோம். அனைத்திற்கும் ஜீவனாயும் பொதுவாகவும் இருப்பது தாளம் என்ற காலக் கணக்கே என்பதை இங்கே மீண்டும் சுட்டிக் காட்டிட விரும்புகின்றேன். கவிஞன் தாளம் போட்டுப் பாட்டைக் கட்டுகிறான். கலைஞன் தாளம் கொண்டு வீட்டைக் கட்டுகிறான் என்பது வாஸ்து மரபுசார் ஒரு வசனமுமாகும். இக்காரணம் பற்றியே மரபுச்சிற்பமும் கட்டடமும் (Frozen music) என்று புகழ்ப்படுவதாயின. ஐந்தமிழ் இப்படித்தான் பிறந்தது; இப்படித்தான் இருக்கிறது.

இந்தக் காலத்துடிப்பு அல்லது காலக் கணக்கு உயிரினங்கள் அனைத்திலும் விந்து நிலையிலிருந்து இறுதி நிலைவரை நொடி – நொடி நிகழ்ந்து கொண்டிருக்கும், ஓர் உயிர்ப்பு ஆற்றலாகும். இத்துடிப்பு ஒரு வகையான நெறியில் (order) நிகழ்கிறது. இத்தகைய சீரான கணக்கிலே (rhythmic vibration) உயிரானது துடித்துத் துடித்துத் தான் உடல் வளர்ச்சி நிகழ்கிறது என்பது நமது பண்டை விஞ்ஞானத்தின் கோட்பாடு ஆகும். எதுபோல எனில், வீணையின் ஒலி அதிர்வுகள் திரும்பத் திரும்ப நிகழ்ந்து இசை வடிவமாக உருமாற்றம் கொள்வது போல என்று சொல்லுகிறோம். உண்மை தானே? நவீன கால விஞ்ஞானத்தில் இந்த உயிர்த் துடிப்பை – சீலத் துடிப்பை – `Biological rhythm' என்று சொல்வார்கள். ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு வகையான துடிப்புக் கணக்கால் (rhymic waves) உடல் வளர்ச்சி பெறுகின்றன. நாம் 'கால மாத்திரை' என்றும் 'காலக் கணக்கு' என்றும் மொழித் துறையில் சொல்லுகிறோம். இதனை வாஸ்துத் தொழில் நுட்பத் துறையில் தாளக் கணக்கு என்றே சொல்லுகிறோம். இதனை ஆங்கிலத்தில் time generated space measure என்று சொல்லலாம். எனவே சிற்பங்களையும் கட்டடங்களையும் time generated spatial forms (காலம் தோற்றிய இடவடிவங்கள்) என்று கொண்டுள்ளோம். ஐந்தமிழில் எத்தகைய விஞ்ஞானம் உளது, பார்த்தீர்களா?

கலைஞர் அவர்கள் என்னுடைய பார்வையில், ஐந்தமிழ் அறிஞராக விளங்குகிறார் என்று பெருமையோடும், மகிழ்ச்சியோடும் சொல்லிட விரும்புகிறேன். சிற்பக் கலைத்துறையிலும், கட்டடக் கலைத்துறையிலும், கலைஞர் அவர்கள் எத்தகைய ஆற்றலும், அறிவும், ரசனையும் அவற்றையெல்லாம் விஞ்சும் உளப்பண்பாடும் உடையவர் என்பதை அவர்தம் மூச்சிலும், பேச்சிலும், செயலிலும் கண்டவன் என்ற அனுபவத்தோடும் ஆதாரத்தோடும், கலைஞர் அவர்களை "ஐந்தமிழ் அறிஞர்" என்று சொல்லி மகிழ்கிறேன். இக்கட்டுரையைப் படிக்கும் இளைஞர்களும், முதியோர்களும், படித்தோரும், பாமரரும், புலவர்களும், அறிஞர்களும் எனது அடைமொழியை ஏற்றிடுவர், தொடர்ந்து சொல்லிடுவர் என்று நம்புகிறேன்.

காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த பூம்புகாரைத் தன் மனக்கண் முன் நிறுத்தி, சிலப்பதிகாரக் காட்சிகளை அங்கே முற்றிலும் கல்லால் நிறுவச் செய்து, அக்காட்சிகளை உணர்ச்சியோடு பார்த்து மகிழ்ந்து, சிலப்பதிகாரப் பூம்புகாரை நிர்மாணம் செய்தவர் கலைஞர் என்பதை நானே சொல்லிச் சொல்லி அந்த நாட்களில், மகிழ்ந்திருக்கிறேன். இதற்கென என்னுடைய தனிப்பட்ட முயற்சியில் இரண்டாயிரம் சிற்பிகளையும், ஆயிரம் அறிஞர்களையும், அழைத்து மாநிலம் தழுவிய "சிற்பியர் மாநாடு" ஒன்றை 1974–ல் நிகழ்த்தி, "பூம்புகார் படைத்த பெருந்தச்சன்" என்ற பட்டத்தை அவர்களுக்குச் சூட்டி அனைவரையும் மகிழ்ச்சி அடையச் செய்தேன். தலைமுறை–தலைமுறையாய்க் கோவில்களையும், கோவில் சிற்பங்களையும் செய்து வந்த எங்கட்கு இலக்கியக் காட்சிகளையும், குறட்சிற்பக் காட்சிகளையும் செய்திட புதியதொரு வழியைக் காட்டியவர் கலைஞர் அவர்கள் என்றால் மிகையாகாது.

மேலும் சிலப்பதிகார வரலாற்றுச் செய்திகளையும், வள்ளுவர் காட்டும் குறள் – நெறிகளையும் காட்சிகளாக்கிக் காட்டிய செயல் தமிழகக் கலை வரலாற்றில் இதற்குமுன் நடந்திடவில்லை என்பதை சுட்டிக் காட்டும் நேரத்தில், இலக்கியக் காட்சிகளுக்கும், உலகியல் வாழ்க்கை நெறிமுறைகளுக்கும் வரலாற்றில் முதன் முதலில் சிற்பக் காட்சிகளைக் கல்லால் அமைத்திடக் கிடைத்திட்ட சந்தர்ப்பத்தை சிற்பிகளாகிய நாங்கள் பெரியதொரு புரட்சியாகக் கூட நினைத்ததுண்டு. பாவை மன்றச் சிற்பக் காட்சிகளையும், கண்ணகி வரலாற்றைச் சிறப்பித்திடும் கதைக் காட்சிகளையும், இலஞ்சி மன்ற – நெடுங்கல் மன்ற கட்டட அமைப்புகளையும், அதில் உள்ளிட்ட

சிற்பக் காட்சிகளையும், உதாரணமாக எடுத்துக் கூறலாம். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தலைக்கோல் மாதவியின் சிற்பம் அமைந்ததை கலைஞர் அவர்கள் ரசித்துப் பார்த்ததையும், ரசித்துப் பேசியதையும், ரயில் நிலையங்களிலும், பொது நிலையங்களிலும் ஆளுயரப் படமாக வைத்து மக்களிடம் காட்டச் செய்து பெருமைப்படுத்தியதையும் இன்னும் மறப்பதற்கில்லை. அண்மையில் செய்தியாளர்களிடம் உரையாடும்போது கூட; மாதவிச் சிற்பத்தைத் தொட்டு அவர்தம் அழகு தமிழில் பேசியதைப் பத்திரிக்கையில் பார்த்தேன். கலைஞர் அவர்கள் கற்பனை வளம் கொண்ட உளத்தைப் பெற்றிருப்பதோடல்லாமல், மாபெரும் சிற்பக்கலை ரசிகர் என்பதையும் என்னால் கண்டுகொள்ள முடிந்தது. வரலாற்று ஆசிரியர்கள் மெச்சிப்பேசி, வரலாற்றில் பதிவு செய்ய வேண்டிய பல படைப்புகள் இந்தப் பூம்புகார் புனர்நிர்மாணத் திட்டத்தில் இருக்கின்றன.

கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மேலுமொரு கலைப்படைப்பு, சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. திருவள்ளுவருக்கு அவர் எடுத்திட்ட "வள்ளுவர் கோட்டம்" என்ற அபூர்வச் சின்னத்தைத்தான் குறிப்பிடுகிறேன். நமது திருக்கோயில்களில் தேர் என்ற பெயரில் பல கல்தேர்களை எங்கள் முன்னோர் செய்திருக்கிறார்கள். பொதுவாகக் கல்லால் கோயில் ஒன்றைக் கட்டி, இரண்டு பக்கங்களிலும் சக்கரங்களை இணைத்துக் கல்தேர் என்று காட்டுவர். ஏனெனில், மரத்தேர்கள் அடியில் சிறுத்து, மேல் நிலையில் விரிந்து அமைவதால் கல்லால் செய்யும்போது, கட்டுமானப் பிரச்சினைகள், சேர்மானப் பிரச்சினைகள், இதனால் பணப் பிரச்சினைகள் நிரம்ப ஏற்படும். எனவே மரத்தேரைப் போலக் கல்தேரைச் செய்து நிறுத்திட மரபில் எவரும் முயற்சிக்கவில்லை; முன்வரவில்லை. ஆனால் கலைஞர் அவர்கள் ஆசைப்பட்ட திருவாரூர்த் தேரானது கலை நுட்பங்களாலும், கட்டுமான நுட்பங்களாலும், அளவு முறையாலும், கனபரிமானத்தாலும், பெரிய எழுச்சியும் எடுப்பும் கொண்ட படைப்பாகும். விரிந்த மேல் பாகத்தை (மேல் தட்டை) கவிழ்ந்து விடாமல் அமைப்பது பெரிய பொறியியல் பிரச்சினையாகும் (risky). இத்தகைய சோதனைகள் நிறைந்த ஓர் அமைப்பை கலைஞர் அவர்கள் செய்ய வேண்டுமென்று எனக்கு ஆணையிட்டபோது ஒரு சிறிதும் அச்சமின்றி அவர்தம் ஆணையை ஏற்று, ஐந்து ஆண்டில் செய்யக்கூடிய அப்பணியை நாளொன்றுக்கு 3 பணிக்கால அளவு (Shift) வீதம் ஆயிரம் பேர்களை ஈடுபடுத்திக் கொண்டு இரண்டு ஆண்டுகளில் அந்தத் தேர்ப் பணியை முடித்திட்டேன். அத்தேரில் 133 குறட் சிற்பக் காட்சிகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. இத்தகைய வள்ளுவர் கோட்டத்தின் அமைப்பும், அதன் அழகும், நுட்பமும் வரலாற்றில் இடம் பெறத்தக்கவனவாகும். இதனை மீண்டும் பிரிதொரு முறை படைத்திட முடியாது என்று கூடச் சொல்லிடலாம். ஏனெனில், ஆவுடையார் கோவில் கொடுங்கை போல,திருவலஞ்சுழிப் பலகணி போல, இஃதொரு அதிசயப் படைப்பாகும். இதனை இவ்வண்ணம் உணர்ந்து பெருமைப்படுத்தி வரலாற்றில் யார் ஏற்றப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. "இங்ஙனம் இந்தியக் கலை வரலாற்றில் இடம் பெறத்தக்க ஒரு கல் தேரை கலைஞர் அவர்கள், வள்ளுவர் மீது கொண்டிருந்த அசையாப் பற்றுதலால், வள்ளுவர் காட்டும் நெறிகளை உலகறியச் செய்திடும் இலட்சியப் பிடிப்பினால் கற்பணியின் நிரந்தரத் தன்மையை உணர்ந்திருந்ததால் கல்லால் அக்கோட்டத்தை நிறுவி அங்கு வள்ளுவர் சிலையையும் வீற்றிருக்கச் செய்திருக்கிறார்கள். மக்களை நேரில் சந்திக்க வலம் வரும் வள்ளுவர், முப்பாலைப் பரப்பிடும் பேராசிரியனாக – ஞானாசிரியனாகக் காட்சி தருகிறார். இத்தகையப் பண்பாட்டுப் பணியினால் கலைஞர் அவர்கள் வள்ளுவரோடு வள்ளுவர் குறள் போல என்றென்றும் உயிர்ப்புடன்



இருப்பார்கள் என்பது சொல்லிட விரும்புகிறேன். அவரோடு நானும் தான். பூவோடு சேர்ந்து நாறும் மணப்பது போல.

கலையைப் பற்றியும், கலாரசனை பற்றியும், கலைப் படைப்புகள் பற்றியும், கலை வரலாறு பற்றியும் பேசிடுவோர் இந்த உலகிலே பல கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால் சிற்பியர்களைப் பொறுத்தவரையில் இப்பேச்சுக்களைப் பெரிதென நினைக்க மாட்டார்கள். உதாரணமாக, தஞ்சைப் பெரிய கோவிலை மகத்தான எடுப்பில் இயற்றிட வேண்டும் என்பதை ராஜராஜசோழன் சிற்பியிடம் சொல்ல, அதனைச் சிற்பியானவன் தனது உளத்தே நிறுத்தி, ஓர் ஓவியத்தை அமைத்துக் கொண்டு அந்த மாமன்னனிடம் அஃது எப்படி இருக்கும் என்று வருணித்துக் கூறும்போது அதனை முழுமையாக மனதிலே வாங்கி ரசித்திருக்கக்கூடும்; பலருக்குச் சொல்லியிருக்கவும் கூடும்; அவ்வமைப்பைப் பார்த்திட துடிப்புடன் இருந்திருக்கவும் கூடும். ஆனால் அவனிடம் அதனை எழுப்பித்திடத் தேவையான பொருளாதாரமும், அதனை நிறுவிட முடியும் என்ற நம்பிக்கையும், அதனைச் செயல்படுத்திடத்தக்க துணிச்சலும் உளதா என்பதையே சிற்பியர் எதிர்நோக்குவர். அந்த மூன்று கூறுகளிலும் துணிச்சலையே சிற்பிகள் மிகப்பெரிதென மதிப்பர். பெருங்காரியங்களைச் செய்வதற்குத் துணிச்சலல்லவா வேண்டும்? துணிச்சல் என்பது ஆன்மத் தொடர்புடைய ஒரு பலம், ஊக்கம் ஆகும். அத்தகைய துணிச்சல் ஒன்று கலைஞர் அவர்களுக்குச் சொத்தாக இருப்பதை நான் அனுபவித்தவன். இதனால் அவர் மீது தனியொரு மதிப்பும், மரியாதையும் எப்பொழுதும் எனக்குண்டு. அவர்கள் மேற்கொண்ட சமுதாய

> *முத்தமிழுக்குள் அடங்கியிருப்பது இயல், இசை, நடம் என்ற மூன்று கலைகளாகும். ஒரு நிலையில் இது தமிழ்மக்களுக்கேயுரிய ஒரு தனிச்சொத்தாகும் என்று சொன்னால் மிகையாகாது. அதே சமயத்தில் பிற மொழிகளுக்கும், இயல், இசை, நடம் என்ற மூன்று கலைக்கூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தும், ஏன் முத்தெலுங்கு என்றோ, முக்கன்னடம் என்றோ, மும்மலையாளம் என்றோ, முச்சமஸ்கிருதம் என்றோ தொகுத்துக் கூறுகிறார்கள் இல்லை? போட்டிக்குக் கூடச் சொல்லிடவில்லையே?*

நலப்பணியாயினும் சரி, அரசியல் பணியாயினும் சரி, இலக்கியப் பணியாயினும் சரி, கலைப் பணியாயினும் சரி அவற்றில் துணிச்சலே பொங்கி வழிவதைக் காணலாம். இதனை நான் அவர்களிடம் ஒரு சமயம் நேரடியாகப் பாராட்டிச் சொல்லவும் முடிந்தது. செய்விப்போருக்குத் துணிச்சல் இல்லையேல் செய்பவருக்கும் துணிச்சலிராது என்று பொருள்பட மேடையிலே சொன்னேன். துணிச்சல் எனப்படும் ஓர் உளத்துடிப்பு – உந்து சக்தி (urge) செய்வோனுக்கும் உளதா என்று அறிந்துதான் செய்விப்போனுக்குத் துணிச்சலே பிறக்கிறது என்று பொருள்பட,

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்"**

என்ற குறளைச் சொல்லி அவர்தம் துணிச்சலை என்னிடம், மருத்துவர் ஊசி ஏற்றுவது போல, என் உள்ளத்தில் ஏற்றி வைத்தார்கள். எங்கே எப்போது? இப்போதே சொல்லி விடுகிறேன்.

133 அடி உயரங்கொண்ட திருவள்ளுவர் சிலையை, கன்னியாகுமரி முனையில், நடுக்கடலில், மலைமுகட்டில், முற்றிலும் கல்லால் நிறுவிட, வெள்ளி உளியும் வெள்ளிச் சுத்தியலும் கொண்டு முதற்கல்லை செதுக்கித் தொடக்கி வைத்த நேரத்தில் (6.9.1990ல்) விழா மேடையில் அக்குறளைச் சொல்லி எனக்கு உணர்ச்சி கலந்த துணிச்சலை உளத்தே நிறைத்து வைத்தார்கள். எனவே அப்பணி சீரும் சிறப்போடும் இப்போது நிகழ்ந்து வருகிறது. குறிப்பிட்ட காலத்தில் அப்பணி நிறைவுபெற கலைஞர் அவர்களின் ஆசி கோரி, அவர்தம் 75வது பிறந்த நாளில் முத்தமிழ் ஐந்தமிழாக உறுதிப் பெற்றுத் திகழ 'ஐந்தமிழ் அறிஞர்' என்ற பெயரை அவர்களே தாங்கிட வேண்டும் என்று நினைத்து இதனை ஒரு கோரிக்கையாகவே முன் வைக்கிறேன். இந்த நல்ல நேரத்தில் பல்லாண்டு வாழ்க என ஐந்தமிழ்க் கலைஞரை வாழ்த்துகிறேன்.

★ ★ ★

# காந்தியடிகள் பிறந்தநாள் விழா

## மேதகு ஆளுநர் உரை :

காந்தியடிகளின் தத்துவம் தான் மனித குலத்தை அமைதியாக வாழ வைக்க முடியும் என்பதை உலகம் உணர்ந்துள்ளது. மனித சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகத் தன் வாழ்வை அமைத்து கொண்டவர் காந்தியடிகள்.

அவருடைய தத்துவங்களான உண்மை, அகிம்சை ஆகியவை இந்த யுகத்திற்குப் புதிய பரிமாணத்தைத் தந்தன என்றால் அது மிகையாகாது.

**வெற்றி**

அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி நெல்சன் மண்டேலா போன்றவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். காந்தியடிகள் வாழ்வே தத்துவமாகத் திகழ்கிறது.

வன்முறை, சமூகத்தைச் சீரழிக்கிறது. ஆனால் அகிம்சை சமூகத்தை வலிமையாகத் திகழச் செய்கிறது.

**அகிம்சை**

அகிம்சை, சத்தியாகிரகம் மூலம் அவர் நாட்டுக்கே விடுதலை பெற்று தந்தார். காந்தியடிகளின் கொள்கைகள், தத்துவங்களை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

★ ★ ★




## முதலமைச்சர் கலைஞர் உரை:

காந்தியடிகள் பெயரைச் சொல்வது - அவரை வாழ்த்துவது - அவருடைய புகழைப் போற்றுவது - பாராட்டுவது இவைகள் மாத்திரமே அவருக்கு நாம் செலுத்துகின்ற காணிக்கையல்ல. எந்தவொரு தலைவர் அல்லது எந்தவொரு பெரியவர் வழியை நாம் பாராட்டினாலும், அவர்கள் காட்டிய வழியில் ஓரளவாவது நாம் நடக்கிறோமா என்று நம்முடைய மனச்சாட்சிக்குப் பதில் சொல்கிற அந்தத் தகுதியைப் பெற்றிருந்தால்தான் அவர்களைப் பாராட்டுவதில் பொருள் இருக்க முடியும். அந்த வகையில் இந்தியத் திருநாட்டில் நாம் பெற்றிருக்கின்ற சுதந்திரம் இனிமையானது. நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கத் தக்கதென்றாலுங்கூட, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதில் நாம் எந்த அளவிற்கு நம்மைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்திக்க இந்தப் பிறந்த நாள் பயன்பட வேண்டும். இல்லையென்றால் பிறந்த நாள் விழா கொண்டாடுவதில் எந்தவிதமான பயனும் நல்ல விளைவும் நிச்சயமாக இருக்காது.

காந்தியடிகள் இந்த நாட்டிற்காக ஆற்றிய தொண்டுகளை - செய்த தியாகத்தை - சென்ற சிறைவாசகங்களை - மேற்கொண்ட உண்ணாவிரதங்களை எல்லாம் எண்ணிப் பார்த்தால் - நம்முடைய வாழ்க்கை ஏதோ ஒரு வசந்தகாலமாகவே இருக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் நமக்காக இல்லாவிட்டாலும், எதிர்காலச் சந்ததிக்காக இன்னும் பல தியாகங்கள் செய்தாக வேண்டும் என்ற நல்ல முடிவை மேற்கொள்ள முடியும்.

அதற்கு வழிகாட்டத் தக்க வகையில்தான், காந்தியடிகளுடைய வாழ்க்கை அமைந்திருக்கின்றது. அவர் வாழ்நாள் முழுவதும் இந்த நாட்டு மக்களுக்காகவே சிந்தித்தார்;

செயல்பட்டார். அதனால்தான் அவரைப் பற்றி ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்தவரும், இந்தியப் பழங்குடி மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்து எழுதியவருமான - உத்தமர் காந்தியடிகளுடைய நண்பர்களில் ஒருவருமான டாக்டர் வெரியர் எல்வின் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''நன்மை, சத்தியம், அன்பு போன்றவைகள்தான் காந்தியடிகளின் போதனையில் பூரணமாக முன்னணியில் இருந்தன. அழகைப் பற்றி அவருக்கு அதிகமாகத் தெரியாது. இயற்கைக் காட்சிகளை அவர் விரும்பினார். அவருக்கு கலையில் அதிக நாட்டமில்லை. அவர் இலக்கியத்தையும் இசையையும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கே விரும்பினார். ''பாமர மக்களுக்குத் தேவையானது, உணவு என்னும் இலக்கியம்தான் என்று காந்திஜி அடிக்கடி சொல்வார்'' என்று டாக்டர் வெரியர் எல்வின் காந்தியடிகளை உருவகப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

இன்னொரு ஆங்கில எழுத்தாளர், ஸ்டான்லி ஜோன்ஸ் ''காந்தியடிகள் இந்திய மக்களின் ரத்தத்தின் ரத்தமாய், எலும்பின் எலும்பாய் வாழ்ந்தார்'' என்று குறிப்பிடுகிறார்.

ஆசியாவின் ஜோதி பண்டித நேரு அவர்கள் தனது ''டிஸ்கவரி ஆஃப் இண்டியா'' நூலில் '' காந்திஜி ஒரு புத்துணர்ச்சி கலந்த மென்காற்று. அந்தக் காற்றைச் சுவாசித்ததும் நமக்குப் புத்துணர்வு ஏற்படுகிறது. இருளில் ஊடுருவும் ஒளியாக அவர் விளங்கினார். அவர் ஒரு புயலாக வீசினார். அவரது வாழ்வும் அறிவுரைகளும் அற்புதமானவை'' என்று நேரு குறிப்பிடுகிறார்.

**காந்தியடிகள் பற்றி வானொலியில் அண்ணா**

காந்தியடிகள் பிறந்த நாள் குறித்து பேரறிஞர் அண்ணா ''உலக உத்தமர் காந்தியடிகள்'' என்ற தலைப்பில் வானொலியில் உரையாற்றும் போது,

''காந்தியடிகள் இந்தியாவை,
மாண்புமிகு நாடாக்கிட
விரும்பினார் - சூதற்ற, சுரண்டலற்ற
வகுப்புப் பேதமற்ற நாடாக ஆக்க
விரும்பினார். அவர் பிறந்த
நாளைக் கொண்டாடும் நாம்,
காணும் நாடு எத்தகைய நிலையில்
இருக்கிறது? வகுப்புக் கலவரம்,
தீண்டாமைக் கொடுமை, வலியோர்
சிலர் எளியோர் தம்மை
வதைபுரியும் செயல்; கவலை
ததும்பும் கிராமங்கள், அரசியல்
சூதுவாதுகள், சமுதாய சதிகள்
எல்லாம் நெளிகின்றன.
அடக்குவார் எவர் உளர் என்று
கொக்கரித்தபடி !
காந்தியடிகளுடைய நாட்களில்
அவர் குரல் கேட்டு அந்நிய அரசு
வெருண்டோடிற்று. ஆனால் இந்த
நாட்டில் ஓட்டப்பட வேண்டியவை
பல இன்னும் இருக்கின்றன.
பொய்மையும் கயமையும்
கல்லாமையும் இல்லாமையும்
சாதிப் பித்தமும்
வகுப்புமாச்சரியமும்
வெருண்டோட வேண்டும்.
அதற்குத் தேவைப்படும்
தூய்மையும் வாய்மையும்
அஞ்சாமையும் பணியாற்றும்
தன்மையும் நம்
ஒவ்வொருவருவருக்கும் பிறந்திட
வேண்டும்'' என்று
குறிப்பிட்டிருக்கிறார்.

தீண்டாமை என்பது சாதிமுறை உற்பத்தி செய்த ஒரு சரக்கு. இந்து மதத்தில் புகுந்து அதை அரித்து வருகிறது. உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை எல்லாம் தீண்டாமையால்தான்; தீண்டாமையைத் தாக்கினால் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை தாக்கப்படும். அதே நேரத்தில் சாதிமுறை ஒழியும். மனித இனம் பரிசுத்தமாகி விடும் என்று திட்டவட்டமாகத் தீண்டாமை பற்றியும் இந்து மதம் பற்றியும் சொல்லி இருக்கிறார். சாதிமுறை பற்றிச் சாடியிருக்கிறார்.

இன்றைக்கு காந்தியின் பிறந்த நாளில் காந்தி ஜெயந்தி என்றும் காந்தி பிறந்தநாள் என்றும் நாம் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்தியப் பூபாகத்தில் என்ன நடக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது. இந்தியாவில் மட்டுமல்ல, தமிழகத்தில் கூட சாதி எனும் பெயரால் நடைபெறும் கொடுமைகள் எத்தனை? சாதிக் கலவரங்கள் எனும் பெயரால் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றாலுங்கூட, அதுகூட நடைபெற வேண்டுமா என்ற ஏக்கம் நம்மைப் போன்றவர்கள் உள்ளங்களில் துளைக்காமல் இல்லை.

ஒரு பத்திரிகையில் ஒரு துணுக்குச் செய்தி பார்த்தேன். அதில் பேருந்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ''இந்தப் பேருந்து ஒன்று தான் சாதிபேதம் பாராமல் எல்லோரையும் தன்னகத்தே அழைத்துக் கொண்டு பயணம் செய்யப் பயன்படுகிறது என்று அந்தப் பேருந்தைக் கூறுகிறார்கள். ஆனால் மனிதர்களுக்குள்ளே சாதி வேற்றுமை காரணமாக சண்டை வந்துவிட்டால் அவர்கள் தங்கள் முதல் தாக்குதலாக அந்தப் பேருந்தைத்தான் கொளுத்துகிறார்கள்'' என்று அந்தப் பத்திரிகையிலே அழகாக ஆனால் வேதனையோடு எழுதப்பட்டுள்ளது.


சாதி பேதத்தை அகற்றுகின்ற வகையிலே எல்லா சாதிக்காரர்களையும் ஏற்றுக் கொண்டு போகின்ற பேருந்து - அதற்குப் பரிசாக என்ன பெறுகிறதென்றால் சாதிக் கலவரமென்றால் முதலில் அந்தப் பேருந்து தான் எரிக்கப்படுகின்றது. அப்படிப்பட்ட ஒரு தீய எண்ணம் சாதியின் பெயரால் ஏற்பட்டுள்ளது. அது ஒரு வெறியாகவே இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.
அந்த வெறி தணிக்கப்பட வேண்டும். ஒடுக்கப்பட வேண்டும்.

கிண்டி காந்தி மண்டபத்தில் 2.10.1998 அன்று நடைபெற்ற காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் **மேதகு ஆளுநர்** மற்றும் **முதலமைச்சர் கலைஞர்** ஆற்றிய உரையிலிருந்து....

# சமத்துவ தமிழகத்தை - இந்தியாவை உலகிற்கு அறிமுகப்படுத்துவோம்!

## தியாகிகள் மணிமண்டபத் திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர்

கடந்த ஆண்டு காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் "தியாகிகள் மணிமண்டபம் ஒன்றை அமைத்திட வேண்டும்" என்ற ஒரு கருத்தை இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் எடுத்துக்கூறி அதை நிறைவேற்ற வேண்டும் என்று அன்பாக ஆணைபிறப்பித்தார்.



நான் அந்த நிகழ்ச்சியில் உரையாற்றும்போது இலக்கியச் செல்வர் குமரி அனந்தனின் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு விரைவில் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்று அன்றைக்கே குறிப்பிட்டேன். அதற்கேற்ப - செய்தித்துறை அமைச்சர் தம்பி முல்லைவேந்தனும், பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் இந்தக் கட்டடம், இந்த மண்டபம் விரைவில் அமைவதற்கான ஒத்துழைப்பைத் தந்தார்கள். அதிலும் குறிப்பாக முல்லைவேந்தன் என்னுடைய கண்ணில் பட்டால் மண்டபம் என்ன ஆயிற்று என்று கேட்பேன் என்பதற்காக கண்ணிலே படாமலிருந்து, ஆனால் இந்தக் காரியத்தை மிக வெற்றிகரமாக முடித்துத் தந்துள்ளார்.

### தியாகிகளை நினைத்து வானம் மழை பொழிவதாக உணர்கிறேன்

கடந்த நான்கைந்து நாட்களாக தொடர்ந்து மழை. நான் மிகுந்த கவலைப்பட்டேன். இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறும் என்று. ஆனால் இங்கே இலக்கியச் செல்வர் குறிப்பிட்டதைப் போல பெருந்தலைவர் காமராஜர் அவர்களை அடக்கம் செய்த நேரத்திலும் இப்படித்தான் மழை கொட்டியது. அதற்காக இடம் பார்ப்பதற்கு நள்ளிரவில் வந்த போதும் மழை கொட்டிக் கொண்டுதான் இருந்தது. ஒருவேளை அன்றைக்கு வானம் சிந்தியக் கண்ணீர், தியாகிகளை நினைத்துத் தொடருகிறது என்பதற்கு அடையாளமாகத்தான் தியாகிகளுடைய மணிமண்டபம் திறக்கப்படுகிற நேரத்திலும் மழை பொழிவதாக நான் பொருள் கொள்கின்றேன்.

தியாகிகளை மதிக்கின்ற அரசாக இந்த அரசு இருப்பதை அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். ஒரு அரசு அமைந்த பிறகு மாத்திரமல்ல; நாங்கள் தியாகிகளை மதிப்பது என்பது அரசு அமைவதற்கு முன்பே நல்லகண்ணு இங்கே எடுத்துக் கூறியதைப்

போல, எனது இளமைப் பருவத்திலேயே, கிட்டத்தட்ட ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே மலேசியாவில் போராடிய மாவீரன் அதற்காகவே மாண்டு மடிந்த கணபதி அவரைப்பற்றி 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்கின்ற சிறிய அளவு நூல்தான், அதை உணர்ச்சிப் பிரவாகமாக நான் அன்றைக்கே எழுதினேன். ஒரு அரை மணி நேரத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு சென்னையிலிருந்து விடைபெற்றுச் சென்ற அந்த நிகழ்ச்சி எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது. பதிப்பாளர் நமச்சிவாயம் என்ற ஒரு தோழர் நான் ரயிலுக்கு புறப்படுவதற்கு முன்பு என்னைச் சந்தித்து இந்த நூலை நீங்கள் எழுதித் தரவேண்டும் என்று கேட்டபோது அன்றைக்குத்தான் அந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்தது. நான் உடனடியாக அந்தச் செய்தியை அடிப்படையாக வைத்து எழுதித் தந்த நூல் அது.

### விறுகொள் சமுதாயத்தை உருவாக்கிடுவோம்

எனவே இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடிய உத்தமர்கள், வீரர்கள் அவர்களுடைய வாழ்க்கையை வரலாறாக ஆக்க வேண்டும் என்பதிலும் அதனைப் பின்பற்றி எதிர்கால சமுதாயம் வீறுகொள் சமுதாயமாக, வீரங்கொள் சமுதாயமாக, தியாகத்திற்குத் தயாராக இருக்கக்கூடிய சமுதாயமாக இருந்திட வேண்டும் என்பதிலும் இருந்த ஆழ்ந்த அக்கறையின் காரணமாகத்தான் இன்றைக்கும் அந்தத் தொண்டினை அரசு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து செய்து வருகின்ற அந்தப் பண்பை நாங்கள் பெற்றிருக் கின்றோம்.

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள், தந்தை பெரியார் அவர்கள் தொடக்க காலத்தில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்து, காந்தியடிகள் ஈரோடு வந்தால் பெரியாருடைய இல்லத்தில்தான் தங்குவது என்ற நிலையெல்லாம் ஒரு காலத்தில் இருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் அதே பெரியார் அவர்கள் காங்கிரசோடு மாறுபட்டு காந்தியடிகளைக்கூட, அவர்களுடைய கொள்கைகளைக்கூட கண்டனம் செய்கின்ற அளவிற்கு ஒரு தலைவராக வளர்ந்திருந்தாலும் காந்தியடிகள் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்ததும் மறுநாள் விடுதலை பத்திரிகையில் தலையங்கம் எழுதினார். அறிக்கை வெளியிட்டார். இந்தியாவிற்கு ''காந்தி நாடு'' என்று பெயர் வைக்கவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். அவர் வழியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் காந்தியடிகளைப் பற்றித் தீட்டிய சித்திரங்கள், வானொலியில் ஆற்றிய உரைகள் இவைகளெல்லாம் இன்றைக்கும் நம்முடைய செவிகளிலே ரீங்காரம் செய்து கொண்டிருப்பவைகளாகும்.

எனவே, திராவிட இயக்கம் என்பது அதிலும் குறிப்பாகத் தந்தை பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம். பேரறிஞர் அண்ணா அவர்களால் வழிகாட்டப்பட்ட இயக்கம். இந்த இரண்டு இயக்கங்களும் என்றைக்கும் மறைந்த பெரியவர்களை மதிக்கத் தவறியதில்லை. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத்தான் இந்த மணிமண்டபம் இங்கே உருவாகி இருக்கின்றது.

இந்த மண்டபத்தை ஐந்து அல்லது ஆறு மாத காலத்தில் அரும்பாடுபட்டு உருவாக்கியிருக்கின்றார்கள். இதிலே வைக்கப்பட்டிருக்கின்ற படங்களில் பெரும்பாலான படங்கள் ஒரு பத்துப் பதினைந்து படங்களைத் தவிர என்றுதான் சொல்லமுடியும்; அவ்வளவு படங்களையும் சேகரித்து வழங்கியிருப்பவர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் என்பதற்காக இந்த விழாவிலே அமர்ந்திருக்கின்ற தியாகிகள் சார்பாக மாத்திரமல்ல; இந்த விழாவிற்கு வராத தியாகிகள் சார்பிலும், மறைந்த தியாகிகள் குடும்பத்தின் சார்பிலும் அவருக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### தியாகிகளின் படங்களை அனுப்பி உதவுங்கள்

ஆயிரத்து இருநூற்று ஐம்பது படங்கள் வைப்பதற்கான வகையிலே இந்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தத் தொடக்க நிகழ்ச்சியில் வைக்கப் பட்டுள்ள படங்களின் எண்ணிக்கை இருநூற்று ஐம்பதுதான். மீதமுள்ள ஆயிரம் படங்களை வைத்தாக வேண்டும். இங்கே யார் யாருடைய படங்கள் வீராங்கனைகளுடைய படங் களெல்லாம்கூட இன்னும் வந்து சேரவில்லை என்று சொன்னார்கள். அவைகளையெல்லாம் சேகரித்துத் தருகின்ற பணியில் ஆங்காங்கு உள்ள தியாகிகள், தியாகிகளாக இல்லா விட்டாலும் அவர்களுடைய வழித்தோன்றல்கள் சமுதாயப் பொதுப்பணியில் ஈடுபட்டிருப் பவர்கள் அதுபற்றி ஆராய்ந்து தேடிக் கண்டுபிடித்து அவற்றை இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் வாயிலாக அல்லது நேரடியாக அரசுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

மேடையில் அமர்ந்திருக்கும்போது இன்னொன்றையும் தம்பி முல்லைவேந்தனிடம் சொன்னேன். ஒவ்வொரு தியாகியைப்பற்றியும் பத்து வரிகள் அங்கே படத்திற்குக் கீழே எழுதுவதற்கு இடமில்லை. எந்த ஊர் என்ன பெயர் என்பதுதான் அதில் எழுத முடிகிறது. எனவே, ஒவ்வொரு தியாகியைப் பற்றியும் சில வரிகள் கொண்ட ஒரு சுருக்கமான வரலாற்றுச் சுருக்கத்தை அச்சியற்றுகின்ற வகையிலே புத்தகங்களாக அச்சிட்டு, அந்த புத்தகங்களுக்கு மலிவான விலை குறிப்பிட்டு, இந்த மண்டபத்திற்கு வருகின்றவர்கள் அதை வாங்கிப் பயன்பெறுகின்ற வகையிலே அந்த புத்தகங்கள் இங்கே வைக்கப்பட வேண்டும் என்று நான் முல்லைவேந்தனிடம் சொல்லியிருக்கின்றேன்.



**வற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளைக் கொண்டோ, வானோங்கிய மலைகளைக் கொண்டோ ஒரு நாட்டை மதிப்பிட முடியாது; மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.**

**- அறிஞர் அண்ணா**

> ***பெருமையை மூன்று அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்; தோற்றத்தில் எளிமை; செயலில் மனிதத்தன்மை; வெற்றியில் வெறியின்மை.***
>
> **– பிஸ்மார்க்**

காரணம் இங்கே அன்புக்குரிய சமது அவர்களும், நல்லகண்ணு அவர்களும் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல் தியாகிகளுடைய படங்கள் இங்கே வைக்கப்பட்டிருப்பது, அந்தப் படத்திற்கு உரியவர்களை பெருமைப்படுத்த மாத்திரமல்ல; அவர்களுக்கு நன்றி காட்டுவதற்காக, நம்முடைய கடமையை உணர்த்துவதற்காகத்தான் அத்தகைய படங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இதிலே மிக முக்கியமாக இந்தப் படங்கள் இங்கே வைக்கப் பட்டிருப்பதற்கும், ஒரு மண்டபம் கட்டப்பட்டிருப்பதற்கும் காரணம் என்னவென்றால் இந்த மண்டபத்திற்குள் நுழைகின்ற இளைஞர்கள், வாலிபர்கள் இந்தப் படங்களைப் பார்த்து, பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். எவ்வளவு சுக துக்கங்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு, வாழ்க்கையைப் பற்றி கவலைப்படாமல் நாட்டின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்கின்ற அந்தச் செய்திகளை அந்த வரலாறுகளை அவர்கள் எண்ணிப் பார்க்கும்போது, தாங்களும் இவ்வாறு எங்கேயாவது மணிமண்டபத்தில் தங்கள் படம் வரவேண்டும் என்கின்ற அந்த ஆவலை எதிர்கால இளைஞர்கள் பெற்றாக வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மணிமண்டமே தவிர வேறு எதற்காகவும் அல்ல.

ஏனென்றால் இன்றைய இளைஞர்கள் கேளிக்கைகள், விழாக்கள் இவைகளில் தங்களது மனதை பறிகொடுப்பவர்கள்தான் பெரும்பாலோர் இருக்கிறார்கள். அதற்காக ஒரு நாட்டில், சமுதாயத்தில் கேளிக்கைகளே கூடாது. விழாக்களே கூடாது, மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளே இருக்கக்கூடாது என்று வாதிடுபவன் அல்ல நான். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கலாம். கேளிக்கைகள் இருக்கலாம். விழாக்கள் இருக்கலாம். ஆனால் நாட்டைக் காப்பாற்ற வேண்டும், மொழியை காப்பாற்ற வேண்டும், சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை வரும்போது, அந்த மகிழ்ச்சியை, கேளிக்கைகளையெல்லாம் துறந்துவிட்டு - தியாகம் செய்துவிட்டு, இந்த குறிக்கோளுக்காக நம்முடைய உயிரை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வு எல்லா இளைஞர்களுக்கும், எல்லா வாலிபர்களுக்கும் வந்தாக வேண்டும். அத்தகைய ஒரு தியாக உணர்வை வளர்ப்பதற்காகத்தான் இந்த மண்டபம் பயன்பட வேண்டும் என்று நாம் கருதுகிறோமேயல்லாமல் வேறல்ல.

அது மாத்திரமல்ல; நல்லகண்ணு இங்கே எடுத்துச் சொன்னார். இஸ்லாமியர்கள், இந்துக்கள் என்றெல்லாம் பேதமில்லாமல் ஆதிதிராவிடர்கள், அய்யர்கள் என்றெல்லாம் பேதமில்லாமல் இந்தப் படங்களெல்லாம் அங்கே வரிசையாக வைக்கப்பட்டிருக்கிற நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லிப் படங்களாக மாத்திரமல்ல; அவர்களுடைய வாழ்க்கையிலேகூட ஒன்றாக இருந்து, சமத்துவமாக இருந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள் என்ற அந்தச் செய்தியையும் அவர்கள் இங்கே தொகுத்துக் காட்டினார்கள். ஆனால் இன்றைக்கு சாதிகளால் நாம் பாழ்பட்டுக் கிடக்கின்றோம். மதங்களால் கூறுபட்டுக் கிடக்கின்றோம். இந்த நிலையை மாற்றுவதற்கு இந்த மணிமண்டபம் பயன்பட்டாக வேண்டும். எதிர்காலத்தில் சாதி-மத பேதமில்லாத சமத்துவ நிலையிலே நம்முடைய சமுதாயத்தைக் கொண்டு செல்ல வேண்டும். நம்முடைய நாட்டை அந்த அளவிற்கு வளர்த்தாக வேண்டும்.

வெளிநாடுகளுக்குச் சென்றால் இங்கிருப்பதைப்போல அங்கெல்லாம் சாதி கிடையாது. அன்றைக்கே பாரதி பாடினான்; ''ஆயிரம் உண்டிங்கு சாதி-எனில் அன்னியர் புகல் என்ன நீதி'' என்று கேட்டான். அன்னியர்கள் வரக்கூடாது என்பதிலே அழுத்தம் திருத்தமாக இருந்தாலும்கூட ஆயிரம் சாதி இங்கு உண்டு என்பதை அன்றைக்கே தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி வேதனையோடு ஒத்துக் கொண்டிருந்தார். சாதிகள் இருப்பதற்காக சுதந்திரம் வேண்டாம் என்று யார் சொல்வார்கள். சுதந்திரம் வாங்குவது வேறு. சாதிகளை ஒழிப்பது வேறு. அந்த நிலையிலேதான் அன்றைக்கு சொல்லப்பட்டது. சுதந்திரத்திற்காகப் போராடினோம் வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது நமக்குள்ள கடமை என்னவென்றால் பெற்ற சுதந்திரத்தைப் பேணி காத்திட வேண்டும். அந்தக் கடமையை நாம் செய்தாக வேண்டும். சுதந்திரம் எவ்வளவோ கஷ்டத்திற்கிடையே நாம் ரத்தம் சிந்தி, தூக்கு மேடை ஏறி, சிறைச்சாலையில் அடைபட்டு, சித்தரவதைகளை ஏற்றுக்கொண்டு, செக்கிழுத்து, கஞ்சிக் கலையம் ஏந்தி இப்படியெல்லாம் வேதனைப்பட்டு விடுதலை பெற்றிருக்கிறது.

இந்த நாடு பெற்ற விடுதலையை வீணாக்கி விடக்கூடாது. பெற்ற சுதந்திரம் வீணாவதற்கு இன்றைக்கு இருக்கின்ற வழிகள் மதச்சண்டை, சாதிச் சண்டை இவைகள்தான். இவைகளை விட்டொழிக்க வேண்டும். மச்சார்பற்ற நிலையை, மத நல்லிணக்கத்தை, மனித நேயத்தை உருவாக்கி, ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாரதி சொன்னதை மெய்யாக்கிடப் பாடுபட வேண்டும். அதற்கு ஏற்ற வகையிலே தான் இந்த மண்டபம் தன்னுடைய பயனை விளைவிக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த நம்பிக்கையை நான் பெறுகின்றேன். இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளையில்லாவிட்டாலும் மறுநாள் ஒரு சமத்துவ தமிழகத்தை, சமத்துவ இந்தியாவை நாம் உலகிற்கு நிச்சயமாக அறிமுகப்படுத்துவோம். அதை இந்தத் தியாகிகள் மணிமண்டபத் திறப்பு விழாவில் ஒரு சூளுரையாக மேற்கொள்வோம் என்று கூறி உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும், நன்றியையும் காணிக்கை யாக்குகிறேன்.

*– கிண்டியில் காந்தி மண்டபம் அருகில் 2.10.1998 அன்று, தியாகிகள் மணிமண்டபத்தை திறந்து வைத்து, முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து....*

# ‘திராவிட நாடு’ – கிழமை இதழ்

- முனைவர் ஏ.விவேகானந்தம்
தமிழ்ப் பேராசிரியர்
மாநிலக் கல்லூரி, சென்னை.

‘திராவிட நாடு’ இதழில், இதர தம்பியரை எழுதவைத்துப் பயிற்சி கொடுத்த அண்ணாவின் பாங்கு பெருமைப்படத்தக்க ஒன்றாகும். கலைஞர், பேராசிரியர், நெடுஞ்செழியன், மதியழகன், சி.பி.சிற்றரசு, என்.வி.என்.நடராசன், அரங்கண்ணல், ப.உ.சண்முகம், ராதாமணாளன், தில்லை வில்லாளன், ம.கி.தசரதன் முதலானவர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் அரங்கண்ணலும் தில்லை வில்லாளனும் ‘திராவிட நாடு’ துணையாசிரியர்களாகவும் இருந்துள்ளனர். ஈழத்து அடிகள் ‘திராவிட நாடு’ இதழ் நடத்துவதற்கு முழுவதுமாக ஆசிரியர்க்கு உடனிருந்து ஒத்துழைத்ததோடு பல அரிய விமர்சனங்களையும் கட்டுரைகளையும் அளித்துப் பணிபுரிந்துள்ளார். “ஆச்சாரியார் அநுமாரைக் கண்டார்; சாஸ்திரியார் வால்மீகியை அறிந்தார்” (திராவிட நாடு 12–04–1953) முதலான சீர்திருத்தக் கருத்துகளங்கிய கட்டுரைகள் படைத்த பெருமை ஈழத்து அடிகளுக்கு உண்டு.

1926–இல் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இஃது ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம் – இதனுடைய நோக்கம் தன்மான உணர்ச்சியூட்டுவது. இவருடைய அடிப்படையான பணி பகுத்தறிவு கொள்ளச் செய்வது. இன்றுவரை இப்பணி புரிந்துவரும் தலைவர்களும், தொண்டர்களும் இருந்துவருவது பெரியாருக்குக் கிடைத்த வெற்றிகளுள் மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். அண்ணா அவ்வியக்கத்தின்பால் ஈர்க்கப்பெற்றுத் தான் தம் பொதுவாழ்வைத் தொடங்கினார். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகிய மூன்று கட்சிகளிலும் இருந்து இவ்வியக்கத்தைப் பெரிதும் வளர்த்துள்ளார். ‘தன்மானம்’ என்பது அவருடைய மூச்சு.

தமிழின் தொன்மை, உயர்வு, தனித்தன்மை ஆகியன தன்மான இயக்கத்தை அரண் செய்தன. ‘எந்தச் செயலானாலும் காரண காரியம் அறிந்து செய், சரியா? தவறா? என்பதை அந்தக் காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுவிடு; எந்த ஒரு நெருக்கடியிலும் அவ்வாராய்ச்சிக்கு உட்படுத்து; அதன் முடிவுக்கு மரியாதை கொடு என்பதுதான் தன்மான இயக்கத்தின் தத்துவம். ஆதலால் இவ்வியக்கம் தமிழுக்கு முரணாக இல்லாததோடு தமிழியக்கத்தோடு பிணைந்ததாக ஆகிவிட்டது.

தன்மான இயக்கம், மனித சமுதாயத்தைப் பகுத்தறிவுப் பாதையில் அழைத்துச் சென்று ஒழுக்க நெறிக்கு இட்டுச் செல்லும் பணியை மேற்கொண்டது. பெண்ணுரிமை, சாதியொழிப்பு, ஆலயங்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைவுபெறல் முதலான பல முன்னேற்றங்கள் ஏற்படலாயின.

“ஊழ்வினையே பேசி ஆள்வினை யற்றிருக்கும் அளவும் நாம் உய்யுமாறில்லை” – என்பதையுணர்ந்த அண்ணா இவ்வியக்கத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டார். சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்துக்குத் தலைவராக விளங்கியதுண்டு. ‘ஆரிய மாயை’ நூல் எழுதியது இவ்வியக்கத்தை நாடறியச் செய்தது.

பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார், கி.ஆ.பெ.விசுவநாதம் முதலானோர் தொடக்க காலங்களில் இவ்வியக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் ஆவர். திராவிடர் கழகம் இவ்வியக்கத்தைப் பெரிதும் வளர்த்தது. அண்ணா, திராவிடர் கழகத் தளபதியாகப் பத்தாண்டுக்காலம் பணியாற்றியவர். ஆதலால் அண்ணாவின் தன்மான இயக்கப்பணி அளவிடற்கரியது.

நாடகங்கள் வாயிலாக அண்ணா பிரச்சாரம் செய்தார். இவ்வியக்கம் விரைவாக வளரத் தொடங்கியது. அண்ணாவின் புகழ் நாடெங்கும் பரவியது; சந்திரோதயம், நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன் – ஆகிய நாடகங்கள் பகுத்தறிவுப் பணியை வளர்க்க உதவின. அவற்றைத் தீட்டியதோடு அமையாமல், தாமே பாத்திரமேற்று நடித்தார். ஆதலால்தான் ‘கூத்தாடிகள்’ என மாற்றார் தூற்ற முயன்றார்கள்; வசவுகளை எதிர்கொண்டு, “வாழ்க வசவாளர்கள்” என்ற புகழ்மிக்க கட்டுரையை வரைந்து, அவற்றை எதிர்கொண்டார். ‘கரி தன் குட்டிக்கு வீரமும் திறமும் வளர்வதற்காக, துதிக்கையால் குட்டியை இழுத்தும் தள்ளியும், தட்டியும் கொட்டியும் பயிற்சி தரும் என்கிறார்கள். தி.மு.கழகத்துக்கு அத்தகைய பயிற்சியைத் தந்திருக்கிறது திராவிடர் கழகம். பயிற்சி போதவில்லையோ என்று ஒருவேளை எண்ணிக்கொண்டு மறுபடியும் பயிற்சி தர முன்வரக்கூடும். அதைத் தவறாகக் கருதவேண்டாம்” (திராவிட நாடு 2.12.1951)– என்று அக்கட்டுரையில் உவமை நயத்தோடு எழுதியது அவருடைய பேராற்றலையும் பெருந்தன்மையையும் விளக்க வல்லது.


## இந்தி எதிர்ப்பு

தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு என்பது நீறுபூத்த நெருப்பாக இருந்துவருகிறது. தமிழர்களைப் பொருத்தவரையில், இந்தி எந்த உருவத்தில் நுழைக்கப்பெற்றாலும் எதிர்ப்பு இருந்துகொண்டே வருகிறது. காரணம் அவ்வப்போது ஏதாவது ஒரு பெயரில் இந்தி புகுத்தப்படுவதுதான்.

1938–இல் இராஜாஜி முதலமைச்சராக இருக்கும் போது பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாகியது; எதிர்ப்பு உருவாகியது. மறைமலை அடிகளார் உள்ளிட்ட சான்றோர் பலரும் இந்தியை எதிர்த்தார்கள். தாளமுத்து, நடராசன்–இருவர் உயிர்த்தியாகம் செய்தார்கள். 1940–இல் கட்டாய இந்தி, கல்லறை சென்றது.

1948–இல் மீண்டும் பள்ளிகளில் இந்தி தலைகாட்டியது – விடுதலை இந்தியாவில் இந்தி தேசியமொழி என ஆகியதன் விளைவுதான் இதன் காரணம். முன்பு இருந்ததைவிட எதிர்ப்புக் கடுமையாகியது. அரசு பின்வாங்கி, கட்டாய பாடமாக இருந்த இந்தியை விருப்பப் பாடமாக மாற்றியது. அரசியல் சட்டப்படி 1965 முதல் இந்தி, இந்தியாவில் ஆட்சிமொழி என்னும் நிலை உருவாகியது. தென்னகத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் இந்தி

ஆட்சிமொழி நிலைக்குக் கண்டனம் எழுந்தது. ஆதலால், பாராளுமன்றத்தில் பண்டிதநேரு ஓர் உறுதிமொழி அளித்தார். ''ஆங்கிலத்தை அகற்றிவிடமாட்டேன்; இந்தி பேசாத மக்களுடைய சம்மதம் பெறாமல், இந்தியை ஆட்சிமொழி ஆக்கிடமாட்டேன்; இந்தி ஆட்சிமொழி ஆகவேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை இந்தி பேசாத மக்களுக்கே அளிப்பேன்" — இதுதான் நேரு அளித்த வாக்குறுதி.



*காஞ்சிபுரம் மாவட்டம் தாமலில், 13 ஏக்கர் நிலத்தில் வளர்க்கப்படும் ஜனப்பை எனும் தழைச்சத்துக்கு உதவும் செடி.*

1963 வரையிலும் இந்த உறுதிமொழிக்குச் சட்டவடிவம் கோரி வந்த தென்னக மக்களுக்கு, குறிப்பாகத் தமிழக மக்களுக்கு ஏமாற்றம் ஏற்படும் நிலை. அது அண்ணாவுக்கும் அவரைச் சார்ந்த கழகத்தவர்க்கும் என்றில்லாமல் பல தலைவர்களுக்கும் கவலையைத் தந்தது. இந்தச் சூழலில் அண்ணா இந்தி எதிர்ப்பு அறப்போர் அறிவித்தார். அரசியல் சட்டமொழிப் பிரிவைக் கொளுத்துவது என்பது போராட்டத் திட்டம். வழக்கம்போல் அண்ணா தாமே நேரடியாகப் போராட்டத்தில் இயங்குவதாக அறிவித்தார். போராட்ட நாள் 17—11—1963 மாலை; இடம் திருவல்லிக்கேணி கடற்கரை. ஆனால் அண்ணாவையும் மற்ற தலைவர்களையும் அன்று காலையே கைது செய்யப்பெற்றனர். வழக்கு நடந்தது. ஆறுமாதம் தண்டனை பெற்றார். அக்காலத்தில் அவர் மத்திய இராச்சியசபை உறுப்பினர். இருந்தும் எல்லோருக்கும் போன்ற சிறைவாசம், சிறை உடுப்பு, வாரம் ஒரு முறை அவ்வுடுப்புடன் வரிசையில் நிற்றல், நாளும் நூல் நூற்றல், சமையல் செய்தல் முதலான சிறைக்கொடுமைகள். படிப்பதற்குப் புத்தகங்கள் சரியாக தருவதில்லை. ''ஆர்த்தரைட்டிஸ்'' என்னும் தோள்வலியால் உடல் துன்பம்; ஆயிரக்கணக்கான தம்பியர்க்குச் சிறைவாசம் என்ற மனத்துன்பம் — இவை அவரைச் சோதனைக்கு உள்ளாக்கின. உண்மையில் இம்முறை அவருடைய சிறைவாழ்வு அவருக்கு மிகப்பெரும் செல்வாக்கை ஏற்படுத்தித் தந்தது என்றே கூறவேண்டும்.

## திராவிட நாடு

'திராவிட நாடு' வெறும் இதழ்ப்பெயரா? இல்லை. திராவிட உணர்வுகளின் வெளிப்பாட்டையும், அவற்றால் உண்டான சுயமரியாதை, இந்தி எதிர்ப்பு ஆகியவற்றோடு திராவிட நாடு அமைவுக் கொள்கையையும் கொண்ட இயக்கப் பெயராகவும் திகழ்ந்தது.

இந்தியா ஒரு துணைக்கண்டம். பல இனத்தவர், மொழியினர், பண்பாட்டினர், வாழ்கின்ற பெரும்பரப்புடையது. தென்னிந்தியாவில் நிலைத்து வாழ்ந்து வருபவர்கள் திராவிட இனத்தவர்கள்; தனியான பண்பாடு, கலை, இலக்கியம், உணவுமுறை, பழக்கவழக்கங்கள் கொண்டவர்கள்.

தனித்தனி நாடுகளாக இருந்துவந்த இந்தியத் துணைக்கண்டத்தை ஆங்கிலேயர்கள் ஒரு நாடாக்கி வைத்தனர். எனினும் தனித்தனி முடியரசு சமஸ்தானங்களும் பிரெஞ்சு முதலிய காலனி அரசுகளும் இருந்துவந்தன. அந்த வகையில் திராவிட நாடு தனியரசாக விளங்கவேண்டும் என்ற கோரிக்கை 1940—இல் எழுந்தது.

1947—இல் விடுதலை வழங்கிய வெள்ளையர்கள், ஜின்னா கேட்ட பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தார்கள். ஆனால் பெரியாரும் அண்ணாவும் கேட்ட திராவிட நாடு தரவில்லை. அந்நாள்களில் திராவிட இனத்தவர் மத்திய சட்டசபையில் இரண்டொருவரே உறுப்பினர்களாக இருந்தனர்.

1949—இல் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி அண்ணா தம் ஆதரவாளர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனி அமைப்புக் கண்டார். ஆனால், நோக்கம் வேறாக இல்லை. அதாவது அதே திராவிட நாடு கோரிக்கைதான் தி.மு.க.வின் நோக்கமாக இருந்துவந்தது.

1953—இல் மொழிவழி மாநிலங்கள் ஏற்பட்டுவிட்ட பிறகு, பெரியார் அவர்கள், 'தமிழ்நாடு தமிழருக்கே' எனும் உரிமை வேட்கையைத் தூண்டும் முயற்சியில் இறங்கினார். ஆனால் அண்ணா 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற நிலையிலிருந்து மாறவில்லை.

1963—ல் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்திப் பிரிவினை கேட்பதைத் தடை செய்தார்கள். "தேர்தலில் நாம் ஈடுபடுவதை எப்படியாவது தடுத்திட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம் என்பது புரிந்தது. புரிந்திடவே நாம் நமது சட்டதிட்டத்தை மாற்றிக் கொண்டு நாட்டுப்பிரிவினை மூலம் எதெதனைப் பெற முடியுமோ அததனைப் பெறத்தக்க விதமாக இந்திய அமைப்பிலே இருந்துகொண்டே பெறத்தக்க வழி காண்போம்"— என்று அறிவித்தார்.

## சமூகப் பொருளாதார சமத்துவம்

அண்ணா சமூக அமைப்பின் அடித்தளத்தைக் கண்டு ஆய்ந்து கருத்துக்களைத் தெளிவாகத் 'திராவிட நாடு' இதழ்களில் வழங்கியுள்ளார். ஒரு சிறந்த சமூகம் என்பது, மிகச் சிறந்த இன்பத்தை மிக அதிகமான மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான். அவ்வாறு கிடைக்கவில்லை, கிடைக்கச் செய்ய முடியவில்லை என்றால் காரணம் என்ன? என மிக ஆழ்ந்து சிந்தித்து, அறியாமை மற்றும் ஏழ்மை

எனும் இரண்டின் கூட்டாலும் சமூகம் பின்தங்கிக் கிடக்கிறது என்பதை உணர்ந்தார்.

'இந்நாட்டில் என்ன இல்லை? இயற்கை வளம் இன்னும் பல தலைமுறைகளுக்கும் பயன்படுகிற அளவுக்கு உள்ளது. இயற்கைச் சூழல் நமக்குப் பெரிய பாதுகாப்பு. அப்படி இருக்கும்போது நாட்டில் ஏன் முன்னேற்றம் இல்லை? சமூக அமைப்பே முட்டுக்கட்டையாக இருந்துவருகின்றது. மனுதர்மம் என்ன செய்திருக்கிறதென்றால், ஒரு குறிப்பிட்ட கூட்டத்துக்கு மிகப்பெரிய ஆயுதமாக மிகப்பெரிய அரணாக, மிகப்பெரிய பாதுகாப்புக் கோட்டையாக வருணாசிரமத் தர்மக் கோட்பாட்டை உருவாக்கிக் கட்டிக்காத்து வருகிறது. அந்தக் கோட்டையை தகர்க்காமல், வேறு எந்த கோட்டையைத் தகர்த்தும் பயனில்லை'' என்பார் டாக்டர் பெறற்கோ. எந்த ஓர் இனமும் அதன் பிரதிநிதிகளின் பரிணாம வளர்ச்சியில் மற்ற இனங்களை விட உயர்ந்ததோ தாழ்ந்ததோ அன்று என்பது மனித இன ஆராய்ச்சியின் முடிவு ஆகும்.

மனித வாழ்வையும் வாழ்வின் அமைப்பையும் உண்டு பண்ணுபவன் மனிதன். மனிதனை அவை உண்டு பண்ணுபவை அல்ல. இவ்வுலகத்தில் தெய்வச்செயல், அதிர்ஷ்டம், மந்திரம், அற்புதம் என்பன இல்லவே இல்லை. ஒவ்வொரு சம்பவத்துக்கும் சிந்தனைக்கும் இயல்பான காரணம் ஒன்று உண்டு. ஒழுக்கத்துக்குக் கடவுள் சித்தமே காரணமென்ற நம்பிக்கையினாலேயே உலகத்தில் கொடுமைகளும் துன்பங்களும் நிறைந்திருக்கின்றன. அந்த நம்பிக்கையினால் பகுத்தறிவு ஒளி மழுங்கி உலக முன்னேற்றத்திற்கும் தடை ஏற்பட்டுவிட்டது – என்பது இங்கர்சால் கருத்தாகும்.

ஆதலால், மூடநம்பிக்கைகள், தேவை இல்லை. அவை ஒழிந்தாலன்றி சமூக மேம்பாடு காண்பது இயலாது என்பதை ஓர்ந்தார் அண்ணா. வாழ்க்கை அரசியலோடு இரண்டறக் கலந்துவிட்டது. ஆகவே, சமநெறிச் சமுதாயம் காணவேண்டுமானால், சமநெறி அரசியல் வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசியல் உரிமை வேண்டும் என்பதை விளக்கும் வகையில் அமைந்துள்ள குறிப்பு ஒன்று வருமாறு:

'சமதர்மத் திட்டம், கிராமபோன் பிளேட்போலக் கிராமபோன் தயாராகாமல், பிளேட் எப்படிப் பாடும்? நாம் தான் (தி–மு.க.தான்) சமுதாயக் கிராமபோனைத் தயாராக்கி வருகிறோம். நம்மிடம் சமதர்ம பிளேட்டும் சமுதாயக் கிராமபோனும் அரசியல் ஊசியும் இருக்கிறது' (திராவிட நாடு 23–12–1951). இக்குறிப்பு அரசியல் ஊசி என்னும் திராவிட நாடு தனிநாடு என்ற பிரிவினைக் கொள்கையை வலியுறுத்துகின்றது. ஆக, அரசியல் விடுதலை வாங்கினாலான்றிச் சமநெறிப் பொருளாதார சமத்துவம் காணமுடியாது என்ற அடிப்படையான குறிக்கோளை நிலைநிறுத்தித் தம்முடைய திராவிட நாடு இதழில் இருபத்தோராண்டுகள் எழுதிவந்துள்ளார்.

### பண்பாட்டு இயக்கம்

சமுதாயச் சீர்திருத்த நோக்கில் உருவாகிய திராவிட இயக்கம் ஒரு பண்பாட்டு இயக்கம் போலவே வளர்ச்சியடைந்தது. காரணம், திராவிடப் பண்பாட்டு அடிப்படையில் அமைத்துக்கொண்டே 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற மூலாதாரக் கொள்கையேயாகும். மேலும் பேரறிஞர் அண்ணா திராவிட இயக்கத்திற்குத் தலைவர் என்று பூதவிப்பெயர் வைத்துக்கொள்ளாமல் வழங்கிய தலைமையும் தம் தம்பியரை அரவணைத்துச் சென்ற பாங்கும் மக்களிடையே ஏற்படுத்திக்கொண்ட ஓர் அன்புப் பிணைப்பும் திராவிட இயக்கத்தை ஒரு பண்பாட்டு இயக்கமாக வளர்த்துவிட்டன என்றால் அது மிகையாகது. தமிழில் திராவிட நாடு இதழ் நடத்திக் கொண்டிருக்கும்போது ஆங்கிலத்தில் ஓர் இதழ் (ஹோம் லாண்டு) தொடங்கத் திட்டமிட்டார் அண்ணா. அந்தத் திட்டத்தை அறிவித்துத் திராவிட நாடு இதழில் (21–7–1957) எழுதிய ஒரு குறிப்பு வருமாறு :

> **சா**திகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணுபவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள்.
>
> **- அறிஞர் அண்ணா**

''ஆங்கில இதழின் உணர்ச்சியிலேயே என்னை நான் பின்னிக்கொண்டு உன்னுடன் உரையாடும் மகிழ்ச்சியை (திராவிட நாடு இதழில் வாரந்தோறும் தம்பிக்கு மடல் எழுதுவதில் உண்டாகும் மகிழ்ச்சி) இழந்துவிடுவேனோ என்று ஐயப்படாதே! தம்பி, அது (ஆங்கில இதழ்) முந்திரிப் பருப்பானால், இது (தமிழ் இதழ்) வெண்பொங்கல்! அது கருவி, இது என் உள்ளம்! அது பிறர் நெஞ்சைத் தொட, இது உன்னுடன் உறவாட! அது நம்மைப் பிறருக்கு விளக்க; இது நம்மை உருவாக்க; எனவே இதனை இழந்துவிட ஒரு போதும் சம்மதியேன்''.

இக்குறிப்பு உணர்த்துவது யாது? திராவிட நாடு இதழில் தம்பிக்குக் கடிதப் பகுதி வாயிலாகப் பேரறிஞர் அண்ணா தம் கடிதத் தம்பியரிடையே ஓர் அன்புப் பிணைப்பை உருவாக்கினார். அந்த ஈர்ப்புச் சக்தி பெருகியது. அச்சக்தி தம்பியரல்லாத நடுநிலையாளரையும் சான்றோரையும் ஏனைய பல திறத்தாரையும் அவர்பால் ஈர்த்தது. அச்சக்தியை ஆங்கிலத்தில் 'சரிஸ்மா' எனக் குறிப்பிடுவர்.

திராவிட இயக்க வரலாற்றில் இதழ்களின் பணி மிகவும் இன்றியமையாத பணியாகும். இயக்கக் கருத்துகள் சமுதாயத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிக்கத் தொடங்கின. உணர்ச்சி பெற்று விழிப்படைந்த இலட்சக்கணக்கானோர் அணி அணியாகத் திரண்டனர்.

''ஒருவரை நம்பி ஒருவர் வாழக் கற்றுக்கொண்டோம்; தனி மனிதர்களைவிட ஓர் அமைப்பே முக்கியம் என்ற தத்துவம் நடைமுறைக்கு வந்துவிட்டது. வளர்ச்சி சாதாரணமானதன்று'' (திராவிட நாடு 8.5.1955) என்று பேரறிஞர் அண்ணா எழுதிய ஒரு கடிதப் பகுதியே சரியான சான்றாகும். பேரறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழ்ப்பணி தன்னிகரற்று விளங்குகிறது. அவர் தம் இதழின் வாயிலாக உண்டாக்கிய தமிழார்வம், தமிழுக்கு வழங்கிய மறுமலர்ச்சிப் படைப்புகள், உருவாக்கிய பண்பாடு அடிப்படையிலான அரசியல் முறை, எல்லாவற்றுக்கும் மேலாகப் பல இலட்சக்கணக்கான மக்களிடையே ஏற்படுத்திய இன எழுச்சி ஆகியவை ஒப்பற்றவை. ●

*விடுதலை வீரன்*

# தீரன் சின்னமலை

- முனைவர் கா. அரங்கசாமி




கும்மியடி பெண்கள் கும்மியடி
கொங்கு குலுங்கிடக் கும்மியடி
எங்கும் புகழ் மிக்க சின்னமலையதோ
தோற்றந் தருவதைப் பாருங்கடி.

கட்டுத் தடிக்காரர் முன்னடக்கக்
கருப்ப சேர்வையும் பின்னடக்க
வட்டப் பொட்டுக்காரச் சின்னமலையதோ
வரா சவுரியம் பாருங்கடி.

பாடுங்கடி பிள்ளாய் பாடுங்கடி
சின்னமலை வெற்றி பாடுங்கடி
நாடுங்கடி பிள்ளாய் நாடுங்கடி
நாட்டின் விடுதலை நாடுங்கடி.

பட்டத்துக் கத்திபளபள வெனச் செல்லும்
பாளையக் காரர்கள் முன்னடக்க
வெட்டுந் துரைமகன் சின்னமலை வரும்
வித்தாரம் தன்னையும் பாருங்கடி.



திண்ணையத் திண்ணையப் பாருங்கடி
தெருவுத் திண்ணையும் பாருங்கடி
மன்னவன் தீரத்தைப் பாடுங்கடி
மதிப்பொடு வாழவே கூடுங்கடி.

சின்னமலை குதிரெ வரும்
ஏலேலோக் கும்மி ஏலேலோ
சித்தி யெல்லாம் முடிச்சுவரும்
ஏலேலோக் கும்மி ஏலேலோ



தீரனவன் பவனி வரும்
ஏலேலோக் கும்மி ஏலேலோ
திசைகளெட்டும் முழங்கிவரும்
ஏலேலோக் கும்மி ஏலேலோ
கொங்கு நாட்டுத் தீரன் வாழ்க
ஏலேலோக் கும்மி ஏலேலோ
எங்கள் நாட்டு மன்னன் வாழ்க
ஏலேலோக் கும்மி ஏலேலோ

- விடுதலை வீரன் தீரன் சின்னமலை வரலாறு -
மேடை நாடகம் என்னும் நூலிலிருந்து.

# பிற்படுத்தப்பட்டோர் நலம் காக்கப்படுகிறது

சமுதாயத்தில் சமூக பொருளாதார ரீதியில் நலிவுற்றுக் கிடக்கும் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களின் கல்வி முன்னேற்றம், பொருளாதார மேம்பாடு, வீட்டுமனை வசதி, தொழிற்கருவிகள் வழங்குதல், தங்கிப் பயின்றிட விடுதி வசதி செய்து கொடுத்தல் ஆகிய தலையாய பணிகளை காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்துறை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

இத்துறையின் மூலம், நிலஎடுப்பு - வீட்டுமனை வழங்குதலில் காஞ்சி மாவட்டம் மாநிலத்திலேயே முதல் நிலை வகித்ததால், மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலருக்கும் அரசால் நற்சான்றிதழி வழங்கப்பட்டுள்ளது. விடுதிப் பராமரிப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு மேல் தேவையின்றி செலவழிக்கும் காப்பாள/காப்பாளினிகளின் கேட்பிலிருந்தே கழிவு செய்து எஞ்சிய தகுதியுடைய தொகையினைச் சேரச் செய்வதிலும், உறைவிடதாரருக்குத் தரமான உணவு/தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருதல், தவறிழைக்கும் காப்பாள/காப்பாளினி காவலர்/சமையலர்கட்குத் தண்டனை வழங்குதல் மூலம் விடுதி நிர்வாக மேம்பாடு இம்மாவட்டத்தில் தரப்பட்டுள்ளது.




### *நில எடுப்பு - விட்டுமனைப் பட்டா வழங்குதல்*

1997-98ல் ரூ.51.23 இலட்சம் செலவில், 983 மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு நபர்கட்கும், ரூ.31.11 இலட்சம் செலவில் 1,027 பிற்படுத்தப்பட்ட வகுப்பு நபர்கட்கும் ஆக ரூ.82.34 இலட்சம் செலவில் 2,010 நபர்கட்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகப் பெருந்திடலில் நடைபெற்ற விழாவில் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

நடப்பு ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென ரூ.30 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கென ரூ.35.10 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.65.10 இலட்சத்தில், 31.8.98லேயே ரூ.53.34 இலட்சம் செலவிடப்பட்டது என்பது சீரிய சாதனையாகும்.

**1996-97ல், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ.5 இலட்சமாக இருந்த ஒதுக்கீடு ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டது என்பது முன்னேற்றத்தின் வேகத்தைக் காட்டுவதாயுள்ளது.**

### *கல்வி–உதவித் தொகைகள் (பள்ளிப் படிப்பு)*

கடந்த ஆண்டில், 12,100 செட் இலவசப் பாடப் புத்தகங்கள் 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 6100 பேருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 6000 பேருக்கும் வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டில், 14,700 செட் இலவசப் பாடப்புத்தகங்கள் 9ஆம் வகுப்பு மற்றும்10ஆம் வகுப்பு பிற்படுத்தப்பட்ட 7900 மாணவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட 6800 மாணவர்க்கும் வழங்கப்பட்டன.

### *கல்லூரிப் படிப்பு - கல்வி உதவித்தொகை*

1997-98ல், ரூ.11.62 இலட்சம் செலவில், 5,050 பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், ரூ.12.74

இலட்சம் செலவில், 5,200 மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களும், ஆக 10,250 மாணவர்கள் பயன்பெறும் வகையில் பிளஸ்-1 முதல் எந்த முதுநிலைப் படிப்பு வரையிலும் வழங்கிடும் வகையில் ரூ.24.36 இலட்சம் செலவிடப்பட்டது.

நடப்பு 1998-99ஆம் ஆண்டில், ரூ.20.9 இலட்சம் செலவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 5,200 பேருக்கும், ரூ.15.41 இலட்சம் செலவில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களும் ரூ.5.50 இலட்சம் ஆக 7,135 மாணவர்களுக்கு ரூ.20.9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *இலவசக் கல்வித் திட்டம்*

மிகவும் பிற்பட்டவகுப்பினர் நபருள் பெரும்பாலோரை இலவசக் கல்வி திட்டம் எனும் கவர்கள் செலுத்திய முன் கட்டணத் தொகையையும் திரும்பப் பெறும் வசதி உள்ளதால், கல்வி உதவித்தொகை பெறுவோர் எண்ணிக்கை அவர்களுள் குறைந்து காணப்படுகிறது.

மாதாமாதம் தலா ரூ.10 சோப்பிற்காக வழங்கப்படுகிறது. இந்து, தினமணி, முரசொலி செய்தித் தாள்கள் தினசரி தருவிக்கப்படுகிறது. மிக முக்கியம் வாய்ந்த புத்தகங்களைக் கொண்ட சிறு நூலகமும் ஒவ்வொரு விடுதியிலும் உள்ளன. 10ஆம், 12ஆம் வகுப்பு இறுதித் தேர்வு எழுத விழைவோருக்குச் சிறப்பு வழிகாட்டி பெற்று வழங்கப்படுவதுடன், ஆண்டுக்கு 3 மாதம் சிறப்புப் பகுதி நேரப் போதகர்களைக் கொண்டு பயிற்சி வழங்கப்படுகிறது. தேச வரைபடத் தொகுப்புப் புத்தகம், உடற் பயிற்சிப் புத்தகம், பொருள் அகராதி, பொது அறிவு, இலக்கிய இலக்கணப் புத்தகங்கள் யாவும் நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### *விருதுகள் வழங்குதல்*

(அ) பிளஸ்-2 தேர்வில் முதலிரண்டு மதிப்பெண்கள் பெற்ற மாவட்ட அளவிலான பி.வ./மி.பி.வ., தொழிற் பட்டப்படிப்பு (மருத்துவம், பொறியியல், விவசாயம் போன்றவை) பயின்ற அனைத்து 4 ஆண்டுகட்கும். பேரறிஞர் அண்ணா விருது இரு ஆண், இரு பெண்

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் பயன்பெற்றோர் விவரம்:

| | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | | மிக பிற்படுத்தப்பட்டோர் | |
|---|---|---|---|---|
| 1996-97 | எண்ணிக்கை | தொகை (இலட்சத்தில்) | எண்ணிக்கை | தொகை (இலட்சத்தில்) |
| | 1,215 | 14.67 | 1,741 | 43.28 |
| | 1,355 | 16.75 | 1,850 | 48.54 |
| 1998-99 (உத்தேசிக்கப்பட்டது) | 1,500 | 11.00 | 2,400 | 195.00 |

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் முதல் பட்டதாரியாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனை கல்வி உதவித் தொகை பெறுவோருக்குப் பொருந்தாது. எனவே, அதிக அளவில் இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர்.

### *விடுதிகள் பராமரிப்பு*

இம்மாவட்டத்தில் 4 பிற்பட்ட வகுப்பு விடுதிகள், 16 மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு விடுதிகள், 1 சீர்மரபினர் விடுதி ஆக 21 விடுதிகள் 1,060 உறைவிடதாரர்கள் தங்கிப் பயிலும் வசதிகொண்டு பயன்பெற இயங்கி வருகிறது.

இவற்றின் பராமரிப்பிற்காகக் கடந்த 1997-98ஆம் ஆண்டு (பிவ) விடுதிகட்கு ரூ.12.01 இலட்சமும், (மிபிவ) விடுதிகட்கு ரூ.20.59 இலட்சமும் செலவிடப்பட்டது.

நடப்பு 1998-99ஆம் ஆண்டிற்கு (பிவ) விடுதிக்கட்கு ரூ.28.70 இலட்சமும் (மிபிவ) விடுதிகட்கு ரூ.41.79 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாமாண்டு 1996-97ல் (பிவ) விடுதிகட்கு ரூ.15.97 இலட்சமும் (மிபிவ) விடுதிகட்கு ரூ.25.32 இலட்சமும் செலவிடப்பட்டது.

விடுதி உறைவிடதாரர்கட்குப் பொங்கல்/தீபாவளி தருணத்தில் தலா ஒரு செட் சீருடை வீதம் ஆண்டுக்கு 2 செட் சீருடை வழங்கப்படுகிறது. வாரமொரு முறை முட்டையும் மாதமிருமுறை மாமிசமும் வழங்கப்படுகிறது; தகுந்த காலவெளி முகாம்களில் உணவின் தரம் பரிசோதிக்கப்படுகிறது.

ஆக 4 பேருக்கு தலா ரூ.3,000 வீதம் வழங்கப்படுகிறது. இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் 16 நபர்கள் ரூ.48,000 பெறுவர்.

(ஆ) அதுபோலவே 10ஆம் வகுப்பில் தேர்வில் முதலிரண்டு மதிப்பெண்களை பெற்ற மாவட்ட அளவிலான பி.வ./மி.பி.வ. வகுப்பினர், பட்டய (டிப்ளமோ) படிப்பு (இயந்திரவியல், சிவில், எலக்ட்ரிகல் போன்றவை) பயின்ற அனைத்து, 3 ஆண்டுகட்கும் தந்தை பெரியார் விருது இரு ஆண், இரு பெண் ஆக 4 பேருக்கு தலா ரூ.3,000 வீதம் வழங்கப்படுகிறது. இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் 12 நபர்கள் ரூ.36,000 பெறுவர்.

### *மான்யம் பெறும் தனியார் விடுதிகள்*

இத்துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளான மாம்பாக்கம், குருகுலம் மற்றும் மல்லியங்கரணை ராமகிருஷ்ணா மிஷின் தனியார் விடுதிகளின் உறைவிடதாரர்கட்கு மாதம் ரூ.120 வீதம் 10 மாதங்கட்கு தலா ரூ.1,200 வீதம் 3 தவணைகளாக வழங்கப்படுகிறது.

*முடிதிருத்தகம் அமைத்திட/சலவையகம் அமைத்திட / நடமாடும் சலவையகம் அமைத்திட (மிபிவ) வகுப்பினருக்கு, அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்:-*

அரசு மானியம் ரூ.1,500 உடன் தேசிய வங்கியின் குறைந்த வட்டிக் கடனாக ரூ.3,500 சேர்த்து ரூ.5,000ல் முடிதிருத்தகம் அமைக்கவும், சலவையகம் அமைக்கவும் தலா 8 பேர்கட்கும் (ஆக 16 பேர்கட்கும்), நடமாடும் சலவையகம் அமைக்க 2 நபர்கட்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நடமாடும் சலவையகத்திற்கு ஆக மானியம் ரூ.600 வங்கிக் கடன் ரூ.1,400 ஆகும்.

மருத்துவம்/பொறியியல் மேற்படிப்பு தொழிற் பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகட்குச் சிறப்பு முன்னேற்றப் பயிற்சி வகுப்புகள்:

மாவட்டத்திலுள்ள பிரசித்தி பெற்ற இடவசதி வாய்ந்த இரண்டு/மூன்று இடங்களில் இவ்வகைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெற்று ஆண்டுதோறும் பத்திரிக்கையில் விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்தப் பயிற்சி 15 நாட்களுக்கு ஆகும். உணவு/உறைவிட வசதி, அண்ணா பல்கலைக்கழக மாதிரி வினாத்தாள்கள் தரப்படுகின்றன. சேர்க்கைக்கு வருமான வரம்பு கிடையாது.

### இட ஒதுக்கீடு/சாதி விசாரணை

இத்துறையின் வியாபித்ததில் இல்லாத இதர துறைகளே இல்லையெனக் கூறலாம். இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படாத எந்தவொரு துறையில் எந்த அலுவலக முறைகேட்டினையும் தீவிர கவனத்திற்கு கொணர்ந்திடும் தருணம் தலையிட்டு சீர் செய்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதுபோலவே பொய்யான சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டோர் சார்பாகக் கவனத்திற்கு வரும் இடங்களில் நடவடிக்கை மேற்கொண்டு சாதிச் சான்று ரத்து செய்திட அதிகாரத்துடன், உரிய சாதியினரின் உரிய ஒதுக்கீடு மீறப்படாதிருக்கக் கண்காணிக்கக் கூடும்.

### வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சுருக்கெழுத்து/தட்டெழுத்து

ஆறுமாத காலத் தட்டச்சுப் பயிற்சிக்கு மாதம் ரூ.50 வீதம் ரூ.350 தேர்வுக் கட்டணம் ரூ.50ஆக ரூ.400ம் ஓராண்டு காலச் சுருக்கெழுத்துப் பயிற்சிக்கு மாதம் ரூ.50 வீதம் ரூ.600 தேர்வுக் கட்டணம் ரூ.50ம் வழங்க வேலைவாய்ப்புப் பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென நடப்பு 1998-99ஆம் ஆண்டு (பிவ) வகுப்பினருக்குத் தட்டச்சுக்கும் சுருக்கெழுத்திற்கும் ரூ.3,750 ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோலவே (மிபிவ) வகுப்பினருக்குத் தட்டச்சுக்கு ரூ.5,250-ம், சுருக்கெழுத்துக்கு ரூ.3,250-ம் ஆக ரூ.8,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

### இலவசக் கருவிகள் வழங்கும் திட்டம்

சலவைத் தொழில் புரிவோருக்கு ரூ.1,200 மதிப்புள்ள பித்தளை சலவை இஸ்திரிப் பெட்டி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு 1998-99ல் சுமார் 250 நபர்கட்கு இக்கருவிகள் வழங்கப்பட உள்ளன.

அதுபோலவே சவரத்தொழில் செய்பவர்கட்குச் சலவைக் கருவிப் பெட்டி வழங்கப்படுகிறது.

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

இம்மாவட்டத்திற்கு மேற்படி கழகத்தின் மூலம் ரூ.50,000-க்குக் கீழ் இரு அரசு ஊழியர் ஜாமீன், மேலும் 5,000க்கு மேல் சொத்து ஜாமீன் பேரில் தனி நபர் கடன் கோரி வரும் விண்ணப்பங்கள் யாவும் மாவட்ட ஆட்சித் தலைவரே தலைவராகவும் மற்றும் பல தொழில் வணிக/விவசாய/கூட்டுறவுத் துறை அதிகாரிகள்/வங்கி அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு மூலம் பரிசீலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கிகட்கு அனுப்பப்பட்டது. ☐

---

## காஞ்சிபுரத்தில் கனிம வளம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முக்கியமாக ஜல்லிக் கல், கிராவல், மணல், சவுடு போன்ற சிறு கனிமங்கள் அதிகமாகவே கிடைக்கின்றன.

கருப்புக் கிரானைட் திருக்கழுக்குன்றம் வட்டத்திலும், செய்யூர் வட்டத்திலும், சிலிகா மணல் செய்யூர் வட்டத்திலும் கிடைக்கின்றன.

சென்னையிலும் புறநகர்ப் பகுதியிலும் கட்டுமானப் பணிகளுக்கான ஜல்லி, மணல் போன்றவை இம்மாவட்டத்திலிருந்துதான் பெரிதும் கொண்டு செல்லப்படுகின்றன.

1997–98ஆம் நிதியாண்டில், இம்மாவட்டத்தில் கனிம வளத்தின் வருமானம் மட்டுமே ரூ.3.77 கோடியாகும். கடந்த நிதியாண்டில் 339 வாகனங்கள் அனுமதியின்றிக் கனிமம் எடுத்தமைக்காகத் திடீர் தணிக்கைகள் நடத்தப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. அபராதமாக ரூ.35 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

1998–99 நிதியாண்டில் ஆகஸ்ட் மாதம் முடிய 243 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, ரூ.36.8 இலட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டது. ஜூலை '98 முடிய கனிம வருமானம் ரூ.1.1 கோடியாகும்.

இம்மாவட்டத்தில் கனிமங்கள் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுவது முறைப்படுத்தப்பட்டது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை குவாரிப் பணி செய்யவேண்டும் என்றும், மணல் எடுத்துச் செல்லும் வாகனங்கள் தார்ப் பாயினால் மூடி கட்டி எடுத்துச் செல்லுமாறும் முறைப்படுத்தப்பட்டது.

இதனால் பாதசாரிகள், பின்தொடரும் பேருந்து பயணிகள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோர் கண்களில் மணல் விழுவது தடுக்கப்பட்டு, அதன் மூலம் ஏற்படும் அபாயகரமான விபத்துக்கள் முழுவதுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் கனிம விதிகளை மீறும் வாகனங்களைப் பிடிக்கத் திடீர் அதிரடிச் சோதனைகள் அடிக்கடி மாவட்ட ஆட்சியராலேயே நடத்தப்பட்டு வருகிறது. ☐

# தன்மானச் சிங்கம்



– சீனி.தேவராசன்



குருவிகளும் கிளிகளுமாய்க் கொஞ்சு கின்ற
கோலமிகும் சோலையிடை அமர்ந்தேன், அங்கே
ஒருகணத்துள் கண்ணயர்ந்தேன்; அந்த நாளில்
உருக்குலைந்த தமிழகத்தை நிமிரச் செய்ய
உருவெடுத்த பெரியாரே எதிரில் நின்றார்!
ஒற்றுமையாய்த் தெளிவுற்ற தமிழகத்தார்
சுருங்கடுகாய்ச் சிதறிவிட்ட நிலையைப் பற்றிக்
கலக்கத்தோ டும்கேட்டார் தலை குனிந்தேன்!

ஐம்பதாண்டு வளர்ந்திருக்கும் சுதந்தி ரத்தின்
அருமைதனை அறியாத மக்கள் கண்டேன்;
தம் நலத்தால் கன்றதனைக் கொன்று விட்டுத்
தாய்ப்பசுவின் அமுதப்பால் கொள்வார் போலத்
தம் சாதி மதப்பேரால் சண்டை போட்டுச்
சாகின்றார் எனக்கேள்விப் படுகின் றேனே!
சும்மாவா நான்பாடு பட்டேன்? அந்தச்
சோம்பேறிகள் கொட்டம் அடக்கும் ஐயா!

புகைக்கும் எதிரிகளின் குகையே ஆகிப்
புல்லர்களின் கைகள்மேல் ஓங்கும் காட்சி
நகைப்புக்கே உரியதன்றோ? தம்பி, நீ போய்
நாமெல்லாம் சகோதரர்என் றுணரச் செய்யேன்

தகைசான்ற தமிழரசின் அமைதி காத்து,
சாராயம், சூதாட்டம் இல்லா மல்செய்!
பகைநமக்கு நாமேயா? நீவெங் காயப்
பசங்களிடம் அஞ்சாதே! கெஞ்சாதே போ!

என்றுசொலிச் சீர்திருத்தம் கொழித்த செம்மல்
எழுச்சியுறும் கனல்மொழிகள் முழங்கும் நேரம்
கண்விழித்தேன்; பெரியாரைக் காண வில்லை!
கருத்துக்கள் பலவாகப் புகுத்த வல்லார்
தன்னுடலின் சலிப்பறியா அறிவின் ஜோதி
தமிழகத்துப் பட்டிதொட்டி தோறும் சென்றே
தன்மான முழக்கமிட்ட சேவைச் சிங்கம்
தன்னை, இனி மேலேநாம் காண்ப தென்றோ?

# மீனவர்கள் துயர் துடைப்பு!

திருக்கழுக்குன்றம் வட்டம், உய்யாலிக்குப்பம் எனும் கிராமம் 95 சதவீதத்திற்கு மேலாக மீனவர்களைக் கொண்டது ஆகும். இது கடற்கரையோரமாக அமைந்திருப்பதால் அடிக்கடி ஏற்படும் கடல் அரிப்பினால் மீனவர்கள் வீடுகள், உடைமைகளை இழந்து தவிப்பது என்பது ஒரு தொடர் நிகழ்வாகவே உள்ளது.

சுமார் 10 ஆண்டுகட்கு மேலாக இவர்கட்கு மாற்று இடம் அளிப்பதற்கான கோரிக்கைகள் செயற்பாட்டிற்கு வராத காரணத்தினாலும், இவர்கட்கென முன்னர் ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்ட நிலம் நிலச்சொந்தக்காரர்களால் நீதிமன்றத்தில் தடைபெற்றதாலும், வெகுண்டெழுந்து 10 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி செப்டம்பர் '97 முதல் இவர்கள் பல்வேறு தீவிரப் போராட்டங்களுடன் சாலை மறியல் போன்ற தீவிரச் செயல்களிலும், தங்கள் அன்றாட வருவாய் ஈட்டும் பணியைக் கூட புறக்கணித்து விட்டு ஈடுபட்டனர். இந்தச் சம்பவங்கள் யாவும் அரசின் உடனடிக் கவனத்தையும் ஈர்த்தது.



இவர்களது அவலம் துடைத்திட போர்க்கால அடிப்படையில் காஞ்சிபுர மாவட்ட ஆட்சியரின் தனிப் பெரும் முயற்சியால் சுமார் 11 ஏக்கர் பரப்பு கொண்ட தனியார் பட்டா நிலம், ரூ.27.93 இலட்சத்தில் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் பெறப்பட்டு, மிகத்துரிதமாகச் செயல்பட்டு ஒன்பதே நாட்களில் இவர்கட்கு மனைப் பிரிவு ஏற்படுத்திக் கொடுத்து, வண்ணம் பூசிய கற்கள் பதித்துக் கொடுக்கப்பட்டு, 8.8.98 அன்று புதுப்பட்டினத்தில் நடைபெற்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விழாவின்போது மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களால் சுமார் 400 மீனவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடப் பெற்றன. இவையாவும் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அதோடன்றி "வெள்ளி நிலாவை மட்டுமே இவர்களது ஊரிலும் விளக்காகக் கொள்ளக் கூடாதென்பதற்காக, 'சோடியம் ஆவி' விளக்குகள் பொருத்திடவும் இணைப்புச்சாலை வசதி உருவாக்கவும் அரசின் வளர்ச்சிப் பிரிவு நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் பெற்றுத்தரத் தக்க விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





# வெள்ளை நிறக் கொள்ளி

- கவிஞர் கா.வேழவேந்தன்

வகைவகையாய்ப் பலவடிவில் நெஞ்சை ஈர்க்கும்
வண்ணவண்ண நிறங்களிலே 'இலைகள்' ஈங்கே
மிகைமிகையாய் நம்மண்ணில் விளையும்; எல்லாம்
விருந்தாகும்; மருந்தாகும்; உயிரைக் காக்கும்!
'புகையிலை'யென் றோர்இலையை மேலை நாட்டான்
புதிதாகக் கொண்டுவந்தான், பாவி! அந்தப்
பகைஇலையால் 'புற்றுநோய்', 'காசம்' போன்ற
பலநோய்கள் விளைகின்ற கொடுமை நன்றா?

'கொள்ளி' என்றால் பிள்ளைவைப்பான்; அவனும் கூட
கூட்டில்உள்ள உயிர்போனால் மட்டும் வைப்பான்!
'வெள்ளைநிறக் கொள்ளியினால் தனக்குத் தானே
வெடிவைப்போன் இருப்பானா? இருக்கின் றானே!
கள்ளிப்பால் சாவுதரும் எனத்தெ ரிந்து
கவனமுடன் ஒதுக்குகிறான்! 'சிகரெட்' டாலே
உள்இயங்கும் நுரையீரல், இதய மெல்லாம்
உருமாறிக் கருகுவதை உணர்ந்திட் டானா?

'சூளை'யிலே புகைதெரிந்தால் 'கல்' கிடைக்கும்!
சுடும்அடுப்பில் புகைதெரிந்தால் சோறும் வேகும்!
'காளை' அவன் வாயினிலே புகைதெ ரிந்தால்
கால்வைத்தான் 'சுடுகாட்'டை நோக்கி என்பேன்!
தேள்குணத்தைத் தெரிந்திருந்தும் அதனைத் தூக்கிச்
சிரம்வைத்தோன் அறிவாளி தானா? உள்ள
'மூளை'க்குச் சுறுசுறுப்பைத் தருமே என்பார்!
'முடிவு'க்கும் சுறுசுறுப்பைத் தருமீ தென்பேன்!

'அயர்லாந்தில் வாழ்பவனும், பனியே கொட்டும்
அலாஸ்காவில் இருப்போனும் நடுக்கம் போக்க,
முயன்றங்கே புகைப்பிடிப்பான்; தேவை. ஆனால்
முகம்வேகும் வெய்யிலிலே துடிப்போர் நாமும்
அயலவரை நகல்செய்தல் தேவை தானா?
அணுஅணுவாய் ஏன்நம்மைக் கொல்ல வேண்டும்?
வயுலென்றால் வாழை, தென்னை செழித்தி டட்டும்!
வாழ்வழிக்கும் 'புகையிலைகள்' தழைக்க வேண்டாம்!

# வேளாண்மை திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களின் வழிகாட்டுதலில், தற்பொழுது தமிழ்நாடு வேளாண்மைத் துறை **இரண்டாம் பசுமைப் புரட்சித் திட்டத்தினைச்** செயல்படுத்திக்கொண்டு வருகிறது. அதற்கேற்ப, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல், சிறுதானியம் மற்றும் பயறுவகை போன்ற உணவு தானியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பின் இலக்கு 1.610 இலட்சம் எக்டேர். ஆனால், 2.083 இலட்சம் எக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கூடுதல் 0.473 இலட்சம் எக்டேர்கள் ஆகும். மேலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 0.460 இலட்சம் எக்டேரிலும், கரும்பு 0.100 இலட்சம் எக்டேரிலும், பருத்தி 0.002 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.



இம்மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்குகான 5.165 இலட்சம் மெ.டன் என்பதற்கு மாறாக 6.958 இலட்சம் மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது ஆண்டு இலக்கைக் காட்டிலும் 1.793 இலட்சம் மெ.டன் கூடுதல் உற்பத்தி ஆகும். மேலும், கடந்த ஆண்டில் நமது மாநிலத்தில் ஒரு எக்டேருக்கு 3.130 கிலோ அரிசி உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு எக்டேருக்கு 3,553 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டு, மாநில அரிசி உற்பத்தித் திறனை விட 423 கிலோ அரிசி கூடுதல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 1997-98ஆம் ஆண்டில் நெல் பயிர் விளைச்சல் போட்டியில் மாநில அளவில் காஞ்சிபுரம் மாவட்டம் அதிக மகசூலைப் பெற்று முதல் நிலை பரிசைப் பெற்று இருக்கிறது.

திரு. எஸ்.மாணிக்ககம், கீழம்பி என்ற விவசாயி ஆடுதுறை.39 நெல்லில் ஒரு எக்டேருக்கு 12,200 கிலோ நெல் மகசூல் பெற்று முதல் பரிசாக ரூ.25,000 பெற்றார்.

இம் மாவட்டத்தில் விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் நெல், சிறுதானியங்கள், பயறுவகை மற்றும் எண்ணெய்வித்து பயிர்களுக்கான 1.690 மெ.டன் சான்று விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 1,632 மெ.டன் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், 37,712 மெ.டன் தழை, மணி, சாம்பல் சத்துக்களை தரக் கூடிய உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் உயிர் உரங்கள்



உபயோகத்தைப் பற்றிய விழிப் புணர்ச்சியை அதிகரிக்க ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒரு கிராமத்தைத் ``தத்து'' எடுத்து அதில் உயிர் உரங்களான, அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம், அசோலா ஆகியவைகளை உபயோகப்படுத்தும் முறைகளையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் விவசாயிகள் புரிந்து கொள்ளும் வகையில் தொழில் நுட்பங்களை எடுத்துச் சொல்லி அந்தத் தத்து எடுக்கப்பட்ட கிராமத்தில் உயிர் உரத்தின் உபயோகத்தினை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. 2,37,702 உயிரின உரங்களுக்கான பொட்டலங்களும், 24.5 மெ.டன் நீலப்பச்சைப் பாசியும் மற்றும் அசேலால 5.0 மெ. டன்னும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.



**தமிழக முதலமைச்சரின் மக்கள் நலம் காக்க மரம்** வளர்க்கும் திட்டத்தின் கீழ் கடந்தாண்டு படப்பை, திருப்போரூர் மற்றும் மதுராந்தகம் வட்டாரங்களில் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் ரூ.29.4 இலட்சம் செலவில் நடவு செய்யப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நடப்பாண்டில் இத்திட்டம் காஞ்சிபுரம், வாலாசாபாத், உத்திரமேரூர், திருப்பெரும்புதூர் மற்றும் சித்தாமூர் ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா 15 கி.மீ. வீதம் மொத்தம் 75 கி.மீதூரத்திற்கு மரக்கன்றுகள் நட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 50 எக்டேரிலும் பல்துறை செயல்விளக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### டிராக்டர் - பவர் டில்லர் மானியம்

ஒருங்கிணைந்த தான்ய உற்பத்தி (அரிசி) திட்டத்தின் கீழ், ஒரு பவர் டில்லருக்கு ரூ.30,000 மான்யம் வீதம் 126 பவர் டில்லர்கள் மொத்தம் மான்ய தொகை ரூ.37.80 இலட்சங்களில், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு சிறிய டிராக்டருக்கு மானியம் ரூ.30,000 வீதம், 45 சிறிய டிராக்டர்களுக்கு மொத்தம் மானியத் தொகை ரூ.13.50 இலட்சங்கள் சிறு மற்றும் மிகச்சிறுவிவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பிறமானியு உதவிகள்

நெல், சிறுதானியம், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்து சான்று விதை கொள்முதல் மற்றும் விநியோகம் போன்ற மாநில அரசு திட்டங்களின் கீழ், ரூ.2.52 கோடியும், மத்திய அரசு பகுதி திட்டத்தின் கீழ், நெல் மற்றும் சிறுதானியம் சிறுதளைகள் இலவசமாக 2,617 விவசாயிகளுக்கு வழங்கிய வகையில் ரூ.1.40 இலட்சமும், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் பங்கேற்கும் மானியத் திட்டங்களின் கீழ், மொத்தம் ரூ.88.425 இலட்சங்கள் மானியமாக விவசாயிகளுக்குக் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. அதாவது உணவு தானிய உற்பத்தித் திட்டம் (அரிசி) கீழ் மானியத் தொகையாக ரூ.50.861 இலட்சமும், எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் மானிய தொகையாக ரூ.23.412 இலட்சங்களும், தேசியப் பயறு பெருக்குத் திட்டத்தின் கீழ் மானியத் தொகையாக ரூ.6.367 இலட்சமும், சுபாக்ஸ் கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மானிய தொகை ரூ.7.785 இலட்சமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேற்படி உழவர் நலத்திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.3.42 கோடி வழங்கப் பட்டுள்ளது.




பயறுவகை உற்பத்தியில் தன்னிறைவு பெறும் சிறப்பு திட்டத்தின் கீழ் கோடைப் பருவப் பயறுவகை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9,300 எக்டேரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 13,500 எக்டேர் பரப்பில் பயிரிட்டு சாதனை அடையப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, புதிய முயற்சியாக முதன்முதலில் நெல் பயிரில், வரப்பில் உளுந்து 3,600 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ●

# காஞ்சிபுரம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி

காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், ஒருங்கிணைந்த சென்னை - செங்கல்பட்டு மாவட்டத்தை எல்லையாகக் கொண்டு இயங்கி வருகிறது. தற்போது இது காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும். இவ்வொன்றியம் 1927ஆம் ஆண்டு சென்னை பால் வழங்கும் ஒன்றியமாகப் பதிவு செய்யப்பட்டு, கிராமப்புற ஏழை விவசாய மக்களுக்கு ஒரு உப தொழில் ஆகவும் சென்னைவாழ் மக்களுக்கு கலப்படமற்ற சுத்தமான பால் கிடைக்க வழிவகை செய்யவுமான இரு உன்னதக் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இது, தென்கிழக்கு ஆசியாவிலேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியம். இவ்வொன்றியம் 1979 ஏப்ரல் 10ஆம் தேதி மாவட்டக் கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமாக மலர்ந்தது.

**பால் கொள்முதல் – விற்பனை**



ஒன்றியத்தின் செயல்படும் எல்லையான காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் தவிர வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள சில பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து இந்த ஒன்றியம் பால் கொள்முதல் செய்கிறது. இவ்வொன்றியத்தில் 3 பால் கொள்முதல் குழுக்கள் அமைக்கப்பட்டு பால் உற்பத்தி இடங்களைக் கண்டறியவும், கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கவும், அதனைப் பதிவு செய்யவும் பால் கொள்முதல் குழு காஞ்சிபுரம் மாவட்டத்தில் அச்சிறுப்பாக்கம், பாலுசெட்டி சத்திரம் ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன. மொத்தம் 122 சங்கங்கள் இயங்கிவருகின்றன. தற்போதைய பால் கொள்முதல் அளவு 46,600 லிட்டர்கள்; சங்கங்களில் உள்ள மொத்த உறுப்பினர்கள் 46,020 பேர். பால் வழங்கும் அங்கத்தினர்கள் 5,261 பேர். ஒவ்வொரு நாளும், பாலுசெட்டி சத்திரத்தில் 30,000 லிட்டர் பாலும், அச்சிறுப்பாக்கத்தில் 10,000 லிட்டர் பாலும் குளிரூட்டப்படுகிறது. இம்மாவட்டத்தில் தற்போது கையாளும் அளவு நாளொன்றுக்கு 41,000 லிட்டர் ஆகும். காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் பாலிதின் பைகள் மூலமாக நாளொன்றிற்கு 33,000 லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**கால்நடை மேம்பாடு மற்றும் பால் உற்பத்தி வளர்ச்சிப் பணிகள், நடமாடும் கால்நடை மருத்துவ மையங்கள்:**



ஒன்றியத்தில் இணைந்துள்ள 68 சங்கங்களுக்கு நடமாடும் வாராந்திரக் கால்நடை மருத்துவ வசதி மூலம் இலவசச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சராசரியாக ஆண்டொன்றிற்கு 20,000 கால்நடைகளுக்கு இலவசச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒன்றியத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களின் கால்நடைகளுக்குக் குறைந்த செலவில் அவசரச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கால்நடைகளுக்கு வரும் நோய்களுக்கு முதலுதவி சிகிச்சை, பயிற்சி பெற்ற கிராம நல ஊழியர்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. ஒன்றியத்தில் மாதம்

இருமுறை அருகிலுள்ள சங்கங்களை ஒருங்கிணைத்து, தற்காலிக மலட்டுத்தன்மை நீக்கும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

### செயற்கை முறை கருவூட்டல்

ஒன்றியுத்தில் 68 சங்கங்களுக்கு உயரின பொலி காளைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட உறை விந்து குழய்கள் மூலம் மாதம்தோறும் சுமார் 1,500 கறவை மாடுகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது. இவ்வாறு செய்வதன் மூலம் நாட்டினப் பசுக்களிலிருந்து பெறப்படும் பால் உற்பத்தியினைப் பெருக்க, கலப்பின முறையில் கருவூட்டல் செய்து கலப்பினப் பசுக்களை உருவாக்கி பால் உற்பத்தியாளர்களின் பொருளா தாரத்தை மேம்படையச் செய்யப்படுகிறது.

### கோமாரி தடுப்பூசித் திட்டம்

கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயினை 100 சதவீதம் தடுக்கும் பொருட்டு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடுகள் செய்வதுடன், சங்க உறுப்பினர்கள் அதை உரிய முறையில் பயன்படுத்த விளம்பரம் செய்யப்பட்டு உறுப்பினர்கட்கு ஏற்படும் பொருளாதார இழப்பிலிருந்து ஒன்றியம் காத்துவருகிறது.

### புல் வளர்ச்சித் திட்டம்

சங்க உறுப்பினர்கள் தம் சொந்த நிலத்தில் புல் வளர்ப்பதற்குத் தேவையான விதைகள் மற்றும் புல் கரணைகள் ஒன்றியத்தின் மூலம் குறைந்த விலையில் (1,000 கரணைகள் ரூ.60 என்ற விலையில்) வழங்கப்பட்டு வருகிறது.

### கலப்புத் தீவனம்

சமச்சீர் கலப்பு கால்நடைத் தீவனம் (ஆவின்) சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு ஒன்றியத்தின் மூலம் மாதவரம் பால் பண்ணையில் உள்ள தீவன ஆலையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இத்தீவனத்தின் மூலம் பால் உற்பத்தித் திறன் அதிகரிப்பதுடன் குறைந்த விலையில் தரமான தீவனம் சங்க உறுப்பினர்களுக்குக் கிடைக்கிறது.

### கறவை மாட்டுத் திட்டம்

சங்கங்களிலுள்ள ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் 'தாட்கோ' மூலம் 50 சதவிகித மானியத்தில் (ரூ.6,000 மதிப்பு) இரு கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 3,912 பால் உற்பத்தியாளர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

### கன்று வளர்ப்புத் திட்டம்

"தாட்கோ" மற்றும் ஆதிதிராவிட நலத்துறை மூலம் கறவை இனங்கள் பெற்றுப் பயனடைந்த உறுப்பினர்களின் கலப்பினப் பசுங்கிடேரிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் தாட்கோ திட்டத்தின் மூலம் தீவனங்கள் வழங்கப்பட்டு கலப்பினப் பசுக்கள் உருவாக்கப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள


## குழந்தைத் தொழிலாளர்க்கு இலவச நெசவுத்தறிகள்

காஞ்சிபுரம் பகுதியில் நெசவுத்தொழில் மிகவும் பிரபலமானது. இதில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருப்பதை அறிந்த அரசு, இதைத் தடுக்க முடிவு செய்தது.

தொண்டு நிறுவனங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் வெ.இறையன்புக்குக் கொடுத்த தகவலின் பேரில் 85 குழந்தைத் தொழிலாளர்களை மீட்க அவர் நடவடிக்கை எடுத்தார்.

மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு இரண்டு முறை மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. பின்னர் அந்தக் குழந்தைத் தொழிலாளர்கள் பள்ளியில் படிக்க மாவட்ட ஆட்சித் தலைவரே ஏற்பாடு செய்தார். சம்பந்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் குடும்பத்திற்குத் தறி நெய்து குடும்பத்தைத் காப்பாற்றத் தறிகள் வழங்கப்பட்டன.

★ ★ ★



பால் உற்பத்தியாளர்களைப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழி வகுக்கப்படுகிறது.

**பால் பண்ணை வளர்ச்சியில் மகளிர் பங்கு**

மாவட்டத்தில் 28 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவை மகளிர் மட்டும் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இதன் மூ  தங்கள் சொந்தக் கிராமத்திலேயே சங்கத்தை நிர்வகிக்கப் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப் பாக உள்ளது.

**மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி முகமை மூலம் மானிய வசதி**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒன்றியத்திற்குத் திரவ நைட்ரஜன் குடுவைகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க 1993-94ஆம் ஆண்டு ரூ.6.08 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மேலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம் ஊரக வளர்ச்சி முகமை மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது.

**செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்திலுள்ள சானூர் என்னுமிடத்தில் 3.62 ஏக்கர் பரப்பளவில் ரூ.55.10 இலட்சத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப் பட்டுத் தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் குளிரூட்டும் நிலையம் இயக்கப்படும்.

**பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையோர் நலம்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையோர் நல அபிவிருத்திக் கழகத்திடமிருந்து 100 பயனீட்டாளர்கட்கு 1998-99ஆம் ஆண்டு புதியதாகக் கறவை மாடுகள் வாங்க ரூ.22.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு வருட வருமானம் ரூ.11,000க்குள் உள்ளவர்கட்கு 7 சதவிகித வட்டியிலும், ஆண்டு வருட வருமானம் ரூ.22,000க்குள் உள்ளவர்கட்கு 10 சதவிகித வட்டியிலும், இரண்டு கறவை மாடுகள் வீதம் வழங்கப்படும்.


**பிளாஸ்டிக் தொட்டிகள் மூலம் பால் விற்பனை (FRP)**

பால் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டும் பொருளாதாரத்தில் நலிந்த நுகர்வோர்களுக்கு அவர்கள் வாங்கும் திறனுக்கேற்பச் சில்லறை விற்பனை செய்யும் பொருட்டும் பிளாஸ்டிக் பால் தொட்டிகள் மூலம் விற்பனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு, மிக விரைவில் நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

★ ★ ★

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் 104 குடியிருப்புகளுக்கு ரூ.31.20 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறுகள்

**காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் பற்றாக்குறையாக உள்ள கடினப்பாறைப் பகுதியில் உள்ள 104 குடியிருப்புகளுக்கு ரூ.31.20 இலட்சம் மதிப்பீட்டில் உள்ள உலக வங்கி நிதியுதவியுடன் வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திடும் வகையில், இதற்கான புவியியல் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி விரைந்து மேற்கொள்ளப்படுகிறது.**



# எங்கள் ஊர் பிரச்சினை

● **பிரச்சினை :**

**எங்கள் ஊர் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், ககுடி பஞ்சாயத்திலிருக்கும் அறிவித்தி கிராமமாகும். எங்கள் ஊருக்கு மங்களக்குடிக் கண்ணங்குடி சாலையில் இருந்து பிரிந்து செல்லும் மண் சாலைக்கு தார் சாலை போடுவதாக ஜல்லி கொட்டப்பட்டு, ஒரு ஆண்டுகளாக அப்படியே கிடக்கிறது. நாங்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறோம். எனவே, தார்சாலை போடுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.**

பொதுமக்கள்
அறிவித்தி கிராமம்.


**தீர்வு :**

*மங்களக்குடி — கண்ணங்குடி சாலை முதல் அறிவித்தி கிராமம் வரையிலான சாலையின் தூரம் 2.5 கி.மீ. ஆகும். இதில் 1 கி.மீ. மாவட்ட பரவலாக்கத் திட்டம் 1997—98 ஆம் ஆண்டின் கீழ் தார் சாலையாக ரூ.3.10 இலட்ச மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 1 கி.மீ. தூரம் ஏற்கெனவே மெட்டல் போடப்பட்டு, (மிகவும் பழுதடைந்த நிலையில்) இருந்ததால், மேலும் ஓர் அடுக்கு கல்பரத்தும் பணி முடிவுற்று தார் போடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.*

*மேற்கண்ட 1 கி.மீ. போக மீதமுள்ள 1.5 கி.மீ. தூர வேலையை வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் 1997—98ஆம் ஆண்டின் கீழ் ஓர் அடுக்கு கல்பரத்தி, தார் போடும் பணிக்கு ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடும், நிர்வாக அனுமதியும் வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள 1.5. கி.மீ. சாலையில் கல்தளமே இல்லாமல் முற்றிலும் மண் தளமாக இருந்ததால், வெறும் ஒரு அடுக்கு கல்பரத்தி, தார் பரத்தும் பணியினால் சாலையின் ஸ்திரத்தன்மை மிகவும் குறுகிய காலமாகவே இருக்கும் என்பதால், இச்சாலையை ஓர் அடுக்கு கல்பரத்தி மற்றும் இதர மேம்பாடு செய்த பிறகே தார் போடும் பணி செய்யலாம் என உயர்மட்டத் தொழில் நுட்ப அலுவலர்களின் அறிவுரை வழங்கப்பட்டது. அதனடிப் படையில் ஏற்கெனவே வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியின் படி சாலை போட வேலை ஒப்படைப்பு பெறப்பட்ட துறை அலுவலரால் கல்சேகரம் செய்யப்பட்ட நிலையில் வேலை நிறுத்தப்பட்டது.*

*இதனடிப்படையில், தற்காலிக தல ஆய்வு மற்றும் பரிந்துரைகள், பெறப்பட்டு மேற்கண்ட வேலையில் உள்ள 1.5 கி.மீ. சாலை வேலையை தார் போடாமல் மேம்பாடு மற்றும் ஓர் அடுக்கு கல் பரத்துவதற்கு மட்டும் திருத்திய நிர்வாக அனுமதி கோரி பிரேரணைகள் திட்ட இயக்குநர் மாவட்ட வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெற்றவுடன் மேற்கண்ட வேலை விரைந்து முடிக்கப்படும் என்ற தகவலை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

வட்டார வளர்ச்சி அலுவலர்
திருவாடானை.



● **பிரச்சினை :**

**வேலூர் மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியம், கீழ்வெங்கடாபுரம் எங்கள் ஊர். இங்கு குடிநீர் கிணறு 3 இருக்கின்றன. ஆனால் குடிநீர் பாதுகாப்பாக வழங்குவதில் கவனம் செலுத்தப்படுவதில்லை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூடாமல் திறந்து அசுத்தம் அடைகிறது. இன்னொரு கிணறு மலஜலம் கழிக்கப்படும் இடத்தில், மழைநீர் மலஜலத்துடன் கிணற்றில் கலக்கும்படி அமைந்திருக்கிறது. பாதுகாப்பான குடிநீர் கிடைக்காத காரணத்தல், எங்கள் கிராமத்தில் மஞ்சள் காமாலைநோய் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் கூட இதனால் மரணம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பலர் நோய்**

முற்றிய நிலையில் இருக்கிறார்கள். எனவே மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு மேல்மூடி அமைக்கவும், மழைநீர் மலஜலத்துடன் கிணற்றில் கலக்காமல் இருக்க சுற்றுச்சுவர் எழுப்பி, கிணற்றின் மேல் கம்பிவலை அமைக்கவும் தக்க நடவடிக்கை எடுத்து, எங்கள் குறைகளைத் தீர்த்து வைக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுமக்கள் சார்பாக
ஜி.தாமோதரன், வேலூர்

**தீர்வு :**

*கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு அருகில் உள்ள 1970ல் கட்டப்பட்ட* **16 x 16** *அடி அளவில் உள்ள ஓ.எடிக்கு பழுதடைந்துள்ள ஸ்லேப் (மூடி)* **4½ x 6** *அளவில் மூடி போட வேண்டும். மீதி பகுதிக்கு வெதரிங்கேன்ஸ் போடவும். இதற்கு ரூ.3,000 மதிப்பீட்டில் இவ்வேலையினை உடனடியாக ஊராட்சி நிதியில் செய்து முடிக்க ஊராட்சி மன்றத்தலைவருக்குத் தெரிவித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி ஆரம்ப பள்ளிக்கு பின்புறம் உள்ள கிணற்றில் சுற்றுச்சுவர் தற்போது 1 1/2' உயரம் உள்ளது. இதில் மல ஜல கழிவு நீர் கலப்பதற்கு வாய்ப்பில்லை. பிள்ளைகள் காகிதங்கள் கற்கல் போடுவதாக நேரில் பார்வையிட்டதில் அறிய வந்துள்ளது. கிணற்றிலிருந்து சற்று தூரத்தில் சுமார் 30' தூரத்தில் 3' பள்ளம் உள்ளதும் பார்க்கப்பட்டது. அந்த பள்ளத்திலும் கழிவுநீர் தேங்க வாய்ப்பில்லை. கீழ்வெங்கடாபுரம் ஊராட்சி மன்றம் ஏற்கெனவே தீர்மானம் நிறைவேற்றி சுற்றுச்சுவர் மேலும் 3' உயர்த்த ரூ.8,000 மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கிணற்றிற்கு 16' விட்ட கம்பி வலை அமைக்க கொடேஷன் பெற்று ரூ.10,000 மதிப்பீட்டில் வேலை செய்ய நிபந்தனைக்குட்பட்ட நிதிக்கணக்கில் 1998—99 நிதியாண்டில் நிதி வரப் பெற்றதும் பணி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

வட்டார வளர்ச்சி அலுவலர்,
நெமிலி

**● பிரச்சினை :**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, அம்பை பஞ்சாயத்து, அம்பை பஞ்சாயத்து யூனியன், அம்பை நகரில் மேலஅம்பாசமுத்திரம் ரகுமான் காலனியில் கடந்த 15 வருடங்களாக பொதுமக்கள் வசதிக்காக சுகாதார சார்பு மையம் இயங்கி வருகிறது. சுகாதார மையத்தில் பொது மக்கள் அவசர சிகிச்சையும், மருத்துவ ஆலோசனைகளையும், மருந்து வாங்குவதற்கு வசதிகள் இல்லாமல், சுகாதாரக் கட்டடம் மிகவும் மோசமான நிலையிலும், மின் இணைப்பு இல்லாமலும் பழுதடைந்துள்ளது. பொது மக்கள் அவசர மருத்துவ சிகிச்சை பெற மூன்று கிலோ மீட்டர் தூரம் உள்ள கீழ் அம்பாசமுத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுக வேண்டியுள்ளது. இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஊர்ப்பொதுமக்கள்
ரகுமான் காலனி,
மேல அம்பாசமுத்திரம்

**தீர்வு:**

*1998—99 ஆம் ஆண்டின் துணை சுகாதார நிலையங்கள் பழுது பார்க்கும் பட்டியலில் ரகுமான் காலனி சுகாதார நிலையம் சேர்க்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் உடன் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் சம்பந்தப்பட்ட கிராம சுகாதார செவிலியர் ரகுமான் காலனியின் தங்கியிருந்து சுகாதார சேவை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் திருநெல்வேலி சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாவட்ட ஆட்சியர்
திருநெல்வேலி

**● பிரச்சினை:**

முள்ளிக்குளம் கிளைநூலகத்திற்கு நியமித்த நூலகர் மடத்துப்பட்டி கிளை நூலகத்திற்கு கூடுதல் பொறுப்பாக உள்ளார். இதனால் வாரத்திற்கு 3 நாட்கள் மட்டும் நூலகம் செயல்படுகிறது. ஆகையால் தனிநூலகராக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுமக்கள் சார்பாக,
எஸ்.சிவராமகிருஷ்ணன் முள்ளிக்குளம்.



**தீர்வு :**

*பணியாளர்கள் பற்றாக்குறையினால், முள்ளிக்குளம் கிளை நூலகர், மடத்துப்பட்டி*

கிளை நூலகத்தையும் சேர்த்து கவனித்து வருகிறார். வாரத்தில் 3 நாட்கள் முள்ளிக்குளம் கிளை நூலகத்தையும், 3 நாட்கள் மடத்துப்பட்டி கிளை நூலகத்தையும் திறந்து செயல்படுத்தி வருகிறார். மடத்துப்பட்டி கிளைநூலகத்திற்கென தனியாக நூலகர் ஒருவர் விரைவில் நியக்கப் படவுள்ளது. பின்னர் முள்ளிகுளம் கிளைநூலகம் அனைத்து நாட்களிலும் செயல்படுமெனத் தெரிவித்துக் கொளகிறேன். இருப்பினும் மடத்துப்பட்டி கிளை நூலகத்திற்கு புதிய நூலகர் நியமிக்கும் வரை முள்ளிகுளம் கிளைநூலகத்தை வாரத்தில் 3 நாட்கள் நூலகராலும் மீதியுள்ள 3 நாட்கள் பகுதிநேரப் பணியாளராலும் செயல்படுத்த உத்தரவிடப் பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட நூலக அலுவலர்
திருநெல்வேலி

● **பிரச்சினை :**

**தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கே.ஆடூர் கிராமம் எங்கள் ஊராகும். கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில், நம் தமிழக அரசு நிவாரணம் வழங்கியதில் பஞ்சாயத்து தலைவர் திரு.ஆர்.நடனசபேசன் அவர்கள் கையாடல் செய்த மொத்த தொகை ரூ.59,840 ஆகும்.**


**பொது மக்கள் உபயோகத்திற்கென வழங்கப் பட்ட கலர் டி.வி.பெட்டிகளை தம்முடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொண்டார். மேலும் கான்கீரிட் வீடுகள் முறையான ஏழைகளுக்கு ஒதுக்கீடு செய்யாமல் தம்முடைய சொந்தக்காரர்களுக்கும், வசதி படைத்தவர்களுக்கும் ஒதுக்கி கட்டி வருகிறார். இதைப்பற்றி எல்லாம் கூட்டத் தீர்மானத்தில் உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் கேட்டால், நீங்கள் யாரும் எனக்கு தேவையில்லை எனக்கு முழு அதிகாரம் உண்டு என்று பதில் கூறுகிறார். இதைப்பற்றியெல்லாம் பல மனுக்கள் அனுப்பியும் பலனுமில்லை. எனவே எங்கள் ஊரின் பிரச்சினையைத் தீர்த்து எங்களுக்கு நீதி கிடைக்க தாங்கள் தான் ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**ஊர்பொதுமக்கள் மற்றும்**
**ஊராட்சி மன்ற துணைத் தலைவர்**
**கீரப்பாளையம் ஒன்றியம்,**

**தீர்வு :**

சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.ஆடூர் கிராமத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்திற்கான நிவாரணத் தொகை வருவாய்த்துறையால் அத்துறை அலுவலர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களால் வழங்கப்பட்டுள்ளது. கே.ஆடூர் ஊராட்சிக்கு வழங்கப்பட்ட வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பூங்குடி முருகன் கோயில் கட்டடத்திலும், கே.ஆடூர் பெரிய காலனி தெரு மாரியம்மன் கோயில் கட்டடத்திலும் நிறுவப் பட்டுள்ளன. தொகுப்பு வீடுகள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பட்டாவுள்ள ஆதிதிராவிடர்களுக்கு முறையாக வழங்கப் பட்டுள்ளது. ஊராட்சி நிர்வாகத்தில், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி உப தலைவருக்கு இடையேயான பிரச்சனைத் தொடர்பாக ஊரக வளர்ச்சி உதவி இயக்குநரால் (ஊராட்சிகள்) நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

**மாவட்ட ஆட்சியர்,**
**கடலூர்**



● **பிரச்சினை :**

**எங்கள் ஊர் கடலூர் மாவட்டம், பாளையம் பஞ்சாயத்தைச் சார்ந்த கரையேறவிட்டவர் குப்பத்தைச் சார்ந்த மகாத்மா காந்தி நகர் ஆகும். மகாத்மா காந்தி நகரில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 75 சதவீதத்தினர் நெசவுத் தொழில் செய்பவர்கள், மீதம் 25 சதவீதத்தினர் பிறபணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வூர் மலை மீது அமைந்துள்ளது.**

**இங்கு வசிக்கும் மக்கள் சாலை வசதி இல்லாமலும், தெருக்களில் மின்விளக்கு இல்லாமலும், மேலும் குடிதண்ணீர் வசதியற்றும் வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஆட்சியில் பலகடிதங்கள் போட்டும் எவ்வித பயனும் இல்லை. ஆனால் இப்போதுள்ள ஆட்சியானது உடனுக்குடன் மக்களின் குறைகளை தீர்த்து வைத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, எங்களது குறைகளை தீர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**ஊர்மக்கள் சார்பாக**
**வி.ஆர். ராஜு**
**மகாத்மா காந்தி நகர்,**
**கடலூர்**

### தீர்வு


கடலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கஙை யேறவிடக்குப்பம் ஊராட்சியின் மகாத்மா காந்தி நகரில் தற்போது உலக வங்கித் திட்டத்தின் மூலம் ஒரு புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாழ்குழாய்க் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தவும், குழாய் இணைப்புகள் செய்யவும் ஊராட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் தெரு மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்கும் பணியும் ஊராட்சித் தலைவர் மூலம் அவ்வப்போது நிறைவேற்றப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
கடலூர்

### ● பிரச்சினை :

சிதம்பரம் தாலுக்கா கீரப்பாளையம் ஒன்றியம் கடைகோடி பஞ்சாயத்து ராமாபுரம் ஆகும். இங்கு இரண்டு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளும், இரண்டு துணைக்கிணறுகளும் உள்ளன. பல இனமக்கள் வாழ்கிறார்கள். இரண்டு துணைக் கிணற்றில் ஒன்று மூடப்பட்டு உள்ளது. ஒரு கிணற்றில் மோட்டார் அமைக்கப்பட்டு துணைக் கிணற்றின் அருகிலேயே தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் ஒரு சிலருக்கே பயன்படுகிறது. பெரும்பாலான மக்கள் தனியார் கிணற்றில் தண்ணீர் எடுத்து பயன்படுத்து கிறார்கள். இங்குள்ள கிணறுகள் திறந்தவெளிக் கிணறுகள் வெளி அசுத்தங்கள் உள்ளே போகும் நிலையில் உள்ளன. எனவே இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆ.கன்னையன்
ராமாபுரம், சிதம்பரம் வட்டம்



### தீர்வு :

கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், இராமாபுரம் ஊராட்சியில் மார்க் II கைப் பம்புகள் ஏழு கொளத்தங்குறிச்சி, தண்டகாரன் குப்பம், பக்கிரிமானியம் காலனி, வாலீஸ் பேட்டை, அமெனியன் காலனி, வாலீஸ் பேட்டை, ஆர்.எப்.சி. ஆகிய இடங்களிலுள்ளன. மேலும் விசைப்பம்புகள் ஐந்து கொத்தளங்குறிச்சி, இராமாபுரம், வாலீஸ்பேட்டை, பக்கிரிமானியம், தண்டகாரன்குப்பம் ஆகிய இடங்களிலுள்ளன. இவ்வாறாக பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்,
கடலூர்

### ● பிரச்சினை :

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த செருகளத்தூர் எங்கள் ஊர். இங்கு சுமார் 500 குடும்பத்திற்கு மேல் வசித்து வருகின்றனர். கடந்த 15.7.98 தேதியிலிருந்து குடிதண்ணீர் விநியோகம் நின்று போய்விட்டதால் இங்கு மக்கள் குடிதண்ணீர் எடுக்க மிகச் சிரமப்படுகின்றார்கள். ஆகையால் தண்ணீர் வருவதை நிறுத்தாமல் தொடர்ந்து குடிநீர் வரும்படி செய்து எங்கள் ஊர் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள் சார்பாக,
எம். தமிழ்கனி, திருவாரூர் மாவட்டம்.

### தீர்வு :


திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா கோட்டூர் வட்டாரத்தைச் சேர்ந்த, செருகளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த மூன்று கிராமங்களுக்கு புத்தகரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இதன் மூலம் கீழ்க்காணும் கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் பயன்பாட்டில் உள்ளன. இதனைத் தவிர வடிமுனைக்குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது என்ற விபரத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

| கிராமத்தின் பெயர் | மேல்நிலை வழங்கு எண்ணிக்கை | வடிமுனை குழாய்கள் |
|---|---|---|
| செருகளத்தூர் | 1 | 4 |
| வண்டல்வெளி | 1 | 4 |
| கோவில்பத்து | 2 | 3 |
| | 4 | 11 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நீர் ஆதாரங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் வண்டல்வெளி கிராமத்திற்கு சித்தமல்லி ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி குழாய் ஒன்றும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இவ்வூராட்சியில் எல்லாக் காலங்களிலும் குடிநீர் தட்டுப்பாடு இல்லை என்ற விவரத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவி இயக்குனர்
திருவாரூர்.

# காந்தியச் சிந்தனைகளும் - கலைஞரின் முன்னோடித் திட்டங்களும்



**- இரா. பரதன்**

அடிமைத்தளையில் சிக்குண்டிருந்த ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை யேற்போர், பிற நாட்டவரின் ஆதிக்கத்தால், நாடு பொருளாதார அடிப்படையில் எப்படிச் சீர்குலைவடைகிறது? இம்மண்ணில் பிறந்தவர்களுக்கு ஆதிக்க வர்க்கத்தால் இழைக்கப்படும் அநீதிகள் எத்தகையது? என்று இப்படிப்பட்ட காரண காரியங்களை அடிப்படையாக வைத்துத்தான் விடுதலை முழக்க மிட்டிருப்பார்கள். கொள்கை முழக்கங்கள் பிரகடனப்படுத்தப் பட்டிருக்கும். இவைதான் நாம் படிக்கும் விடுதலை வரலாறுகளில் இடம் பெற்றிருக்கும் பொதுமையான எதார்த்தம்.


ஆனால், தேசப்பிதா 'அண்ணல் காந்தியடிகள்' ஒருவர்தான் 'சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமையேற்று, பல்வேறு அறப்போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில், அந்நிய ஆதிக்கத்தின் கீழ் நாடு அடிமைப்பட்டிருந்த வேளையில், இந்திய நாட்டின் சமூகப் பொருளாதார நிலைகளைப் பற்றிச் சிந்தித்தவர் என்ற வரலாற்றுப் பெருமைக்குரியவராவார். அந்நிய ஏகாதிபத்தியத்தைத் தகர்த்திட வேண்டுமென்று பிரசங்கித்த அத்தகு தருணங்களில், இந்நாட்டு மக்களிடையே மண்டியிருந்த அறியாமை, பெண்ணடிமை, நிலப்பிரபுத்துவ ஆதிக்கம், தீண்டாமை அவலங்கள் ஆகியவற்றையும் அவர் சுட்டிக்காட்டத் தவறியதில்லை.

'இந்தியாவின் 'ஆத்மா' - கிராமங்களில்தான் உள்ளது என்பதையும், இந்த தேசம் கிராமங்களைப் பின்புலமாகக் கொண்டது; இதன் நாகரிகம் 'கிராமியம்' என்பதையும், அவர் திடமாக நம்பினார்; தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருந்தார். எனவேதான், அந்நியச் சுரண்டலின் கரணியமாய் பாழ்பட்டுப் போயிருந்த நம்முடைய பொருளாதாரத்தைச் 'சுய சார்புடையதாக' ஆக்கிட அவர் வழிகோலினார்.

அண்ணல் காந்தியடிகளின் பொருளியல் சிந்தனைகள் என்பது காலத்திற்கொவ்வாத வரட்டுச் சித்தாந் தமன்று. அது, 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' எனும் அசைக்கவொணா அடிப்படையைக் கொண்டதாகும். எனவே தான், அவர் மிகுந்து வலியுறுத்திய நிர்மாணத் திட்டங்களில் 'சர்வோதயம்' என்பதனை முழுமுதலாகக் கொண்டார். அனைவரும் பங்கேற்கின்ற, அனை வருக்கும் நலம் பயக்கின்ற, ஒரு சமுதாய அமைப்பு என்ற அடிப்படையிலேதான் அவர் சர்வோதயம் என்ற சொல்லைப் பிரயோகித்தார் என்றே கருதலாம்.

காந்தியடிகள் காணவிழைந்த சர்வோதயம் என்பது ஒரு தனிவகையான சிறப்பான குறைகளற்ற நிறைவான இலட்சியச் சமுதாயமாகும். எவ்வகை யான வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வு களுமற்ற, எல்லோரும் சமம் என்ற ஒரு புத்துலக அமைப்பையே அவர் விரும்பினார்.

நம்நாட்டில், பல்கிப் பெருகிக் கிடந்த கிராமங்களில், அதிலும் அதிக மக்கள் தொகையைக் கொண்டிருந்த நம்முடைய கிராமிய அமைப்பில், மனிதவளம் அதிகமிருந்தாலும், அவை உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. எனவேதான் பசியும் - பட்டினியும் நம்முடைய தேசிய சொத்துக்களாக மாறிவிட்டிருந்த அத்தகு அவலநிலையில், உழைப்பை ஒருமைப்படுத்திட அவர் விழைந்தார். உழைப்பு ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அவசியமான



ஒன்று, அதனை உடல் உழைப்பு என்றும், மூளை உழைப்பு என்றும் வேறுபடுத்த வேண்டியதில்லை. ஆக்கப்பூர்வமான வேளாண்மையில் ஈடுபடுவதும், கைத்தொழில்கள் செய்வதும், மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவை களை நிறைவு செய்யும் பணிகளாக இருப்பதால், இவையே உயர்ந்த தொழில்களாகக் கருதப்படவேண்டும்; இவை செழித்தால் நாட்டில் பற்றாக் குறையென்பது இருக்கவே இருக்காது என்பவைகளையே, 'சர்வோதய' அமைப்பின் இலட்சியங்களாகும் என அவர் பிரகடனப்படுத்தினார்.

உழைப்பு என்பது உற்பத்திக்கும் செல்வ வளத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் சக்திக்கேற்ப உழைக்க வேண்டும். தனி மனித வளர்ச்சி யென்பது, அது அவனோடு நின்று விடாது, சமுதாய வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகிறது. ஏனெனில், தனி மனித நலனும், சமுதாய நலனும் முரண்படுவதில்லை என்றே அண்ணல் காந்தியடிகள் நம்பினார். எனவேதான், சர்வோதயம் என்பது தனி மனித வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தருவதாக இருக்குமென்று அவர் வலியுறுத்தினார்.

சர்வோதயத்தின் கொள்கைகளில் ஒன்றாக, ஒவ்வொரு சிறிய சமுதாயமும், குக்கிராமும் தன்னிறைவு பெற்றிடல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. தனியாகக் கிராமங்கள் அல்லது கிராமங்கள் சேர்ந்த வட்டாரங்கள் தன்னிறைவு பெறுகின்ற பொழுது நாடு தன்னிறைவு பெறும்; அப்படித் தன்னிறைவு பெற்ற சமுதாயம் தற்சார்புடைய சமுதாயமாகவே இருக்கும் என்று அவர் நம்பினார்.

காந்தியடிகளின் சுதந்திரத்திற்கு முந்தைய இத்தகைய சிந்தனைகள் எல்லாம், அவருடைய வழிகாட்டுதலில் நாடு சுதந்திரம் பெற்றது என்றாலும், அவருடைய 'சர்வோதயச் சிந்தனைகள்' எந்த அளவிற்கு வெற்றி பெற்றன என்பது ஒரு கேள்விக்குறியாகவேதான் உள்ளது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருவது என்ற செயற்பாட்டில், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தூவி விடப்பட்ட தோற்றமே தென்படுகிறது. ஆனால், நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அடிப்படை வசதிகளை ஒருமுகப்படுத்திடும் அடிப்படையில், ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒரு ஊராட்சியைத் தேர்வு செய்து, அவ்வூராட்சியைச் சார்ந்த அனைத்து குக்கிராமங்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி,

கல்விக்கூடக் கட்டடங்கள், மருத்துவ வசதி, அத்தியாசியப் பொருட்களை வழங்கும் கடைகள், சாலை-வடிகால் பணிகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கிடும் வகையில், **அண்ணா மறுமலர்ச்சித் திட்டமெனும்** வழிகாட்டும் திட்டத்தை உருவாக்கியுள்ளார்.

கடந்த ஆண்டில் ரூ.192 கோடி செலவில் 212 ஊராட்சிப் பகுதிகளில், 3477 பணிகள் நடைபெற்றுள்ளன. இவ்வாண்டிலும், அதேபோன்று பணிகள் விரைந்து செயலாக்கம் பெறுகின்றன. காந்திய சிந்தனையில் தோன்றிய - தன்னிறைவு பெற்ற - கிராம சமுதாய அமைப்பெனும் - அன்று காந்தி கண்ட கனவு, இன்று **கலைஞரின் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தால்** நனவாகின்றதன்றோ?

காந்தியடிகள் உருவாக்க எண்ணிய, சர்வோதய சமுதாய அமைப்பில், தனிமனிதன் 'உணவுக்காக உழைப்பது' என்பது ஒரு புறம், ஆனால், அதே நேரத்தில், அவனது எஞ்சிய நேரத்தை, தொண்டு மனப்பான்மையுடன் சமுதாய வளர்ச்சிக்கும் உழைத்திடல் வேண்டும்; ஏனெனில் அப்பொழுது தான் தனிமனித வளர்ச்சியோடு அவன் வாழ்கிற அச்சமுதாயமும் தன்னிறைவு பெறும் என்பதை அவர் வலியுறுத்தத் தவறியதே இல்லை.

எங்காவது தனிமனிதன் சமுதாயத்தோடு முரண்பட்டால், அது 'சுயநலமாக' மட்டுமே இருக்க முடியும். தனிமனிதர்கள் சமுதாய நலனுக்காகத் தாங்களாகவே முன்வந்து தங்கள் நலனைத் தியாகம் செய்கின்ற பொழுதுதான் அந்தச் சமுதாயம் உயரமுடியும் என்பதே, சர்வோதய சமுதாயச் சிந்தாந்தமாக அறிவுறுத்தப்படுகிறது. தியாகம் கலந்த உடலுழைப்பு சமுதாயத்திற்காகச் செய்யப்படும்பொழுது சமுதாய வளர்ச்சிக்கு இது துணைபுரியும். எனவேதான், "எல்லோருடைய நன்மைக்காகவும், உடலுழைப்பு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றார் காந்தியடிகள்.

மேலும், சர்வோதய அமைப்பில், தனி மனிதனும் சமுதாயமும் சுதந்திரமான செயற்பாடுகளைக் கொண்ட அமைப்பாகவே இருக்கும். சமுதாயப் பஞ்சாயத்துக்கள் சமுதாய நீதியை நிலைநிறுத்தும். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஊர்ச்சபையின் துணையோடு திட்டமிட்டுக் கிராம வளர்ச்சிக்கு ஆவன மேற்கொள்ளும் என்று காந்தியடிகள் விவரித் துள்ளார்.

ஆனால், நாடு சுதந்திரமடைவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பாகவே காந்தியடிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட இந்தக் கிராம சுயசார்பு வளர்ச்சியென்ற சிந்தனை, நாடு சுதந்திர

> *ஏழை ஈடேற வேண்டும்;*
> *உரிமை பெற வேண்டும்;*
> *ஜாதி பேதம் ஒழிய வேண்டும்;*
> *ஒற்றுமை எல்லா மட்டத்திலும்*
> *மலர வேண்டும்.*
>
> **- காந்தியடிகள்**

மடைந்ததற்கு பிறகு எத்தகைத்தான பின் விளைவுகளை அல்லது தர்க்கத்தை ஏற்படுத்தியது என்று பார்த்தால், நாடு முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் பல்கிப் பரவிக் கிடந்தன. ஆனால், செயற்பாடுகளில் மக்களின் பங்கு - அதாவது காந்தியடிகளின் 'கிராமப் பஞ்சாயத்துக்கள்' ஊர்சபையின் துணையுடன் திட்டமிட்டுச் செயல்படுதல் என்ற சிந்தாந்தம் என்னவாயிற்று?

என்ற விடை பகர இயலா வினாக்களுக்கு விடைதான் - -

**கலைஞரின், 'நமக்கு நாமே'** - திட்டமாகும்.

பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந் தளித்திட்ட அதேவேளையில், கடந்த ஆண்டில் (1997-98) **கலைஞர்** அவர்களால், **நமக்கு நாமே திட்டம்,** இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மக்களாட்சி முறையில் ஒரு புதிய புரட்சிகர எத்தனிப்பாகும். அடிப்படை வசதிகளை உருவாக்குவதில், கிராமப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற அமைப்பு முறைகள் ஒருபுறம் இயங்குகின்றன. எனினும், இவைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும், வளர்ச்சிப் பணி அலுவலர்களும் திட்டங்களை இயற்றி வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்துகின்றனர். ஆனால், இதில் பொதுமக்களின் ஈடுபாடு என்பது முழுக்க முழுக்க இருக்கிறதா? என்று வினவினால், மக்களின் தேவைகளில் முன்னுரிமை என்ற நோக்கில் ஒரு சின்ன இடைவெளி இருப்பதை உணரமுடியும்.

அதனாலேயே, மக்களாட்சி முறைமையில், மக்களின் பங்களிப்பை உறுதிப்படுத்திடும் ஒரு புதிய எத்தனிப்பாக, **கலைஞர்** இத்திட்டத்தை அறிவித்தார். இதில், அந்தந்தப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகள், அவர்களாலேயே கிராம சபை அமைப்பில் முன்னிலைப்படுத்திட

> தன்பெண்டு தன்பிள்ளை சோறு
> வீடு சம்பாத்யம் இவையுண்டு
> தானுண்டென்போன் சின்னதொரு
> கடுகுபோல் உள்ளங்
> கொண்டோன், தெருவார்க்கும்
> பயனற்ற சிறிய வீணன்!
>
> – புரட்சிக் கவிஞர்

வாய்ப்பளிக்கப்படுகிறது; அவற்றை அவர்களே திட்டமிட்டு, செயற்படுத்திட முன்வருகின்ற ஒரு அரிய வாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இதன் மூலம், அக்கிராமத்திலுள்ள அனைவரும், ஏழை-பணக்காரர், படித்தவர்-கல்லாதார், பெரும்பான்மை-சிறுபான்மை, உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்ற எவ்வித வர்க்க வேறுபாடுமின்றி, அந்தஸ்து பேதமின்றி, திட்டங்கள் குறித்து வாதப் பிரதிவாதங்களை நிகழ்த்தி, ஏகோபித்த முடிவு எய்தப்படுகின்றது. இதன் மூலம் ஒரு யதார்த்தமான சுமூகமான மக்களாட்சிச் சூழல் உருவாகிட வழிகோலப் படுகிறது என்பதை உணர முடிகிறது.

மேலும், முன்னிலைப்படுத்தப்பட்ட திட்டம் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் எடுத்துரைக்கப் படுகிறது. மாவட்ட ஆட்சியர், அதனை, நீண்ட கால நோக்கில், அதன் சாத்தியக்கூறுகளை அணுகிப் பார்த்து, இதில் அரசின் பங்குத் தொகை என்ன? என்பதை அறிவிக்கிறார். எஞ்சியுள்ள தொகையை ஈடுகட்டும் பொறுப்பைக் கிராம சபையிடமே விட்டு விடுகிறார். மீண்டும் கிராம சபை கூட்டப்படுகிறது (மாவட்ட ஆட்சியரோ அல்லது அவரது பிரதிநிதியோ பங்கேற்கின்றனர்), அலசி ஆராயப்படுகிறது. 'பொருள் மிகுந்தவர் காசுகள் தாரீர்; அதுவுமற்றவர் உழைப்பினை நல்குவீர்' என்ற அடிப்படையில் முடிவெடுக்கப்படுகிறது; செயல் திட்டம் உருவாகிறது. பன்னெடுங்காலங்களாகப் பராமரிப்பின்றி விடப்பட்ட நீர்வரத்துக் கால்வாய்கள், பாழடைந்த மதகுகள், தடயமிழந்த கண்மாய்க் கரைகள், தூர்ந்துபோன ஏரிகள், இவைகளெல்லாம் புத்துயிர் பெறுகின்றன. மழை நீர் சேகரிக்கப்பட்டு உரிய முறையில் பாசனத்துக்குப் பயன்படுத்தப் படுகின்றன. இதே போன்று, மயானச்சாலைகள், பழுதுபட்ட பள்ளிக் கட்டடங்கள், பொது நூலகம், தொலைக்காட்சிப்பெட்டி அறை, பயணியர் நிழற்குடைகள் என்று எண்ணிலடங்காப் பணிகள் மக்களின் முழு ஈடுபாட்டில் உருவாக்கம் பெறுகின்றன. கடந்த ஆண்டில் மட்டும் 2,699 கிராமங்களில் ரூ.23 கோடியில், 3,664 பணிகள் நடைபெற்றுள்ளன. இதில் பொதுமக்களின் பங்களிப்பு ரூ.8 கோடியாகும். இவ்வாண்டில், அரசின் ஒதுக்கீடான ரூ.10 கோடியை அடிப்படையாக வைத்துப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன.

எனவே, காந்தியடிகளின் சர்வோதய சித்தாந்தத்தில் மிகுந்து வலியுறுத்தப்படும், அந்தந்தப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகளை, கிராம சபையே முன்னின்று தேர்வு செய்து, பங்கேற்று நடைமுறைப்படுத்தி 'தன்னிறைவடைதல்' என்ற உயரிய குறிக்கோள், இந்திய பூபாகத்தில் - தமிழகத்தில் மட்டுமே **'கலைஞரின் நமக்கு நாமே'** திட்டத்தின் மூலம் நிறைவெய்துகிறது என்பது எவராலும் மறுக்க இயலா ஒன்றன்றோ?

அண்ணல் காந்தியடிகள், தான் எதிர்பார்த்த சர்வோதய சமுதாயம் எப்படி இருக்க வேண்டும்? என்று அறிவிக்கின்ற பொழுது, 'எல்லா மக்களையும், பிறப்பால் வேறுபடுத்தக்கூடாது; செய்கின்ற தொழிலால் வேற்றுமைப்படுத்தக்கூடாது, எல்லோரும் சமம்' என்ற தாரக மந்திரத்தை உறுதிபடக் கூறுகிறார். ஆனால், எதார்த்த நிலையில் அக்காலச் சமுதாயத்தில் நிலவி வந்த ஜாதிய முறையை அவர் மிகுந்து சாடினார்.

'மிகவும் ஆழமாக வேரூன்றியிருக்கிற ஜாதி உணர்வு மக்களின் குருதியில் கலந்திருக்கின்றது. இதனைக் களையாமல் புதியதொரு சமுதாயத்தை உருவாக்க முடியாது' என்பதை அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

அதோடு மட்டுமல்லாது, தான் எதிர்பார்க்கின்ற சமத்துவ அமைப்பில், சமயங்கள் என்பது, 'தனிப்பட்ட மனிதர்களின் நம்பிக்கையையும், வாழ்க்கை முறையையும் ஒட்டி அமையும். ஆனால், பொது வாழ்க்கையில் சமயத்திற்கு இட மிருக்கக்கூடாது. அது **'சர்வசமய சமரசம்'** ஆக அமைய வேண்டுமென்றே பெரிதும் விரும்பினார். மேலும், ஒவ்வொரு சமயத்தினரும் மற்றைய சமயங்களைப் புரிந்து கொண்டு, 'சகிப்புத் தன்மையோடு விட்டுக் கொடுத்துச் சேர்ந்து வாழ வேண்டுமென்ற தனது அவாவை வெளிப்




படுத்தினார். ஆனால், அவர் விரும்பிய, அவர் எதிர்பார்த்த சமுதாய அமைப்பு சுதந்திரம் பெற்ற இந்தியாவில் அமைந்ததா? என்பது ஒரு கேள்விக்குறியாகவே தொக்கி நிற்கின்றது.

ஆனால், சுதந்திரம் பெற்ற இந்த 50 ஆண்டுகளில் சுதந்திரத் திருநாள் பொன்விழாக் கொண்டாட்டங் களினிடையே, இந்தியாவிலேயே, நம் முதல்வர் **கலைஞர்** மட்டும்தான். 'சமத்துவபுரம்' எனும் வழிகாட்டும் தத்துவத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார் என்றால், அது மிகையாகாது.

100 வீடுகளைக் கொண்ட, ஒரு அளவான அமைப்பாக அது விளங்குகிறது. அடிப்படை வசதிகள் அனைத்தையும் கொண்ட, 'தன்னிறைவு பெற்ற' மாதிரி கிராமங்களாக அவைகள் உருவெடுக்கின்றன. மேலும், சமத்துவபுரத்தினர், வருவாய் ஈட்டுகின்ற வகையில், அந்தந்தப் பகுதிக்கேற்ற வேளாண் சார் தொழில்கள் தொடங்கிடக் கடனுதவிகளும் வழங்கப்படுகின்றன.

எனவே, சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டின், நிலைத்த - நினைவாக உருவாக்கப்



பட்டுள்ள, **கலைஞரின் 'சமத்துவபுரங்கள்'** காந்தியடிகள் உருவாக்க விழைந்த, சாதி, சமய வேறுபாடற்ற ஒரு சமத்துவ அமைப்பாகவும், கிராமிய இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறிய, சர்வ சமய - இன ஒருமைப்பாட்டு மையமாகவும், வேளாண் சார் தொழில் தொடங்கிட (சுய வேலைவாய்ப்பாக) வாய்ப்பளிக்கப்படுவதால், காந்தியடிகள் காண விழைந்த அமைப்பாகவும் உருவாக்கப்பட்டுள்ளது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

''மக்களுக்கிடையில், பிறப்பாலோ - சாதி சமய வேறுபாட்டாலோ - பொருளாதார நிலையினாலோ, எவ்வகையிலும் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது; எல்லா மக்களும் ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் எனும் உணர்வுடன், இணைந்து சமநிலையில் வாழவேண்டுமென்பதே காந்தியடிகள் காண விழைந்த சர்வோதய சமுதாய அமைப்பாகும்.

மேலும், சர்வோதய சமுதாயம் பற்றி காந்தியடிகள் குறிப்பிடுகையில், ''அது, 'கிராமிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். ஏனெனில், கிராமிய அமைப்பு என்பது சிறியதாக இருப்பதால், எல்லோரையும், எல்லோரும் தெரிந்துவைத்து அன்பு பாராட்டுவார்கள். எனவே, அவர்களுக்கிடையே **'பிணக்கங்களுக்குப் பதில் இணக்கங்கள்'** உருவாக, இயல்பாகவே அதிக வாய்ப்பிருக்கிறது.

மேலே காணும், காந்திய சிந்தனை என்ற சமத்துவ இலக்கணத்திற்கு இலக்கியம் படைப்பதுதான், **கலைஞரின்** சமத்துவபுரம் திட்டமாகும். இந்த சமத்துவபுரம் ஒவ்வொன்றிலும், ஆதி-திராவிடர் களுக்கு 40, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 25, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 25, இதர பிரிவினர்களுக்கு 10 என்னும் அடிப்படையில்

ஆக, மேலே குறிப்பிட்டவாறு காந்திய சிந்தனைகளுக்கும் வடிவம் தரப்பட்டுள்ளது என்பதோடு, **பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்** காணவிழைந்த, சாதி பேதமற்ற அமைப்பு எனும் தத்துவத்திற்கும் உருக்கொடுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், **பேரறிஞர் பெருந்தகை அண்ணா** அவர்கள் காண விழைந்த, **'சாதிபேதமற்ற அதே நேரத்தில் வர்க்க பேதமற்ற, சமத்துவ அமைப்பு'** எனும் இலட்சியமும் ஈடேற்றப்பட்டுள்ளது. இவைகளெல்லாம், எதிர்கால வரலாற்றில் 'பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவுள்ள, **'கலைஞரின் சாதனை சகாப்தத்தில்'** மறுக்கவியலாச் சான்றுகளன்றோ? ★

# சமையல் எண்ணெயை மீண்டும் மீண்டும் காய்ச்சிப் பயன்படுத்தாதீர்கள்!

பலகாரங்கள் செய்வதற்கு ஒரு முறை காய்ச்சிய எண்ணெயை மறுபடியும் மறுபடியும் பயன்படுத்துவது, அந்த எண்ணெயில் புற்றுநோய் உண்டாக்கும் சிற்சில கூறுகளை உருவாக்கி, அதில் செய்யப்படும் உணவு வகைகளில் சேர்க்கிறது. இப்படிப்பட்ட புற்றுநோய்க் கூறுகள் ஒரு முறை எண்ணெயில் உருவானால், பிறகு ஆவியாகிக் காற்றில் கலவாமல் எண்ணெயிலேயே தங்கி அதில் செய்யப்படும் உணவு வகைகளையே கெடுக்கிறது.

புற்றுநோயைப் பற்றி நாம் ஒன்றும் அதிகமாக அறிந்துவிடவில்லை; ஆனால் இது ஒரு பயங்கர நோயாக உள்ளது. ஒவ்வோராண்டும் பல உயிர்கள் இந்நோயினால் பலியாகின்றன. கொழுப்பு மிகுந்த உணவுகளை உண்பது மற்றும் நச்சுத்தன்மையுள்ள பொருட்களின் பாதிப்பிற்கு உடலானது தொடர்ந்து ஆளாவது ஆகியவை புற்றுநோயை வர வைப்பவையாக உள்ளன. ஆனால் குடும்பத் தலைவிகள் பலர் சிக்கனம் செய்யும் எண்ணத்துடன் சமையல் எண்ணெயைத் திரும்பத் திரும்பக் காய்ச்சிப் பயன்படுத்துவதாலும் நமது சமையலறைகளிலும் புற்றுநோய் வேர் விடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

பலகாரம் செய்யக் காய்ச்சிய எண்ணெயை மீண்டும் மீண்டும் காய்ச்சிப் பயன்படுத்துவதனால், பாலிசைகிளிக் ஹைட்ரோ கார்பன்கள் (Polycyclic Hydrocarbons) போன்ற சிற்சில புற்றுநோய் விளைவிக்கும் அழிவுக் கூறுகள் எண்ணெயில் உருவாகி, நாம் உண்ணும் உணவு பண்டங்களில் ஊடுருவுகின்றன. வடை, போண்டா, பஜ்ஜி மற்றும் தின்பண்டங்களைச் செய்யக் காய்ச்சப்பட்டு மீதியான எண்ணெயை மீண்டும் மீண்டும் அதேபோன்ற பண்டங்கள் செய்யப் பயன்படுத்துவதனால் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நமது சமையலறைகளில் நடைபெறுகிறது. இந்தப் பாலிசைகளிக் ஹைட்ரோ கார்பன்கள் காற்றில் ஆவியாகி மறைவதில்லை. இவை ஒருமுறை உருவானால், எண்ணெயிலேயே தங்கி, அதில் செய்யப்படும் பண்டங்களைக் கெடுக்கின்றன.

இதுபோன்று அதிக தடவைகள் பயன்படுத்தப்பட்ட எண்ணெயை எலிகளுக்கு உணவாக அளித்துச் சோதித்தபோது, அவற்றின் வளர்ச்சி குன்றியது; சில எலிகள் இறந்தும் போயின.

வீடுகளிலும், உணவு விடுதிகளிலும் நடைபாதைக் கடைகளிலும் ஒரு முறை காயவைத்த எண்ணெயையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் பழக்கம் நடைமுறையில் இருந்துவருகிறது. வடை, போண்டா, பஜ்ஜி, பூரி, சமுசா போன்றவைகளைச் சுடுவதற்கு வாணலியில் முன்பு காய்ச்சிய எண்ணெயையே மீண்டும் மீண்டும் நாளொன்றுக்கு 4 மணி நேரத்திற்காவது காய்ச்சி உபயோகிக்கின்றனர்.

ஓரிருமுறை பயன்படுத்திய எண்ணெயை ஒதுக்கி வைப்பதில்லை; மாறாக, தீய்ந்த பண்டத் துணுக்கைகளை வடிகட்டி, மேலும் சிறிது புதிய எண்ணெயை ஊற்றி, மறுபடியும் அன்றைய பணியைத் தொடங்கி விடுகிறார்கள். இந்தப் பாலிசைகிளிக் ஹைட்ரோ கார்பன்கள் – காய்ச்சிய எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதனால் உண்டாகும் இதைப்போன்ற வேறு பொருள்களும் கூட – மிகக் குறைந்த அளவுகளில் துய்க்கப்பட்டாலும் (ஏற்கெனவே நன்கு காய்ச்சிய எண்ணெயுடன், புதிய எண்ணெயைச் சேர்த்து உணவுப் பண்டங்களைத் தயாரிக்கிறார்கள் அல்லவா?) அது கெடுதலற்றது என்று கூற முடியாது. ஏனெனில் இந்தப் பொருள்கள் புற்றுநோய் உண்டாக்கும் கூறுகளோடு (Carcinogens) உள்ளது என்று நிருபிக்கப்பட்டுள்ளது.

இப்படிக் காய்ச்சிய எண்ணெயில் உள்ள தீங்கு பயக்கும் பொருட்கள் எந்த அளவுக்கு இருக்கலாம் என்பது பற்றி விதிமுறைகள் எதுவும் இல்லை. எனவே, தின்பண்ட உற்பத்தியாளர்கள் இப்படிக் காய்ச்சிக் காய்ச்சி உபயோகிக்கும் எண்ணெயால் மக்களுக்கு உடல் ரீதியாக எவ்வளவு பாதிப்பு உண்டாகிறது என்பதைக் குறித்து அறிவதும் இல்லை, அக்கறை செலுத்துவதும் இல்லை.

நமது அரசுகளின் சமூக நலத்துறைகள் இப்படிப்பட்ட திரும்பத் திரும்பக் காய்ச்சி உபயோகப்படுத்தப்படும் எண்ணெய்களில் உள்ள உடல் நலக்கேடு பயக்கும் பொருள்களுக்குப் பாதுகாப்பான, குறைந்த பட்ச அளவு எதையாவது நிர்ணயிக்க வேண்டும். அதேபோல, தின்பண்டங்களை உற்பத்தி செய்பவர்களிடமும் உணவு விடுதிகளிலும் அடிக்கடி சோதனை செய்து அவர்கள் அளவுக்கு மீறிக் காய்ச்சிய எண்ணெயைப் பயன்படுத்தவில்லை என்று உறுதி செய்ய வேண்டும்.

**காய்ச்சிய எண்ணெயை மீண்டும் மீண்டும் காய்ச்சிப் பயன்படுத்தும் பழக்கமுள்ள குடும்பத் தலைவிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்! காய்ச்சிய எண்ணெய் அடர்த்தியாகவும் நிறம் கறுப்பாகவும் ஆனபிறகு மறுபடியும் பயன் படுத்தாதீர்கள்! - அது ஆபத்து!**

டாக்டர் ஏ.ஆர். என். துரைராஜ்

# காஞ்சிபுரத்தில் கைத்தறி மேம்பாடு

காஞ்சிபுரம் சரகத்தில் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தமிழக அரசு பல்வேறு முன்னோடி நலத் திட்டங்களைக் கடந்த இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்களுக்கான மைய அரசின் நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதில் மற்ற மாநில அரசுகளுக்குத் தமிழ்நாடு அரசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

ஏழைக் கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், தறிக்கூடத்துடன் இணைந்த வீட்டு வசதித்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், வயது முதிர்ந்தோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற திட்டங்களைத் தமிழ்நாடு அரசு இத்துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது.

### இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், கட்டுமர மீனவ ஆண்கள் மற்றும் பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும், கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கும் இத்திட்டத்தைத் தொடர்ந்து அரசு செயல்படுத்தி வருகிறது. 1996–97ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தின் மூலம் 62 ஆயிரம் மீட்டர் கைத்தறிச் சேலைகளும், 2.34 இலட்சம் மீட்டர் கைத்தறி வேட்டிகளும் உற்பத்தி செய்யப்பட்டு 'கோ-ஆப்டெக்ஸ்' மூலம் வழங்கப்பட்டது. இவற்றின் மதிப்பு முறையே ரூ. 12.40 இலட்சமும், ரூ.39.08 இலட்சமும் ஆகும்.

1997–98ஆம் ஆண்டிற்கு 9.11 இலட்சம் மீட்டர் கைத்தறி சேலைகள், மதிப்பு ரூ.1.81 கோடியும், 1.61 இலட்சம் மீட்டர் கைத்தறி வேட்டிகள், மதிப்பு ரூ.26.95 இலட்சமும் மற்றும் 16.57 இலட்சம் மீட்டர் விசைத்தறி வேட்டிகள், மதிப்பு ரூ.2.42 கோடியும் உற்பத்தி செய்யக் குறியீடு வழங்கப்பட்டு உள்ளது. இதனால், இச்சரகத்தில் உள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

### தொகுப்புச் செறிவுத் திட்டம்

தமிழகக் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதையும் குறிக்கோளாகக் கொண்டு மத்திய அரசின் செறிவுத் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்கூடங்களுக்கு மின் வசதி அளித்தல், தறி உபகரணங்கள் வழங்குதல், ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம், நடைமுறை மூலதனத்திற்கு விளிம்புத்தொகை மற்றும் புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல் போன்ற திட்டங்கள் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவி மத்திய மாநில அரசுகள் 50:50 என்ற அடிப்படையில் வழங்குகின்றன.

இதில், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத்தொகை வழங்குதல் மற்றும் தொழிற்கூடம் கட்டுதல் போன்றவற்றிற்கு

சென்னை, கிண்டியில் தீரன் சின்னமலை திருவுருவச் சிலையினை
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 4.10.1998 அன்று திறந்து வைத்தார்.
விழாவில் திரு.ஜி.கே. மூப்பனார், அமைச்சர்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி,
திரு.என்.கே.கே. பெரியசாமி, பொங்கலூர் திரு. நா. பழனிச்சாமி, திரு. வ. முல்லைவேந்தன்,
மற்றும் திரு. கோவை செழியன், திரு.எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. ஞானசேகரன்,
திரு. ஆர். வீரமணி, திரு.ஏ.எம். இராஜா, திரு. திருச்சி தேவராஜன்,
டாக்டர். வீ. இராமகிருஷ்ணன், பேராசிரியர் வி. கலைமணி, திரு.எஸ். பத்மநாபன்,
திரு.எம். தியாகராஜன், திரு. எம். பாலசுப்ரமணியம், ஆகியோர் பங்கேற்றனர்.
திரு.எஸ். இராஜரெத்தினம், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

100% நிதியும் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. 1996-97 ரூ.5.40 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 1997-98ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.41.57 இலட்சமும், மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. 1998-99ஆம் ஆண்டிற்கும், ரூ.7.925 இலட்சம் பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. மேலும், நெசவாளர் நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பளிப்புக்காக 7 ஆழ்துளைக் கிணறுகள் நெசவாளர்கள் வாழும் பகுதியில் குடிநீர் வசதிக்காக அமைக்கப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டிற்கு இதுவரை 20 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**நெசவாளர் வீடு கட்டும் திட்டம்**

நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1997-98ஆம் ஆண்டிற்குக் காஞ்சிபுரம் சரகத்திற்கு 33 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீடு ஒன்றுக்கு அரசு மானியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| மத்திய அரசு மானியம் | ரூ. 18,000 | ரூ. 20,000 |
| மாநில அரசு மானியம் | ரூ. 5,000 | ரூ. 5,000 |
| 'ஹட்கோ' கடனுதவி | ரூ. 25,000 | ரூ. 25,000 |
| பயனாளியின் பங்குத் தொகையாக | ரூ. 3,000 | ரூ. 3,000 |
| | ரூ. 51,000 | ரூ. 53,000 |

மேலும், மாநில அரசு 1998-99ஆம் ஆண்டு முதல் மாநில அரசு மானியத்தை ரூ.5,000லிருந்து ரூ.7,000 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாண்டில், இத்திட்டத்தின் கீழ் இச்சரகத்திற்கு 20 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

நெசவாளர் கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 1975-76ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நெசவாளர் உறுப்பினர்கள் பங்காக 8 காசுகள், மத்திய/மாநில அரசுகள் தலா 4 காசுகள் வீதம் தனது பங்காக வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் இச்சரகத்தில் 8001 பயனடைந்து வருகிறார்கள்.

3.1.96 முதல் இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் வயது வரம்பினை 58லிருந்து 60ஆக அரசு உயர்த்தி உள்ளது. இத்திட்டத்தின் ஆயுள் காப்பீட்டுத் தொகையினை 18.9.96 முதல் 15,000லிருந்து 25,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்ட உறுப்பினர் எவரேனும் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், அவருடைய வாரிசுதாரருக்குக் காப்பீட்டுத் தொகையாக ரூ.25,000-ம் பெற்றுப் பயன் அடையலாம். இச்சரகத்தில் 1996-97ல் ரூ.3.30 இலட்சம் பெற்று வழங்கப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில் ரூ.5.05 இலடசம் வழங்கப்பட்டுள்ளது.

**நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்கள் - தொடர்ந்து 5 ஆண்டுகள் உறுப்பினராக உள்ள எந்த ஒரு நெசவாளரும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75 விழுக்காடு சராசரி உற்பத்தி செய்திருப்பின் அவர் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 58 வயதுக்குள் இறக்க நேரிட்டால், அவர் மரணமடைந்த நாளிலிருந்து மனைவி/கணவன்/வயது வந்த மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள்/விதவை மருமகள்/தாயார்/தகப்பனார் போன்ற அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் யாரேனும் ஒருவருக்கு மாதம்தோறும் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இச்சரகத்தில், இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், 27 உறுப்பினர்களின் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

நம்மிடையே சேரியும் கூடாது. அக்கிரகாரமும் ஆகாது. மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்.

\- அண்ணா

**நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

தமிழக முதல்வரால் கலைஞரால் அறிமுகப் படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் தொடர்ந்து செயல்பட்டு 60 வயது பூர்த்தியடைந்த நெசவாளர்களுக்கு மாதம் ரூ.150 வீதம் ஓய்வூதியமாக 1.4.97 முதல் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 132 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு விரைவில் ஓய்வூதியம் கிட்டிட எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தள்ளுபடி மானியம்**

இச்சரகத்தில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யும் கைத்தறி பட்டு மற்றும் பருத்தி ரகங்களுக்கு அரசால் 1996-97ஆம் ஆண்டிற்கு ரூ.1.12 கோடி மானியமாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1994-95 மற்றும் 1995-96ஆம் ஆண்டில் நிலுவையாக உள்ள தொகை ரூ.1.60 கோடி விடுவிக்கப் பட்டது. இதனால் கைத்தறி நெசாவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1.42 கோடி மானியம் ஒப்பளிப்புக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களின் துயர் போக்க ஆண்டு முழுவதும் கைத்தறித் துணிகளுக்கு அரசால் தள்ளுபடி மானியம் அளிக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் அரசின், மேலே காணும் நெசவாளர் நலம் காக்கும் திட்டங்களால், நெசவாளர்களின் நீண்ட காலத் துயரங்கள் துடைக்கப்பட்டு அவர்களது வாழ்வில் வசந்தம் மலரத் தொடங்கியுள்ளது என்பது உண்மையே.



# இலக்கியப் பரிமாற்றத் துறையில் எனது அனுபவங்கள்

– சரஸ்வதி ராம்நாத்

இலக்கியப் பரிமாற்றம் என்ற சொல், காதிற்கு இனிமையாக இருப்பதுபோல் தோன்றுகிறது. மொழிபெயர்ப்பு என்றதும் வாசகர்களின் முகத்தில் ஏற்படும் அலட்சியமான ஒரு பாவத்தை நான் பலமுறை கண்டிருக்கிறேன். அதுபோல் மொழிபெயர்ப்பாளரும் 'ஐயோ பாவம்' என்று இரண்டாம்தரப் பிரஜையாகவே கருதப்பட்டு வருகின்றார். இந்த உண்மையை மறைக்கவோ, மறுப்பதற்கோ இல்லை. எழுத்தாளர்களிடையே கூட இதே மனோபாவம்தான் நிலவுகிறது.

இன்று எனது 73 ஆவது வயதில் வாழ்க்கையின் கடைசித் திருப்புமுனையில் நின்று, நான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது எனக்கே வியப்பாகவும் உள்ளது. தமிழிலும் இந்தியிலுமாகக் கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட நூல்களை என்னால் இத்தகைய எதிர்மறையான சூழலில் மொழிபெயர்ப்புச் செய்ய முடிந்திருக்கிறது. நூலாக வெளிவராத சிறுகதைகளும் (இருமொழியிலும்) கட்டுரைகளும் உள்ளன.

இத்துறையில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது எப்படி? கூடத்துத் தாழ்வாரத்துக் கம்பத்தில் சாய்ந்தவாறு மாலைவேளைகளில் வாசக சாலையிலிருந்து கொணர்ந்த பங்கிம் சந்தர் சட்டர்ஜி, சரத் சந்திரர், தாகூர், ரமேஷ் சந்திரதத், பிரேம்சந்த் போன்றவர்களின் நூல்களைச் சிறுமியான நான் ரசித்துப் படித்துக் கொண்டிருப்பேன். விளையாட்டுகளில் எனக்கு அதிக நாட்டம் இருந்ததில்லை. அக்காலத்தில் 1935ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து ஆனந்த விகடன், கலைமகள் போன்ற பத்திரிகைகளில் மொழி பெயர்ப்புக் கதைகள், நாவல்கள் தொடர்களாக வெளிவந்து கொண்டிருந்தன. பைரவி, குமுதினி, அமூல்யன் என்ற பல பாத்திரங்கள் இன்றும் நினைவில் பசுமையாக உள்ளனர். அந்நாளில் வெளிவந்த பல்வேறு மொழிகளின் மொழிபெயர்ப்பு நூல்கள், தமிழுக்கு வளமும், சுவையும் கூட்டின. சாளரங்கள் திறக்கப்பட்டு, நம் நாட்டின் பல்வேறு மொழிகள், பிரதேசங்களின் கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், அவர்களது எண்ணங்களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முடிந்தது மட்டுமல்ல, நமது கற்பனை வீச்சும், சிந்தனையின் பரந்தநோக்கும் படைப்பின் தளமும்கூட செழிப்புற்றன.

காண்டேகரின் நூல்கள், திரு. கா.ஸ்ரீ ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தன. த.நா. குமாரசாமி, த.நா.சேனாதிபதி போன்றவர்கள் வங்க மொழியிலிருந்து தாகூரின் படைப்புகளையும் பல்வேறு வங்க எழுத்தாளர்களின் படைப்பாற்றலையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தது மகத்தான பணியாகும். இத்துறையில், குமுதினி, தஞ்சம்மாள், அம்புஜம்மாள், பிஸ். கிருஷ்ணசாமி, ரா.வீழிநாதன்,

சௌரி போன்ற பல சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளனர். மொழிபெயர்ப்பு நூல்களினால், தமிழ் மொழிக்கோ, இலக்கிய வளர்ச்சிக்கோ – பாதிப்பு ஏற்பட்டது என நான் கருதவில்லை. மாறாகப் பல்வேறு மொழியினரின் படைப்பாற்றல்களும், கற்பனைத்திறனும் படைப்பாளிகளுக்கு நல்லதொரு வளமான தாக்கத்தையே ஏற்படுத்தின. க.நா.சு. மேலை நாட்டின் பல்வேறு மொழிகளிலிருந்து நாவலாசிரியர்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நான் சிறுமியாக இருந்தபோது படித்த கார்க்கியின் "தாய்" என்ற நாவல் என்னுள்ளே ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய அருமையான பல மொழிபெயர்ப்பு நூல்கள்தான் என்னை இத்துறைக்கு ஈர்த்தன என நினைக்கிறேன். மேலும் அந்நாளில் காந்திய சிந்தனைகளும், சுதந்திரப் போராட்டமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. கல்கி எழுதிய மகாத்மா காந்தியின் சுயசரிதை, ஏட்டிக்குப் போட்டி, சாரதையின் தந்திரம் எனப் பல நூல்கள் எனக்குக் கிடைத்தன. நான் இந்தி மொழி கற்கத் துவங்கியது எனது பதின்மூன்றாம வயதில். தேசிய உணர்வும் எழுத்தாற்றலும் மிக்க ஒரு பெண்மணிதான் (திருமதி சம்பூரணம் அம்மாள் கிருஷாங்கினியின் தாய்) எனக்கு இந்தி கற்பித்தார். என்னுள்ளே அம்மொழியில் நான் படித்த பாடங்களும் நூல்களும் தேசிய உணர்வைத் தூண்டி விட்டன. இந்தியா நமது நாடு, மொழிகள் பல இருந்தாலும் நாம் யாவரும் ஒருநாட்டு மக்கள் என்ற உணர்வு தலைதூக்கியது.

**மொழி பெயர்ப்பு நூல்களினால், பல்வேறு மொழியினரின் படைப்பாற்றலும், கற்பனைத் திறனும் படைப்பாளிகளுக்கு நல்லதொரு வளமான தாக்கத்தையே ஏற்படுத்தின.**

கவிபாரதியின் பாடல்கள் தேசிய விழிப்புணர்வை மேலும் தூண்டிவிட்டன. கற்பதற்கு எளிதான மொழியான இந்தியின் மூலம் காந்திய சிந்தனையின் அலைவீச்சின் தாக்கத்திற்குட் பட்டவளாக நான் சிறந்த எழுத்தாற்றல் மிக்க படைப்பாளிகள், கவிஞர்களின் படைப்புகளைப் படித்து ரசித்தேன்.

ராஜா, மகாராஜாக்கள் பற்றிய அசதாரணமான கற்பனையுடன்கூட கதைகளிலிருந்து சாதாரண மக்களின் இன்ப துன்பங்கள், கிராமத்து விவசாயிகள் ஏழை எளியோரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் படைப்புகள் இந்தி மொழியில் தோன்றலாயின. தமிழ் மொழியிலும் பல்வேறு இந்திய மொழிகளில் இத்தகைய படைப்புகளின் மொழிபெயர்ப்பாக வெளிவந்து கொண்டிருந்தன. நான் படித்து என்னுள் பாதிப்பை ஏற்படுத்திய படைப்புகளை எனது தாய்மொழியில் தர வேண்டும் என்ற உந்துதல், என்னை மொழிபெயர்ப்பாளராக்கியது எனலாம். முதலில் 1940லிருந்து சிறுகதைகள், கட்டுரைகள் என நான் பல்வேறு சிறு இலக்கியப் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருந்தேன். இரண்டொரு மொழிபெயர்ப்பு கதைகளும் வெளிவந்தன. மெல்ல மெல்ல மொழிபெயர்ப்புகள் பத்திரிகைகளில் வெளிவருவது குறைந்துகொண்டு வந்தன. ஒரு விதமான தேக்கநிலை ஏற்பட்டுவிட்டது.

நம் நாட்டு மக்கள், தமது தாய்மொழியைத் தவிர நம் நாட்டுப் பிறமொழி இலக்கியங்கள், படைப்பாளிகள், கவிஞர்களைப் பற்றி அறிந்துகொள்வது மிகவும் அவசியம். நமது அண்டை மாநில எழுத்தாளர்கள், கவிகள், அவர்களது படைப்புகள் பற்றியே அறிந்துகொள்ள முயற்சிக்காது நாம் உலக இலக்கியங்களைத் தமிழில் கொணரவேண்டும் எனக் கூறுவது வருந்துவதற்குரியது. மொழிபெயர்ப்பை இரண்டாம் தரமான படைப்பு என்று கூறும் நாம், உலக இலக்கியத்தை ஆங்கில மொழி பெயர்ப்புகளின் மூலமாகவே பெரும்பாலும் படித்து வருகிறோம். அவற்றின் மேன்மையை, படைப்பாற்றலைக் கண்டு வியக்கின்றோம். இன்றைய சூழலில் இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு, இன்றியமையாதது என்பதை நாம் உணரவேண்டும். இலக்கியப் பரிமாற்றத்தின் மூலம்தான் இது சாத்தியம். நான் இந்தி மொழி மூலம்தான் பல்வேறு மாநில மொழிகளிலிருந்து சிறந்த படைப்புகளைத் தமிழில் தந்துள்ளேன். நம் நாட்டு மக்களின் உடை, உணவு, மொழிகளில் வேற்றுமைகள் இருந்தாலும் குமாவூனிலிருந்து, கன்னியாகுமரி வரை, கலாச்சாரப் பண்பாட்டுத்தளம் ஏறக்குறைய ஒன்றானதுதான் என்பதை அந்த இலக்கியங்களைப் படிக்கும் போது உணர்ந்து நான் வியந்ததுண்டு.

இந்திய மொழிகளில் மராத்தி, குஜராத்தி, சிந்தி, உருது போன்ற மொழிகள் இந்தியுடன் நெருங்கிய தொட்பு கொண்டவை. வங்க மொழியைப் பொறுத்த வரையில் இந்திய மறுமலர்ச்சி இலக்கியத்தில் அதன் பாதிப்பு பெருமளவு உள்ளது. இந்தி மொழியில் உருது மொழிச் சொற்கள் மற்றும் வடமொழிச் சொற்கள் தாராளமாக இடம்பெறுவதால் அதன் மொழிவளம் ஆழமும், விசாலமும் கொண்டுள்ளது. பேச்சு மொழிகள் எல்லா மொழிகளிலுமே வேறுபடுகின்றன. தமிழ்மொழி ஒன்றைத் தவிர, இந்திய மொழிகள் யாவுமே தேவநாகிரிலிபியை யொட்டியே அமைந்துள்ளன. மெய் எழுத்துக்களின் நான்கு வேறுபட்ட ஒலிகள், மற்றும் இலக்கணம், வாக்கிய அமைப்புகள் கூட்டெழுத்துக்களின் அமைப்பில் அதிக வேறுபாடுகளில்லை எனலாம். தமிழ்மொழியைப் பொறுத்தவரை அடிப்படையிலேயே மெய் எழுத்துக்கள் ஒன்றுதான். உச்சரிப்பில் வேறுபாடுகள் இயல்பாய் ஏற்படுகின்றன. தேவநாகிரிலிபியில் தமிழ்

கூட்டெழுத்துக்களை எழுதுவது சிரமம். குறிப்பாக ஏ,வு,ற்,று போன்ற ஒலிக்குறிகளைக் கொண்ட எழுத்துக்களை (உதாரணமாக – போயிற்று) எழுத இயலுவதில்லை.

இந்தியிலுள்ள வளமான பதச்சேர்க்கைகள் (சொலவடைகள்) பதப்பிரயோகங்கள், வாக்கிய அமைப்புகள் தமிழிலிருந்து முற்றும் வேறுபடுவதால் தமிழிலிருந்து இந்தியில் மொழிபெயர்க்கும்போது சிரமம் தருகின்றன. இதில் ஒரு விஷயம் என்னை வியக்கச் செய்கிறது. பழமொழிகள் இந்திய மொழிகள் யாவற்றிலும் கிட்டத்தட்ட ஒரேமாதிரித்தான் உள்ளன. இலேசான வேறுபாடுகள்தான்.

தமிழ், இந்தி மொழிப்பெயர்ப்பாளர் என்ற முறையில் சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியில், தாய்மொழி இந்தி அல்லாத எழுத்தாளர்கள் நிறையவே உள்ளனர். எனினும் அவர்கள் வட நாட்டிலேயே வாழ்வதால் பேச்சுமொழிகள், வட்டாரமொழிகளில் ஓரளவு பரிச்சயமுள்ளவர்களாக இருப்பதால் இந்தி இலக்கியத்தில் அவர்களது படைப்புகள் தாரளமாக ஏற்கப்படுகின்றன. அவர்களுக்குக் கிடைக்கும் ஆதரவும் வரவேற்பும் தென்னாட்டினருக்கு குறிப்பாகத் தமிழ்மொழி பெயர்ப்பாளர்களுக்குக் கிடைப்பதில்லை. மலையாளம், கன்னடம், தெலுங்கிலிருந்து நிறைய நூல்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. கன்னடத்தின் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், மலையாள மொழியின் படைப்புகள், கவிதைகள் இந்தி மொழியினருக்கு அறிமுகமாகியுள்ளன. தமிழைப் பொறுத்த வரையில், இத்தகைய நிலையில்லை எனலாம். எனது முயற்சியில் மூன்று சிறுகதைத் தொகுதிகள், அகிலனின் 'பெண்' பெரியசாமித்தூரன் அவர்கள் தெகுத்த 'பாரதிய கட்டுரைகளின் சுருக்கமான 'கவிபாரதியின் வலிதறிபந்த்' என்ற தொகுப்பு, கு.சின்னப்பாரதி அவர்களின் 'சர்க்கரை' எனும் நாவல் மற்றும் தமிழின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் சிறுகதைகள், 'ஆதவனின் சிறுகதைகள்', 'கம்பராமாயணம்', இந்திய நதிகளைப் பற்றிய நூல்களான கங்கை, யமுனை, கோதாவரி, காவேரியின் கதைகள்ஆகியவை தமிழிலிருந்து நான்மொழிபெயர்த்து வெளிவந்துள்ள நூல்களாகும். இவையாவும் புத்தக வடிவில் வெளிவந்துள்ளன.

சமீபத்தில் இளைய தலைமுறை கவிஞர்களின் கவிதைகளை மொழிபெயர்ப்புகள், 'சமகாவீன் பாரதிய சாகித்யா' என்னும் இரண்டு மாதத்திற்கொருமுறை சாகித்ய அகாதமி வெளியிடும் இலக்கியப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. சமதாவீன் பாரதீய சாகித்திய மிகத்தரமான இலக்கியப் பத்திரிகை. இதில் இந்திய மொழிகளின் சிறுகதைகள், கவிதைகள், நூல் விமர்சனங்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனப்பலவும் வெளியாகி, நமக்கு இந்திய மொழி இலக்கியங்களை ஓரளவு பரிச்சயப்



படுத்துக்கின்றன. இது மிகப் பாராட்டத்தக்க முயற்சி. இத்துறையில் இன்னும் நிறைய உற்சாகமும் ஆர்வமும் கொண்டவர்கள் பணியாற்ற முன்வரவேண்டும். அரசின் ஆதரவும் இதற்குத் தேவை. இந்தியில் மொழிபெயர்க்கப்படும் படைப்புகளுக்குத் தக்க ஆதரவும் வரவேற்பும் தரக்கூடிய சூழல் தமிழ்நாட்டிலோ வடநாட்டிலோ தற்சமயம் இல்லை என்பது வருந்தத்தக்கது.

வெளியீட்டாளர்கள், பத்திரிக்கையாளர்களின் ஆதரவு இன்றியமையாதது. பஞ்சாபி, உருது, மராத்தி போன்ற மொழிகளின், இந்தி எழுத்தாளர்களின் படைப்புகளிலே அவரவர்களுடைய தாய்மொழியின் பாதிப்புகள், கொச்சையான வார்த்தைகள், வசவுகள், மரபுச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. தமிழ் மொழி பெயர்ப்பாளர்களின் இந்தி மொழியாக்கம் என்று வரும்போது, வெளியீட்டாளர்கள் – பத்திரிகை ஆசிரியர்களிடம் ஒருவித மாற்றாந்தாய் மனோபாவம் வந்துவிடுகிறது. இலக்கியத் துறையில் இலக்கியப் பரிமாற்றம் விரிவான, சகஜமான முறையில் நடைபெற்று ஒருமைப்பாட்டு உணர்வு மேலிட வேண்டுமெனில் தமிழ் – மற்றும் இந்தி இலக்கிய வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ளவர்களின் மனோபாவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

மொழிபெயர்ப்புத்துறை விரிவானது, இத்துறையில் ஆற்றவேண்டிய பணி நிறையவேயுள்ளது. இராமயணத்தை எடுத்துக் கொண்டால் நம் நாட்டின் பல்வேறு மொழிகளிலும் இராமனின் கதையைக் கவிஞர்கள் தங்களது கற்பனைத் திறன், படைப்பாற்றலின் மூலம் அந்தந்த மாநிலம், மொழியின் இயல்பு, சூழல், கலாசாரம் பின்னணிக்கேற்ப மிக அற்புதமாகவே படைத்துள்ளன.

இந்திய மொழிகளிலுள்ள இராமாயணக் கதைகளைத் தமிழுக்குத் தரவேண்டும் என்ற ஆவல் எனக்குண்டு. அதற்கான வசதிகளும் வாய்ப்பும் கிட்டவில்லை. தமிழிலிருந்து சிறந்த படைப்புகள் இந்தி மொழியில் வெளிவர வேண்டும். இதன் மூலம் பல்வேறு இந்திய மொழிகளிலும் அவைகள் வெளிவந்துவிடும். நேஷனல் புக்டிரஸ்ட், சாகித்திய அகாதமி, ஞானபீட பிரசுராலயம் ஆகியவை இத்துறையில் மிகச் சிறப்பான பணி ஆற்றிவருகின்றன. மொழி பெயர்புத்துறையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாகப் பணியாற்றி வருகின்றன. மொழிபெயர்ப்பாளர்களுக்கும் ஆதரவும், உற்சாகமும் கிட்டுகின்றது. தரமான படைப்புகள் வெளிவருகின்றன. சிறந்த மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்க சாகித்திய அகாதமி அதற்கெனத் தனியான அமைப்பை ஏற்படுத்தி பயிற்சி தருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இந்தியில் வெளியாகும் மொழிபெயர்ப்புகளுக்கு நூலகங்களின் ஆதரவு தேவை. இல்லையெனில் பிரசுரகர்த்தர்கள், தமிழ் மொழிபெயர்ப்புகளை வெளியிடத் தயங்குகின்றனர். பிறமொழிகளில் இந்நிலை இல்லை. மொழியாக்கம் செய்ப்படும் நூல்கள் கல்லூரிப் பாடத்திட்டங்களில் இடம் பெறுகின்றன. நூலகங்களில் வாங்கப்படுகின்றன என்ற நிலையில் பிரசுரகர்த்தர்களும் உற்சாகமாக அந்நூல்களை வெளியிட முன்வருகின்றனர். தமிழைப் பொறுத்தவரையில் நாம் ஒதுங்கிப் போவதால் பின்தங்கிப் போய்விடுகிறோம். மொழிபெயர்ப்புகளின் மூலம்தான் தமிழ் இலக்கியம், படைப்பாளிகளின் சிறந்த படைப்புகள் இந்திய மக்களை அடைய முடியும். அறிமுகமும், பரிச்சயம் இன்றி நமது இலக்கியவளம் பற்றிப் பிறர் எவ்வாறு அறிந்துகொள்ள இயலும்? இலக்கியப் பரிமாற்றத்திற்கு மொழிபெயர்ப்பு ஒரு பாலமாகும். இதன் மூலம் புதிய பார்வை, புதிய கண்ணோட்டம், கற்பனைகளை வளரும் ஆக்கபூர்வமான இப்பணியில் ஈடுபட்டுள்ள மொழிப் பெயர்ப்பாளர் என்ற முறையில் மொழி பெயர்ப்புப் பற்றி எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

படைப்பிலக்கிய மொழி பெயர்ப்புகளைத்தான் நான் இதுவரை செய்துள்ளேன். மொழி பெயர்ப்பாளருக்கு இருமொழிகளின் புலமையும், எழுத்தாற்றலும், இருத்தல் அவசியம்: ஏன் எனில் மொழிபெயர்ப்பும் ஒரு விதத்தில் படைப்பாக்கம்தான். பார்க்கப்போனால் ஓர் விதத்தில் மூல ஆசிரியராக மறுபிறவி எடுக்கவேண்டும். மூல ஆசிரியரின் நடை, மொழி, ஆற்றல், அங்கதம், ஆழ்ந்த கருத்துக்கள் எனப் பலவற்றையும் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். மூலநூல் எழுதப்பட்டுள்ள பின்னணி, அதன் கலாசாரம், பழக்க வழக்கங்களைப் பற்றியும், தெரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியம். மூல நூலிருந்து பிறழாமல் கவனத்துடன் அதன் முழு அழகையும், மொழி பெயர்ப்பு மூலம் வெளிப்படுத்தவேண்டும். நாமே சுதந்திரமாகச் செயல்பட்டு மூல ஆசிரியர் கருத்துக்களை, வாசகங்களை மாற்றி எழுதிவிடுவது மிகவும் தவறு. மூல நூலை அடியொற்றிச் சொல்ல வேண்டும். அதன் கருத்துக்களை, உள்வாங்கிக் கொண்டு அதேநடையில் முடிந்தவரை அதே சொற்களில் தருவதுதான் மொழியாக்கத்தின் சிறப்பாகும். இசையில் ஒரு ரிதம் இருப்பதுபோல் ஒரு படைப்பிலும் அதன் சூழல், கட்டுக்கோப்பு, பாத்திர அமைப்பு ஆகியவற்றில் ஒரு தாளக்கட்டு இருக்கும். அது குலையாமலிருந்தால் தான் வாசகர்களுக்கு மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படும். ரசிப்பும், சுவையும் கூடும்.

ஒருமொழிபெயர்ப்பாளர் தனது கற்பனைத் திறனையோ, சொல்லாற்றலையோ, வெளிப்படுத்த மொழிபெயர்ப்பை ஒரு சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. கத்திமுனையில் நடப்பது போன்ற எச்சரிக்கையுடன் மொழியாக்கம் செய்யவேண்டும். நம் விருப்பம் போல் 'ஃப்ரீ டிரான்ஸ்லேஷன்' செய்ய முற்பட்டால் பாவம் மூல ஆசிரியர் காணாமல் போய்விடுவார். மொழிபெயர்ப்பாளர் தனது தனித்திறமையை வெளிப்படுத்தும் ஆர்வத்தைக் குறைத்துக்கொண்டு மூல படைப்பையொட்டி தனது



படைப்பாற்றலை வெளிப்படுத்தும் பொழுதுதான் நல்லதொரு வெற்றகரமான மொழிபெயர்ப்பு உருவாகிறது.

மொழியைப் பொறுத்தவரையில் எந்த மொழியில் மொழி பெயர்க்கிறாமோ, அம்மொழியின் இலக்கணம், இயல்புக்கேற்ப நாம் எழுதலாம். ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. குறிப்பிட்ட சர்ந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை வெளிப்படுத்தும் உத்வேகம், அல்லது உணர்ச்சிக்கேற்ப அதன் அர்த்தமும், பாவமும் மாறும் என்பதையும் மனதிற்கொண்டு எளிமையான இயல்பான நடையில் மூலத்தின் கருத்துச் சிதைந்துவிடாமல் மொழி பெயர்ப்பதில்தான் ஒரு மொழிபெயர்ப்பாளரின் திறமை வெளிப்படும். கவிதைகளின் மொழிபெயர்ப்பில் பின்னும் ஆழ்ந்த திறமையும், கவித்துவம் நிறைந்த சொல்லாட்சியும் தேவைப்படுகிறது. தற்சமயம், உரையாடல்களைப் பேச்சுமொழியில், பொது மொழியில் தரலாம் என்றதொரு கருத்துப் பேசப்படுகிறது. இதில் எனக்கு அவ்வளவாக உடன்பாடில்லை. கடினமான இலக்கியநடை தேவையில்லை. எளிய சொற்களில் சாதாரணமான பேச்சு மொழிநடையை மூல ஆசிரியர் பயன்படுத்தியிருந்தால், அதை அப்படியே மொழி பெயர்த்துத் தரலாம். எல்லா மொழிகளிலுமே பேச்சு மொழி, வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடும். மூலநூலின் உரையாடல்களை ஒரு மொழி பெயர்ப்பாளர் தனது வட்டார மொழியில் தரமுற்பட்டால் மூல நூலின் அமைப்பும் கட்டும் குலைந்துவிடுவது மட்டுமல்ல. ஏனைய வட்டாரத்து மக்களுக்குப் புரியாமலும் போய் விடலாம். மூல ஆசிரியர் வட்டார மொழியில் எழுதியிருந்தால் நாமும் அவ்வாறே மொழிபெயர்க்கலாமே தவிர, பொதுவாக எல்லோருக்கும் படித்ததும் புரியக்கூடிய பழகு தமிழில் எழுதுவதுதான் சிறந்தது.

முடிவாக – இத்துறைக்கு எழுத்தாளர்கள் ஈர்க்கப்படாமல் போவதற்குரிய காரணங்களையும் உங்கள் முன் வைக்கிறேன். மொழிபெயர்ப்புக்கு இலக்கிய உலகில் அதற்குரிய இலக்கிய அந்தஸ்து இன்னமும் தரப்படாமலிருக்கிறது. மொழிபெயர்ப்பு நூல்களுக்கு அது எத்தனைச் சிறந்ததாகப் பயனுள்ளதாக இருந்தாலும், பரிசுகளோ பாராட்டுகளோ தரப்படுவதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் தமிழில் மொழி பெயர்ப்பாளருக்குக் கூலி தரப்படும் நிலை மாறவேண்டும். அவர்களது எழுத்தாற்றலுக்கு உரிய மரியாதையும், ஊதியமும் அளிக்கப்பபட்டால்தான் இளம் மொழிபெயர்ப்பாளர்கள் ஆர்வத்துடன் இத்துறையில் ஈடுபடுவார்கள். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு இத்துறையில் ஆர்வமும், இலட்சிய நோக்கும், பிடிப்பும் இருந்தால் நாற்பத்தைந்து வருடமாக இன்றும் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறேன். ஆனால் இந்நிலை மாறவேண்டும். மொழிபெயர்ப்புகளுக்கு வளமான எதிர்காலம் அமையவேண்டும். தமிழுக்கு நான் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை பல்வேறு மொழிகளிலிருந்து தந்துள்ளேன். இவற்றில் சமீபத்தில் வெளியான இந்தியப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள், 'இந்தியச் சிறுகதைகள்', இந்திய நாடகங்கள்', 'மகாபரதத்தில் பெண்ணீயம்' (நந்தகிஷோர் ஆச்சார்யாவின் இரு இந்தி நாடகங்களின் தொகுப்பு) அக்கேஞாவின் 'நமக்கு நாமே அன்னியர்கள்' – 'பிரேம்சந்திரன்' 'கோதானம்' எனக்கு மிகுந்த மனநிறைவைத் தந்த நூல்களாகும். ●

# நூல் நயம்

### நிழல் தேடும் மரங்கள்

ஆசிரியர் : மரிய தெரசா

விற்பனை உரிமை : 39, 6–வது தெரு,
வடக்கு செகந்நாதன் நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை–600 049.

பக்கம் : 132 விலை ரூ.25

'கவியாக்கிய இயற்கைக்கு இத்தொகுப்பும், இறைவனுக்குத் தானும் அர்ப்பணம்' என்ற முன்னறிவிப்போடு உள்ள நூல் இது. 'என் மனம் ஓர் புல்லாங்குழல்; உன் நினைவுக்காற்று என் நெஞ்சைத் தொட்டு ஆனந்த கீதம் இசைக்கிறது' – போன்ற இனிக்கும் புதுக்கவிதைகள் பல புதுமையான அட்டைப் படத்தோடு இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன.

### சிறந்த பேச்சாளர்கள்

ஆசிரியர் : மா.சு.சம்பந்தன்

வெளியிட்டோர் : மணிவாசகர் பதிப்பகம்
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை–600 108.

பக்கம்:80 விலை ரூ.11

தமிழகம் எவ்வளவோ சிறந்த பேச்சாளர்களைக் கண்டிருக்கிறது. ஆனால், சிலருடைய சொற் பொழிவுகளே மக்களிடையே எழுச்சியை அல்லது விழிப்பு உணர்ச்சியை உண்டாக்கியுள்ளன. திரு.வி.க., ச.சோமசுந்தர பாரதியார், பெரியார், ரா.பி. சேதுப்பிள்ளை, ஔவை சு. துரைசாமி, கி.ஆ.பெ., அண்ணா, முத்துராமலிங்கத் தேவர், ப. ஜீவானந்தம், ம.பொ.சி. ஆகியோர் அவ்வகையில் பெற்றிருந்த திறம்பற்றித் தெரிவிக்கும் அரிய நூல் இது.

### கவிதைகள்

ஆசிரியர் : கவிஞர் வே. கபிலன்,

விற்பனை உரிமை : பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை–600 004.

பக்கம் : 184 விலை : ரூ.35

பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட முத்துமுத்தான கவிதைகள் இந்நூலில் அணி செய்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லுவதானால் 66 மரபுக் கவிதைகள் கொண்ட தேன்கூடையாக அக்கவிதைகள் உள்ளன. முத்தமிழ் வளர்த்தோர், வரலாற்றில் வாழ்வோர், இயற்கை, கவிஞரின் மனஎழுச்சி ஆகியவை கவிதைகளின் சொற்கள்தோறும் சுடர் விடுகின்றன.

### ஈழத்துக் கலை இலக்கிய நினைவுகள்

ஆசிரியர் : சிலோன் விஜயேந்திரன்

வெளியிட்டோர் : சோனம் பதிப்பகம்,
243, டி.எச். ரோடு,
திருவல்லிக்கேணி,
சென்னை–600 005.

பக்கம்128 விலைரூ.30

'சாவிற்றமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பர் தமிழ் மணந்து வேகவேண்டும்' என்ற இலங்கைக் கவிஞர் க. சச்சிதானந்தன் வழி நடப்பவர் இவர் என்பதைத் தெளிவுற எடுத்துக்காட்டுகிறது இந்நூலும், நடையும். 1951ல் ஈழத்தில் பள்ளிக்குச் செல்லத் தொடங்கியது முதல் – கலை, இலக்கிய ஆர்வலராக வளர்ந்து – 1978ல் தமிழகத்திற்கு வந்து காலூன்றியது வரையான தன் வரலாற்று நூலாக இதை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர். பல கலைஞர்கள், தமிழறிஞர்கள் ஆங்காங்கே தலை நீட்டுகிறார்கள்.

### உயிர் உறவு

ஆசிரியர் : கவிஞர் பூவை அமுதன்

வெளியிட்டோர் : கலையமுதம் பதிப்பகம்,
142, இரண்டாம் தெரு,
பாஸ்கர் காலனி,
சென்னை–600 092.

பக்கம் : 168 விலைரூ.40

சுவையூறும் எண்சீர் விருத்தங்களைக் கொண்டே புனையப்பட்டுள்ள காப்பிய நூல் இது. கருப்பொருள் என்ன தெரியுமோ? இதுவரை சிறுகதைகளாக, புதினங்களாக, தொடர்கதைகளாக, நாடகங்களாக வெல்லாம் பலரும் சொல்லி யிருக்கிறார்களே? அந்த 'எயிட்ஸ்' நோய்தான் இக்காப்பியத்தின் மைய இழை. அனேகமாக இந்த வகையில் இது முதல் நூலாக இருக்கலாம். நோய் பற்றியதெனினும் கவிதைச் சொற்களில் நெய் மணக்கிறது.

### வாழ்த்துவோம் வணங்குவோம்

ஆசிரியர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

வெளியிட்டோர் : சங்கீதா பதிப்பகம்,
14/2 பீட்டர்ஸ் காலனி,
சென்னை–600 014

பக்கம் : 198 விலை ரூ.32

உவமைக் கவிஞர் சுரதா, கலைமாமணி மன்னர் மன்னன் அணிந்துரைகளோடு வெளியிடப் பட்டுள்ள வெல்லத் தமிழ்க் கவிதை நூல் இது. மரபுக் கவிதைகள், சந்தப் பாக்கள் எல்லாமே சந்தனத் தமிழில் படைக்கப்பட்டுள்ளன. தமிழார்வலர்களுக்கு இந்த நூல் ஒரு நல்ல இன்சுவை விருந்து.

–'இந்திரன்'

மருத்துவம்:

# குழந்தை மருத்துவமும் சிகிச்சையும்

டாக்டர் பி.பாலசுப்பிரமணியன்

குழந்தைகளின் நோயின் தன்மையினை மருத்துவரே முழுவதும் அறிந்ததாக வேண்டி இருப்பதால் குழந்தைகளுக்கு மருத்துவம் செய்வது என்பது மிக அரிய மருத்துவக்கலையாகும்.

இதற்கு மிகுந்த திறனும் அனுபவமும் வேண்டும். எனவேதான், மிகப் பழங்கால மருத்துவத்திற்குக் குழந்தை மருத்துவத்தினைத் தனியாகப் பிரித்து அமைத்துள்ளனர். குழந்தை மருத்துவ மனைகள் பல தனிப்படவும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக மருத்துவத் துறையில் நான்கு படிகள் அமைகின்றன. நான்கு படி முறைகளை, நான்கு ஆண்டுகள் மருத்துவக் கல்வியாக அமைத்துக் கற்பித்து பட்டம் வழங்கி வருகிறார்கள்.

★ என்ன நோய் என்பதை அறிதல் முதல்படி

★ நோய் வந்ததன் காரணம் என்ன என்பதைக் கண்டறிதல். அடுத்தபடி.

★ நோயின் காரணம், அதன் தன்மையைப் போக்குவதற்கான வழிமுறைகள், மருத்துவமுறைகள் நிதானித்தல்.

★ எடுத்த முடிவிற்கு ஏற்ப நோயாளி வயது, தற்போது உள்ள நிலை, மருந்து கொடுத்தல் அதன் சக்தி, அது செய்யும் செயல் போன்றவற்றை ஆய்ந்து அளிப்பது; குழந்தை நோய்களுக்கும் இவை பெரும்பான்மையாகப் பொருந்தும் உணவு, உண்ணும் வயது வராத குழந்தைகளாயின் பாலூட்டும் தாயின் உணவே அடிப்படையாகும். நோய்க்கு காரணங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- பரம்பரையாக உள்ள உடற்கூறுபாடு.
- உணவில் ஏற்படும் ஊட்டச்சத்தின் குறைபாடு.
- அதிக சத்துள்ள உணவை அளவிற்கு மீறி உண்டு போதிய உழைப்பு இன்றி இருத்தல்.
- குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்ணாமை.
- தொற்றுநோயாக வருவன சில வகைகள்.
- ஈ, கொசு, கரப்பான், பேன், நீர்க் கிருமிகள் போன்றவற்றால் ஏற்படும் நோய்கள் பல.
- காற்றோட்டமின்மை.
- மல சிக்கல்.
- மிதமிஞ்சிய காரம், உப்பு, இனிப்பு போன்ற காரணங்கள்.
- திடீர் பருவநிலை மாற்றம் ஏற்படுவதால் தோன்றும் அறிகுறி தன்மைகள்.

**இவ்வாறு சில காரணங்களும் குழந்தை நோய்களுக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது.**

**குழந்தை நோய்கள் என்று ஏறத்தாழ இருநூற்று முப்பது உள்ளன. இதனைப் பதினொரு வகையாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளதை நினைவுகொள்ள வேண்டும். பதினொரு வகை நோய்ப் பிரிவுகள் சிலவற்றைக்**



குறிப்பிட்டு உள்ளேன். அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். அவை கிரந்தி நோய், கரப்பான் நோய், மாந்தம், கணம், சுரம் வாயு, நாமுள், குன்மம், நவமூலம், இவற்றுள் கிரந்தி இரண்டு வகையாகவும் தோசம் 25 வகையாகவும், கரப்பான் 18 வகையாகவும், மாந்தம் 21 வகையாகவும் கணம் 21 வகையாகவும் சுரம் 12 வகையாகவும் பிரித்துக் கூறப்பட்டு உள்ளதை நினைவுகூர விரும்புகின்றேன்.

### கிரந்தி நோய்

செம்மை – கிரந்தி என்பது மேக நோயைக் குறிக்கும். இது சிவந்த நிறத்தோடு வரும். இந்நோய் உடல் முழுவதும் பரவுவதாலும், கொப்புளங்கள் சில தோன்றி இது செந்நிறத்தில் கிரந்தியாகும். இதே போலக் கருமை நிறத்தில் தோன்றும் நோயைக் கருங்கிரந்தி என்பர். இது சிறு சிறுபான்மையாகவே தோன்றும்.

### மருத்துவம்

வெளி உபயோகத்திற்குச் சிறு செருப்படை எண்ணெய் அல்லது தினேசவல்லாதி தைலம் பயன்படுத்தலாம். (மருத்துவரின் ஆலோசனைப்படி பயன்படுத்த வேண்டும்).

### தோசம்

தோசம் என்பது தொடுதல் என்று பொருள்படும். கை, கால், உடல் முதலிய உடலுறுப்புகளால் தொடுதல், கண்ணாலாகிய பார்வையில் தொடுதல், நிழல் போன்று ஊறுகளால் தொடுதல் என்ற வகையில் தொடுதல் நிகழும், மாதவிடாய் ஆகிய குளித்த பெண்தேரை போன்றவற்றால் குழந்தைத் தொடப்படுமாயின் தோசம் தாக்கும். கண் திருஷ்டி தோசம் கூறுவது இந்தத் தோசமுறையைச் சார்ந்தது ஆகும். இவற்றிற்கு நேரில் கவனித்து மந்திரித்துத் தோசம் நீக்க திரிதோச மாத்திரை (குளிகை) தரவேண்டும்.

### கரப்பான் நோய்

கரப்பான் என்பது ஒரு வகைப் புண். முதலில் தோல் கருத்து, அந்நோய் மிகுந்து ஏற்படுத்துவது கரப்பான் எனப்படுகிறது. இதனால் புண், தடிப்பு வெடிப்பு, நீர்க்கசிவு, போன்றவை தோல் கருமை அடையும் ஒரு வகைக் கரப்பான் கடி என வழங்கப்படுகிறது.

### மருத்துவம்

வெளி உபயோகமாக அருகன்புல் தைலம் அல்லது கரப்பான் தைலம் பூசலாம் (External Use)

### சுரம்

உடம்பில் மேலேயே சுர் என வீசும் உஷ்ணத் தன்மையை சுரம் (காய்ச்சல்) என்பார்கள். இது உடலை வெதுப்பி வருத்தும் செயல் கொண்டதாகும். (Fever)

### மருத்துவம்

1. பிரம்மானந்த பைரவ மாத்திரை
2. குங்குமப்பூ மாத்திரை
3. கஸ்தூரி மாத்திரை சீரக கசாயத்தில் தரலாம்.

### தகுந்த மருந்துகள்

குழந்தைகளுக்கு எளிதில் செரிக்கக் கூடியவையுமாகிய மருந்துப் பொருள் பயன்படக்கூடிய ஓமம், சீரகம், மிளகு, தேன், மல்லி, பூண்டு, பால், மஞ்சள், வசம்பு, கஞ்சி போன்ற உணவுப் பொருள் – மருத்துவரின் ஆலோசனைப்படி தரவேண்டும்.


குழந்தை வளர்ச்சிக்குப் பயன்படும் ஏலம், கசகசா, கடுக்காய் தோல், துளசி, கஸ்தூரி, குங்குமப்பூ, கோஷ்டம், சாதிக்காய், திப்பிலி, மாசிக்காய் முதலியனவும் மருத்துவர் சொல்லும் அளவில் தரவேண்டும். □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை–600 002. தொலைபேசி : 568926/568927/564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HT

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



